# உயர் கல்வித் துறை

## கொள்கை விளக்கக் குறிப்பு
## 2017 – 2018

### மானியக் கோரிக்கை எண். 20

**கே.பி. அன்பழகன்**
உயர் கல்வித் துறை அமைச்சர்

©
தமிழ்நாடு அரசு
2017

# பொருளடக்கம்


| வ. எண். | தலைப்புகள் | பக்கங்கள் |
|---|---|---|
| 1. | முன்னுரை | 1–8 |
| 2. | தொழில்நுட்பக் கல்வி | 9–23 |
| 3. | கல்லூரிக் கல்வி | 24–36 |
| 4. | பல்கலைக்கழகங்கள் | 37–90 |
| 5. | தமிழ்நாடு ஆவணக் காப்பகம் | 91–94 |
| 6. | தமிழ்நாடு மாநில உயர்கல்வி மன்றம் | 95–98 |
| 7. | தேசிய உயர்கல்வித் திட்டத்திற்கான (RUSA) மாநில இயக்குநரகம் | 99–102 |
| 8. | அறிவியல் நகரம் | 103–108 |
| 9. | தமிழ்நாடு அறிவியல் தொழில்நுட்ப மையம் | 109–121 |
| 10. | தமிழ்நாடு அறிவியல் தொழில்நுட்ப மாநில மன்றம் | 122–134 |
| 11. | தமிழ்நாடு மாநில தொழில்நுட்பக் கல்வி மன்றம் | 135–137 |
| 12. | தமிழ்நாடு மாநில உருது கழகம் | 138 |

`

# கொள்கை விளக்கக் குறிப்பு

# மானியக் கோரிக்கை எண்.20 – உயர்கல்வி

# 2017 – 18

## 1. முன்னுரை

**தாமின் புறுவது உலகின் புறக்கண்டு**
**காமுறுவர் கற்றறிந் தார்.**

**(திருக்குறள் 399)**

**1.1.** இளைஞர்களுக்கு தரமான கல்வி வழங்குவதில் கவனம் செலுத்தி இந்தியாவிலுள்ள முன்னேறிய மாநிலங்களில் ஒன்றாக தமிழ்நாடு திகழ்கிறது. தேசிய மொத்த மாணவர் சேர்க்கை விகிதமான 24.5 சதவிகிதத்தை விட அதிகமாக தமிழக மொத்த மாணவர் சேர்க்கை விகிதம் (GER) 44.3 சதவிகிதமாக உள்ளது. மனித வளர்ச்சி குறியீட்டினை உயர்த்தவும், மாநிலத்திலுள்ள அனைத்து தரப்பினரும் பயன்பெறும் வகையில் குறிப்பிடத்தக்க அளவில் புதிய உயர்கல்வி நிறுவனங்களின் எண்ணிக்கையை அதிகரிக்கவும் தொலைநோக்கு திட்டம் 2023 வழிவகை செய்கிறது. அனைத்து தரப்பினரையும் உள்ளடக்கி (Inclusive) சம

`

வாய்ப்பளிக்க (Access) உயர்கல்வித்துறை விழைகிறது. இதனைச் செயலாக்க, 21 அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகள், 16 அரசு பலவகை தொழில்நுட்பக் கல்லூரிகள், 4 அரசு பொறியியல் கல்லூரிகள் மற்றும் 24 பல்கலைக்கழக உறுப்புக் கலை மற்றும் அறிவியல் கல்லூரிகள் கடந்த 6 ஆண்டுகளில் தொடங்கப்பட்டுள்ளன.

**1.2.** மத்திய மனிதவள மேம்பாட்டு அமைச்சகத்தின் தேசிய உயர்கல்வி நிறுவனங்களின் பல்கலைக்கழக தரவரிசை 2017–இல், உயர்நிலையில் உள்ள 100 பல்கலைக்கழகங்களில் இத்துறையின் நிர்வாகக் கட்டுப்பாட்டிலுள்ள எட்டு மாநில பல்கலைக்கழகங்கள் இடம் பெற்றுள்ளன. இப்பல்கலைக் கழகங்கள் தரத்தில் மேம்பட்டிருப்பதுடன், மத்திய மனிதவள மேம்பாட்டு அமைச்சகத்தால் நிர்ணயிக்கப்பட்ட ஐந்து அம்ச வரையறைகளான - (a) கற்பித்தல், கற்றல் சார்ந்த வளங்கள் (teaching, learning and resources), (b) ஆராய்ச்சி மற்றும் தொழில்சார் பயிற்சி (research and professional practice), (c) பட்டமளிப்பின் விளைவுகள் (graduation outcomes), (d) எல்லை உள்ளடக்கல் தன்மை (outreach and inclusivity) மற்றும் (e) வெளியுலகத்தின் கருத்து (கல்வி நிறுவனத்தைப் பற்றிய) (perception)

`

ஆகியவற்றினை எட்டியுள்ளன. மேலும், அவ்வமைச்சகத்தின் கல்லூரிகளுக்கான NIRF தரவரிசை 2017ல், உயர்நிலையில் உள்ள 100 கல்லூரிகளில் தமிழ்நாட்டைச் சேர்ந்த 37 கல்லூரிகள் இடம் பெற்றிருப்பது குறிப்பிடத்தக்க ஒன்றாகும்.

**1.3.** உயர்கல்வித் துறையில் பின்வரும் துறைகள் / நிறுவனங்கள் உள்ளன:

- தொழில்நுட்பக் கல்வி இயக்ககம்
- கல்லூரிக் கல்வி இயக்ககம்
- தமிழ்நாடு ஆவணக் காப்பகம் மற்றும்

  வரலாற்று ஆராய்ச்சித்துறை
- தமிழ்நாடு மாநில உயர்கல்வி மன்றம்
- தேசிய உயர்கல்வித் திட்டத்திற்கான (RUSA)

  மாநில இயக்குநரகம்
- அறிவியல் நகரம்
- தமிழ்நாடு அறிவியல் தொழில்நுட்ப மையம்

`

- தமிழ்நாடு அறிவியல் தொழில்நுட்ப மாநில மன்றம்

- தமிழ்நாடு மாநில தொழில்நுட்பக் கல்வி மன்றம்

- தமிழ்நாடு மாநில உருது கழகம்.

மேலும், பின்வரும் கல்வி நிலையங்கள் உயர்கல்வித் துறையின் கீழ் செயல்பட்டு வருகின்றன:

| | |
|---|---|
| மாநில பல்கலைக்கழகங்கள் – 10 கலை மற்றும் அறிவியல், 1 தொழில்நுட்பம், 1 ஆசிரியர் கல்வியியல், 1 திறந்தநிலை | 13 |
| கலை மற்றும் அறிவியல் கல்லூரிகள் - கீழ்திசைக் கல்லூரிகள், சமூகப் பணிக் கல்லூரிகள், உடற்பயிற்சி கல்லூரிகள், உறுப்புக் கல்லூரிகள் உள்பட | 772 |
| கல்வியியல் கல்லூரிகள் | 734 |
| பொறியியல் கல்லூரிகள் | 584 |
| பலவகை தொழில்நுட்பக் கல்லூரிகள் | 518 |

**1.4.** உயர்கல்வி பயில விரும்பும் இளைஞர்களை ஊக்குவிக்கும் வகையில் அரசு பலவகை தொழில்நுட்பக்

`

கல்லூரிகள் மற்றும் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் கட்டணச் சலுகை, பொறியியல் கல்லூரிகளில் முதல் தலைமுறை பட்டதாரிகளுக்கான கல்விச் சலுகை உள்ளிட்ட பல்வேறு திட்டங்களை உயர்கல்வித் துறை செயல்படுத்தி வருகிறது. இச்சலுகைகள் பொருளாதாரத் தடைகளை நீக்கி, உயர்கல்வி பயில வாய்ப்பு நல்குவதுடன், மாணவர் சேர்க்கை விகிதத்தில் நிலையான முன்னேற்றத்திற்கு ஏதுவாக உள்ளன.

**1.5.** உயர்கல்வித் துறை மேற்கொண்டுள்ள பின்வரும் நடவடிக்கைகள் உயர்கல்வித் தரம் மேம்பட வித்திடுகின்றன :

- கல்விசார் பாடத்திட்ட மேம்பாட்டு பிரிவுகள் தோற்றுவித்தல்
- காணொலி காட்சி வசதியுடன் கூடிய திறன் வகுப்பறைகளை ஏற்படுத்துதல் (smart classrooms)
- அயல்மொழி சோதனைக் கூடங்களை ஏற்படுத்துதல்
- தகவல் தொடர்பு தொழில்நுட்பத்தின் மூலம் கற்பித்தல் / கற்றலை மேம்படுத்துதல்

`

- மென்திறன் மையங்களை உருவாக்குதல்
- காப்புரிமை (Patent) பதிவு செய்ய அறிவுசார் சொத்துரிமைப் பிரிவு (IPR Cells) நிறுவுதல்
- ஆராய்ச்சி திறன் மேம்படுத்துதல்
- கருத்துத் திருட்டினைத் தடுத்தல்
- வெளிநாட்டு கூட்டிணைவுகளின் மூலம் ஆராய்ச்சி மற்றும் வளர்ச்சியை ஊக்குவித்தல்
- வளர்ந்துவரும் நவீனத் துறைகளில் தனிச்சிறப்பு மையங்கள் நிறுவுதல்
- கல்வி நிறுவனங்கள் தொழில்துறையுடன் ஒருங்கிணைந்து செயல்பட வழிவகுத்தல்
- மாநிலத்திலுள்ள உயர்கல்வி நிறுவனங்களின் வளங்களை எண்ணியலாக்குதல்.

**1.6.** முன்னாள் குடியரசுத் தலைவர் டாக்டர் ஏ.பி.ஜெ. அப்துல் கலாமின் நினைவாக அறிவியல், மானுடவியல் வளர்ச்சிக்கு பங்களித்தவர்கள் அல்லது

`

மாணாக்கர்களின் நலனுக்காக பாடுபட்டவர்களுக்கு உயர்கல்வித் துறை **2015** ஆம் ஆண்டு முதல் ஒவ்வொரு ஆண்டும் விருதினை வழங்கி வருகிறது. இவ்விருது, சான்றிதழ், ரொக்கப்பரிசு ரூ. **5** இலட்சம் மற்றும் **8** கிராம் எடையுள்ள தங்கப்பதக்கம் கொண்டதாகும்.

**1.7.** உயர்கல்வித் துறை, பல செறிவான செயல்திறன் நுட்பங்களால், வளர்ச்சிப் பாதையில் செம்மையுற்று, உலகத்தரம் வாய்ந்த உயர்கல்வி நிறுவனங்கள் இணைந்து செயல்படத் தூண்டும் வகையில், அயராது செயல்பட விழைகிறது.

`

## நிதி ஒதுக்கீடு 2017 – 18

மானியக் கோரிக்கை எண்.20, உயர்கல்வித் துறை என்ற தலைப்பின் கீழ் ரூ. **3680.39** கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

| **வ. எண்** | **துறை தலைமையின் பெயர்** | **வரவு செலவு ஒதுக்கீடு ரூபாய் (கோடியில்)** |
|---|---|---|
| 1. | உயர்கல்வித்துறை, தலைமைச் செயலகம் | 4.71 |
| 2. | கல்லூரிக் கல்வி இயக்ககம் | 2125.79 |
| 3. | தொழில்நுட்பக் கல்வி இயக்ககம் | 1115.80 |
| 4. | பல்கலைக்கழகங்கள் | 321.78 |
| 5. | ஆவணக் காப்பகம் மற்றும் வரலாற்று ஆராய்ச்சி ஆணையரகம் | 10.05 |
| 6. | தமிழ்நாடு அறிவியல் தொழில்நுட்ப மாநில மன்றம் | 1.95 |
| 7. | தமிழ்நாடு அறிவியல் தொழில்நுட்ப மையம் | 4.55 |
| 8. | அறிவியல் நகரம், சென்னை | 1.24 |
| 9. | தமிழ்நாடு மாநில உயர் கல்வி மன்றம் | 94.34 |
| 10. | தமிழ்நாடு மாநில தொழில்நுட்பக் கல்வி மன்றம் | 0.18 |
| **மொத்தம்** | | **3680.39** |

`

## 2. தொழில்நுட்பக் கல்வி

**2.1** தமிழ்நாடு மாநிலம் தோற்றுவிக்கப்பட்ட பிறகு, தொழில்நுட்பக் கல்வி பயிலகங்களை நிறுவுதல் மற்றும் கண்காணித்தல் ஆகிய பணிகளை மேற்கொள்ளும் பொருட்டு, 1957 ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 14 ஆம் நாள் தொழில்நுட்பக் கல்வி இயக்ககம் உருவாக்கப்பட்டது. இவ்வியக்ககம், புதிய பாடப்பிரிவுகளை உருவாக்குவதற்கும், பாடத்திட்டங்களை வகுக்கவும், தொழில்நுட்பக் கல்வி மற்றும் ஆராய்ச்சி மேம்பாட்டிற்கான பணிகளை செய்வதிலும் முக்கிய பொறுப்பு வகிக்கிறது. தமிழக அரசு, தொழில்நுட்பக் கல்வியில் பொறியியல் பட்டம் மற்றும் பட்டய நிலையில் தொழில்நுட்பக் கல்வியை மேம்பாடு அடைய செய்வதற்கான புதிய கொள்கைகளை வகுத்து வருகிறது. கீழ்க்கண்ட விவரப்படி, தற்போது தமிழ்நாட்டில் 584 பொறியியல் கல்லூரிகளும், 518 பலவகை தொழில்நுட்பக் கல்லூரிகளும் செயல்பட்டு வருகின்றன:

**பொறியியற் கல்லூரிகளின் எண்ணிக்கை- 584**

| அரசினர் பொறியியற் கல்லூரிகள் | அரசு உதவி பெறும் பொறியியற் கல்லூரிகள் | அண்ணா பல்கலைக் கழக துறைகள் மற்றும் உறுப்புக் கல்லூரிகள் | சுயநிதி பொறியியற் கல்லூரிகள் |
|---|---|---|---|
| **10** | **3** | **17** | **554** |

**பலவகை தொழில்நுட்பக் கல்லூரிகளின் எண்ணிக்கை -**

**518**

| அரசு பலவகை தொழில்நுட்பக் கல்லூரிகள் | அரசு உதவிபெறும் பலவகை தொழில்நுட்பக் கல்லூரிகள் | இணைவு பெற்ற பலவகை தொழில்நுட்பக் கல்லூரிகள் | சுயநிதி பலவகை தொழில்நுட்பக் கல்லூரிகள் | சுயநிதி உணவக மேலாண்மை மற்றும் சமையல் தொழில்நுட்ப பயிலகங்கள் |
|---|---|---|---|---|
| **46** | **34** | **5** | **418** | **15** |

`

## 2.2 சாதனைகள் மற்றும் முயற்சிகள் (2011 – 12 முதல் 2016 – 17 வரை)

### 2.2.1. இந்திய தகவல் தொழில்நுட்ப நிறுவனம், (IIIT), ஸ்ரீரங்கம், திருச்சிராப்பள்ளி

இந்திய தகவல் தொழில்நுட்ப நிறுவனம் திருச்சிராப்பள்ளியில், பொது மற்றும் தனியார் கூட்டமைப்பு திட்டத்தின் கீழ், மத்திய அரசு, மாநில அரசு மற்றும் தொழில் நிறுவன பங்குதாரர்களுடன், ரூ. 128 கோடி மதிப்பீட்டில் இலாப நோக்கமற்ற பொது நிறுவனமாக துவங்கப்பட்டுள்ளது.

இந்திய தகவல் தொழில்நுட்ப நிறுவனம், மாண்புமிகு முன்னாள் தமிழக முதலமைச்சர் அவர்களால் 12–2–2014 அன்று துவக்கி வைக்கப்பட்டது.

### 2.2.2. 4 அரசு பொறியியல் கல்லூரிகள் துவங்குதல்

2012 – 13 மற்றும் 2013 – 14ஆம் ஆண்டுகளில் 4 அரசு பொறியியல் கல்லூரிகள் துவங்கப்பட்டுள்ளன. இக்கல்லூரிகளுக்கான கட்டடங்கள் கட்டுவதற்கு ரூ. 244.60 கோடியும் மற்றும் தொடராச் செலவினங்களுக்கு ரூ. 26.91 கோடியும் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. மேற்குறிப்பிட்ட 4 அரசு பொறியியற் கல்லூரிகளுக்கும்

`

776 ஆசிரியர் மற்றும் ஆசிரியரல்லாத பணியிடங்கள் தோற்றுவிக்கப்பட்டுள்ளன.

### 2.2.3. 16 அரசு பலவகை தொழில்நுட்பக் கல்லூரிகள் துவங்குதல்

2013 – 14ஆம் ஆண்டில் 11 அரசு பலவகை தொழில்நுட்பக் கல்லூரிகள் துவங்கப்பட்டுள்ளன. கட்டடங்கள் கட்டுவதற்கு ரூ. 282.48 கோடி மற்றும் தொடராச் செலவினங்களுக்கு ரூ. 52.08 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. மேற்குறிப்பிட்ட 11 அரசு பலவகை தொழில்நுட்பக் கல்லூரிகளுக்கும் 1,245 ஆசிரியர் மற்றும் ஆசிரியரல்லாத பணியிடங்கள் தோற்றுவிக்கப்பட்டுள்ளன.

மேலும், 2016 – 17 ஆம் ஆண்டில் டாக்டர் இராதாகிருஷ்ணன் நகர் (சென்னை மாவட்டம்), கடத்தூர் (தருமபுரி மாவட்டம்), வலங்கைமான் (திருவாரூர் மாவட்டம்), ரெகுநாதபுரம் (தஞ்சாவூர் மாவட்டம்) மற்றும் கெலமங்கலம் (கிருஷ்ணகிரி மாவட்டம்) ஆகிய இடங்களில் 5 புதிய அரசு பலவகை தொழில்நுட்பக் கல்லூரிகள் துவங்கப்பட்டுள்ளன.

மேற்கண்ட 5 அரசு பலவகை தொழில்நுட்பக் கல்லூரிகளுக்கும் கட்டடங்கள் கட்டுவதற்கு ரூ. 128.30 கோடி

`

மற்றும் முதலாம் கல்வியாண்டு 2016 – 17–க்கு தேவையான உபகரணங்கள், கணினிகள், அறைகலன்கள், நூலக புத்தகங்கள் மற்றும் மின்னிதழ்கள் கொள்முதல் செய்வதற்கு தொடராச் செலவினமாக ரூ. 2.50 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. மேற்குறிப்பிட்ட 5 அரசு பலவகை தொழில்நுட்பக் கல்லூரிகளுக்கு புதிதாக 305 ஆசிரியர் மற்றும் ஆசிரியரல்லா பணியிடங்கள் தோற்றுவிக்கப்பட்டுள்ளன.

இதன்மூலம், குறுகிய 6 ஆண்டு காலத்தில், தமிழகத்தில் அரசினர் பொறியியற் கல்லூரிகளின் எண்ணிக்கை 6 லிருந்து 10 ஆகவும், அரசினர் பலவகை தொழில்நுட்பக் கல்லூரிகளின் எண்ணிக்கை 30 லிருந்து 46 ஆகவும் உயர்ந்துள்ளது.

## 2.3. இலவச பாடப் புத்தகங்கள் வழங்குதல்:

மாணாக்கர்கள் பலவகை தொழில்நுட்பக் கல்லூரிகளில் சேர்ந்து பயில்வதை ஊக்கப்படுத்தும் விதமாக, அரசு பலவகை தொழில்நுட்பக் கல்லூரிகளில் பயிலும் அனைத்து முதலாமாண்டு மாணாக்கர்களுக்கும் பாடநூல்கள் இலவசமாக வழங்கப்படுகிறது. இத்திட்டத்தின் கீழ், ஆங்கிலம், பொறியியல் இயற்பியல், பொறியியல் வேதியியல் மற்றும் பொறியியல் கணிதம் ஆகிய பாடங்களுக்கு தேவையான

`

பாடநூல்கள் இலவசமாக வழங்கப்பட்டு வருகின்றன. 2012 – 13 ஆம் ஆண்டு முதல் 2016 – 17 ஆம் ஆண்டு வரை ரூ. 68.06 இலட்சம் செலவில் 52,649 மாணாக்கர்களுக்கு இலவச பாடப்புத்தகங்கள் வழங்கப்பட்டுள்ளன.

## 2.4. பொருளாதாரத்தில் நலிவுற்ற மாணாக்கர்களுக்கு நிதியுதவி அளித்தல் (முதலமைச்சரின் பொது நிவாரண நிதி)

பொருளாதாரத்தில் நலிவுற்ற மாணாக்கர்கள் இளநிலை பொறியியல் பட்டப்படிப்புகளை தொடர்ந்து பயில்வதற்கு ஏதுவாக, மாணாக்கர் ஒருவருக்கு ரூ. 25,000 வீதம் அரசால் நிதி உதவி வழங்கப்படுகின்றது. 2012 – 13 ஆம் ஆண்டு முதல் 2016 – 17 ஆம் ஆண்டு வரை 73 மாணாக்கர்களுக்கு ரூ. 18,25,000 முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து வழங்கப்பட்டுள்ளது.

## 2.5. அரசு பலவகை தொழில்நுட்பக் கல்லூரிகளில் பயிலும் மாணாக்கர்களுக்கு கல்விக் கட்டண விலக்கு (Tuition Fee Waiver) மற்றும் பேருந்து கட்டணச் சலுகை வழங்குதல்

அரசு பலவகை தொழில்நுட்பக் கல்லூரிகளில் பயிலும் மாணாக்கர்களுக்கு கல்வி கட்டணம் செலுத்துவதிலிருந்து விலக்கு மற்றும் கட்டணமில்லா பேருந்து பயணச்சலுகை

`

ஆகியவை தொடர்ந்து வழங்கப்பட்டு வருகிறது. 2011 – 12 ஆம் ஆண்டு முதல் 2016 – 17 ஆம் ஆண்டு வரை 2,41,635 மாணாக்கர்கள் இத்திட்டத்தின்கீழ் பயன்பெற்றுள்ளனர்.

## 2.6. விலையில்லா மடிக்கணினிகள் வழங்கும் திட்டம்

அரசு மற்றும் அரசு நிதியுதவி பெறும் பள்ளிகள் மற்றும் கல்லூரிகளில் பயிலும் மாணாக்கர்களின் கணினி அறிவுத் திறனை மேம்படுத்தவும் மற்றும் மாணாக்கர்களுக்கிடையேயான எண்ணியல் ஏற்ற இறக்க இடைவெளியை குறைக்கும் பொருட்டும், விலையில்லா மடிக்கணினி திட்டம் தமிழக அரசால் அறிமுகப்படுத்தப்பட்டது.

2011 – 12 ஆம் ஆண்டு முதல் 2016 – 17 ஆம் ஆண்டு வரை அரசு மற்றும் அரசு நிதியுதவி பெறும் பொறியியல் / பலவகை தொழில்நுட்பக் கல்லூரிகளில் பயிலும் 1,84,519 மாணாக்கர்களுக்கு விலையில்லா மடிக்கணினிகள் தொழில்நுட்பக் கல்வித் துறையின் மூலம் வழங்கப்பட்டுள்ளன. 2016 – 17 ஆம் ஆண்டில் மட்டும் 11,348 விலையில்லா மடிக்கணினிகள் பலவகைத் தொழில்நுட்பக் கல்லூரிகளில் பயிலும் மாணாக்கர்களுக்கு வழங்கப்பட்டுள்ளன.

## 2.7. ஒற்றைச் சாளர முறையில் பொறியியல் கல்லூரிகளில் மாணாக்கர்கள் சேர்க்கை

பன்னிரெண்டாம் வகுப்பு வாரியத் தேர்வில், மாணாக்கர்கள் பெறும் மதிப்பெண்களின் அடிப்படையில், பொறியியல் கல்லூரிகளில் இளநிலை பொறியியல் பட்ட வகுப்புகளுக்கு, அண்ணா பல்கலைக்கழகம் நடத்தும் தமிழ்நாடு பொறியியல் சேர்க்கை மூலம் ஒற்றைச் சாளர முறையில் மாணாக்கர் சேர்க்கை இடங்கள் அரசு ஒதுக்கீட்டின் கீழ் பின்வருமாறு வழங்கப்பட்டு வருகின்றது:-

### அட்டவணை – 2.1 ஒற்றை சாளர முறையில் பொறியியல் மாணாக்கர்கள் சேர்க்கை

| வ.எண். | பிரிவு | | சதவிகிதம் |
|---|---|---|---|
| 1 | அரசு பொறியியல் கல்லூரிகள் | | 100 |
| 2 | அரசு உதவி பெறும் பொறியியல் கல்லூரிகள் | அரசு உதவி பெறும் பாடப்பிரிவு | 100 |
| | | சுயநிதி பாடப் பிரிவு | 70 |
| 3 | சுயநிதி பொறியியல் கல்லூரிகள் | சிறுபான்மை அல்லாத பிரிவு | 65 |
| | | சிறுபான்மை பிரிவு | 50 |

`

ஒற்றை சாளர முறையில் மாணாக்கர் சேர்க்கைக்கான இணையவழியான (On-line) பதிவு **2016 – 17** ஆம் ஆண்டிலிருந்து அறிமுகப்படுத்தப் பட்டுள்ளது.

## 2.8. தொழில்நுட்பக் கல்வி தர மேம்பாட்டுத் திட்டம் நிலை– II (TEQIP-Phase II)

தொழில்நுட்பக் கல்வி தர மேம்பாட்டுத் திட்டம் - II (TEQIP-II), மத்திய அரசின் மனிதவள மேம்பாட்டு துறை மற்றும் மாநில அரசு ஆகியவைகளால் இணைந்து செயல்படுத்தப்படும் திட்டமாகும். இத்திட்டத்திற்கான மொத்த மதிப்பீடு ரூ. **142.10** கோடி ஆகும். இத்திட்டம் **31–3–2017** ஆம் நாளுடன் வெற்றிகரமாக நிறைவடைந்துள்ளது. இத்திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்பட்ட பணிகளுக்கு, மத்திய, மாநில அரசுகளின் பங்கீட்டுத் தொகை முறையே **75%** மற்றும் **25%** என **2014 - 15**ஆம் ஆண்டு வரை இருந்து வந்தது. **2015 – 16** ஆம் ஆண்டிலிருந்து பங்கீட்டுத் தொகை சமமாக வழங்கப்பட்டுவந்தது.

தமிழ்நாட்டில், **4** அரசு பொறியியல் கல்லூரிகள், **3** அரசு நிதி உதவி பெறும் பொறியியல் கல்லூரிகள், திருச்சிராப்பள்ளியில் உள்ள அண்ணா பல்கலைக்கழகத்தின்

`

உறுப்பு கல்லூரி மற்றும் மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகத்தின் கணினிப் பொறியியல் துறை ஆகியவை இத்திட்டத்தில் பங்குபெற்றன.

தொழில்நுட்பக் கல்வி தர மேம்பாட்டு திட்டம் - II (TEQIP-II) இல் பங்கு பெற்ற 23 மாநிலங்களில், தமிழகம் சிறப்பாகச் செயல்பட்டதை முன்னிட்டு ரூ. 40 கோடி கூடுதலாக ஒப்பளிப்பு செய்யப்பட்டது (மத்திய அரசின் பங்கு ரூ. 20 கோடி மற்றும் மாநில அரசின் பங்கு ரூ. 20 கோடி).

இத்திட்டத்தின் மூலம் அடைந்த சில முக்கிய சாதனைகள் பின்வருமாறு:

- ஆய்வகங்கள், நூலகங்கள் மற்றும் பட்டறைகள் நவீனமயமாக்கல்
- 3,786 முதுநிலை மாணாக்கர்களுக்கு நிதியுதவி
- 417 முனைவர் பட்ட ஆராய்ச்சி மாணாக்கர்களுக்கு நிதியுதவி
- 5,761 ஆராய்ச்சிக் கட்டுரைகள் மற்றும் 143 புத்தகங்கள் பதிப்பு
- 56 காப்புரிமை தாக்கல்

`

- 17 காப்புரிமைகள் பெறப்பட்டது

- பல்கலைக்கழக நிதிநல்கைக் குழுவால் 7 கல்லூரிகளுக்கு தன்னாட்சி நிலை வழங்கப்பட்டது.

- தேசிய தர மதிப்பீட்டு அங்கீகார வாரியத்தால் **50** பாடப்பிரிவுகளுக்கு தர அங்கீகாரம் வழங்கப்பட்டது.

- ஆசிரியர்களுக்கு **1,165** உள் வளாக பயிற்சிகள் நடத்தப்பட்டன.

- ஆசிரியர் அல்லாத பணியாளர்களுக்கு **90** உள் வளாக பயிற்சிகள் நடத்தப்பட்டன.

இந்தியா முழுவதிலும் உள்ள IITs, NITs, NITTTR, IIMs பயிலகங்கள் மற்றும் அரசு நிறுவனங்களில் நடைபெற்ற **4,230** பயிற்சிகளில் **1,743** ஆசிரியர்கள் கலந்து கொண்டு பயன்பெற்றுள்ளனர்.

## 2.9. போஸ்ட் மெட்ரிக் கல்வி உதவித் தொகை வழங்கும் திட்டம்

மத்திய மற்றும் மாநில அரசுகள் இணைந்து, ஆதி திராவிடர், பழங்குடியினர் மற்றும் கிருத்துவ மதம் மாறிய ஆதி திராவிடர் மாணாக்கர்களுக்கு போஸ்ட் மெட்ரிக் கல்வி உதவித் தொகை வழங்கும் திட்டத்தை செயல்படுத்தி வருகிறது. இத்திட்டத்தின் கீழ், சுயநிதி கல்வி நிறுவனங்களில்

`

(சிறுபான்மை பயிலகங்கள் உட்பட) அரசு மற்றும் நிர்வாக ஒதுக்கீட்டின் கீழ் சேர்க்கை பெற்ற மேற்குறிப்பிட்ட மாணாக்கர்களுக்கு, கட்டண நிர்ணயக் குழுவால் நிர்ணயம் செய்யப்பட்ட கட்டாய மற்றும் திருப்பியளிக்க இயலாத கட்டணங்கள் அனைத்தும் வழங்கப்பட்டு வருகின்றன.

### 2.9.1. பொறியியல் கல்லூரிகள்

இத்திட்டத்தின் கீழ் 2013 – 14, 2014 – 15 மற்றும் 2015 – 16 ஆம் ஆண்டுகளில் முறையே ரூ. 435.07 கோடி, ரூ. 580.42 கோடி மற்றும் ரூ. 739.06 கோடி கல்விக் கட்டணமாக அளிக்கப்பட்டுள்ளது. இதன் மூலம், மேற்கண்ட ஆண்டுகளில் முறையே 80,715, 97,668 மற்றும் 1,14,859 பொறியியல் கல்லூரி மாணாக்கர்கள் பயனடைந்துள்ளனர்.

### 2.9.2. பலவகை தொழில்நுட்ப கல்லூரிகள்

இத்திட்டத்தின் கீழ் 2013 – 14, 2014 – 15 மற்றும் 2015 – 16 ஆம் ஆண்டுகளில் முறையே ரூ. 66.95 கோடி, ரூ. 80.10 கோடி மற்றும் ரூ. 134.32 கோடி கல்விக் கட்டணமாக அளிக்கப்பட்டுள்ளது. இதன்மூலம், மேற்கண்ட ஆண்டுகளில் முறையே 44,555, 51,248 மற்றும் 60,600 பலவகைத் தொழில்நுட்பக் கல்லூரி மாணாக்கர்கள் பயனடைந்துள்ளனர்.

`

## 2.10. முதல் தலைமுறை பட்டதாரி மாணாக்கர்களுக்கு கல்விக் கட்டணச்சலுகை

தமிழ்நாட்டிலுள்ள அனைத்து பொறியியல் கல்லூரிகளிலும், ஒற்றைச் சாளர கலந்தாய்வு மூலம் முதலாமாண்டு மற்றும் இரண்டாமாண்டு நேரடி சேர்க்கை பெற்ற முதல் தலைமுறை பட்டதாரி மாணாக்கர்களுக்கு கல்விக் கட்டணச்சலுகை (Tuition Fee Concession) வழங்கப்படுகிறது.

இத்திட்டத்தின்கீழ், 2011 – 12 ஆம் ஆண்டு முதல் 2016 – 17 ஆம் ஆண்டு வரை, முறையே ரூ. 299.28 கோடி, ரூ. 478.06 கோடி, ரூ. 547.87 கோடி, ரூ. 541.11 கோடி, ரூ. 514.53 கோடி மற்றும் ரூ. 459.03 கோடி கல்விக்கட்டணச் சலுகை அளிக்கப்பட்டுள்ளது. இதன் மூலம் மேற்கண்ட ஆண்டுகளில் முறையே 1,57,176, 2,49,563, 2,87,021, 2,83,379, 2,69,522 மற்றும் 2,42,112 மாணாக்கர்கள் பயனடைந்துள்ளனர்.

## 2.11 . இலங்கை தமிழ் அகதிகளின் குழந்தைகளுக்கு கல்விக் கட்டண சலுகை நீட்டிப்பு

2011 – 12 ஆம் ஆண்டு முதல், தமிழ்நாட்டில் உள்ள இலங்கை தமிழ் அகதி மாணாக்கர்கள், பி.இ. / பி. டெக். முதலாமாண்டு மற்றும் இரண்டாமாண்டு நேரடி சேர்க்கை

`

மற்றும் எம்.பி.ஏ. / எம்.சி.ஏ. / எம்.ஈ. / எம்.டெக். போன்ற முதுநிலை கல்வி பயில ஏதுவாக, ஒற்றைச் சாளர கலந்தாய்வில் கலந்து கொண்டு சேர்க்கை பெற அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

தமிழ்நாட்டில், ஒற்றைச் சாளர முறை கலந்தாய்வின் மூலம், பொறியியல் கல்லூரிகளில் பயிலும் முதல் தலைமுறை பட்டதாரிகளுக்கு வழங்கப்படும் கல்விக் கட்டண சலுகை, இலங்கை தமிழ் அகதி மாணாக்கர்களுக்கும் நீட்டிக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தினால், 2011–12 ஆம் ஆண்டு முதல் 2016–17 ஆம் ஆண்டு வரை, 160 மாணாக்கர்கள் பயனடைந்துள்ளனர்.

## 2.12. அரசு பொறியியல் / பலவகைத் தொழில்நுட்பக் கல்லூரிகளில் ஆசிரியர்கள் நியமனம்

அரசு பொறியியல் கல்லூரிகளில், ஆசிரியர் தேர்வு வாரியம் மூலம், 2016 – 17 ஆம் ஆண்டில், 187 உதவிப் பேராசிரியர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். அரசு பலவகை தொழில்நுட்பக் கல்லூரிகளில், ஆசிரியர் தேர்வு வாரியம் மூலம், 1,065 விரிவுரையாளர் பணியிடங்களை நிரப்புவதற்கு அரசாணை வழங்கப்பட்டு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

`

## 2.13. அண்ணாமலைப் பல்கலைக்கழக மிகை ஆசிரியர் மற்றும் ஆசிரியரல்லா பணியாளர்களை பணிநிரவல் செய்தல்

அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் உள்ள மிகை ஆசிரியர் மற்றும் ஆசிரியரல்லா பணியாளர்களை இனம் காணுமாறு அரசு அறிவுறுத்தியது. அதற்கிணங்க, அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தின் 337 மிகை ஆசிரியர் பணியாளர்கள் அரசு பொறியியல் மற்றும் பலவகை தொழில்நுட்ப கல்லூரிகளுக்கும், 376 மிகை ஆசிரியரல்லா பணியிடங்கள் அரசு பொறியியல் / பலவகை தொழில்நுட்ப கல்லூரிகள் மற்றும் பொதுப்பணித் துறை தொழில்நுட்ப வட்டம் / கோட்டங்களுக்கும் 3 ஆண்டுகள் ஒப்பந்த அடிப்படையில் (agreement basis) அரசாணையின்படி பணிநிரவல் செய்யப்பட்டனர்.

`

# 3. கல்லூரிக் கல்வித் துறை

**3.1.** கல்லூரிக் கல்வித் துறையை தனியாக நிர்வகிக்கும் பொருட்டு முன்னர் இருந்த பொதுக் கல்வி இயக்ககத்திலிருந்து **1965** ஆம் ஆண்டு கல்லூரிக் கல்வி இயக்ககம் தோற்றுவிக்கப்பட்டது. இவ்வியக்ககத்தின் கீழ் செயல்பட்டு வரும் கல்லூரிகளின் விவரம் பின்வருமாறு:

**அட்டவணை 3.1 கல்லூரிகளின் விவரம்**

| கல்லூரியின் வகை | அரசு கல்லூரிகள் | அரசு உதவி பெறும் கல்லூரிகள் | சுயநிதி கல்லூரிகள் | மொத்தம் |
|---|---|---|---|---|
| கலை மற்றும் அறிவியல் கல்லூரிகள் | 83 | 139 | 496 | 718 |
| உடற்பயிற்சிக் கல்லூரிகள் | 0 | 3 | 8 | 11 |
| கீழ்த் திசைக் கல்லூரிகள் | 0 | 4 | 0 | 4 |
| சமூகப் பணி கல்லூரிகள் | 0 | 2 | 0 | 2 |
| கல்வியியல் கல்லூரிகள் | 7 | 14 | 713 | 734 |
| பல்கலைக்கழக உறுப்புக் கல்லூரிகள் | 37 | 0 | 0 | 37 |
| **மொத்தம்** | 127 | 162 | 1217 | 1506 |

`

## 3.2 . புதிய அரசு கல்லூரிகள் தொடங்குதல்

அரசு, 2013 – 14 ஆம் கல்வியாண்டு முதல் 2015 – 16 ஆம் கல்வியாண்டு வரை புதியதாக 18 அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளை தொடங்க அனுமதியளிக்கப்பட்டு கல்லூரிகள் நடைபெற்று வருகின்றன. காஞ்சிபுரம் மாவட்டம், பெரும்பாக்கம் மற்றும் கோயம்புத்தூர் மாவட்டம் மேட்டுப்பாளையம் ஆகிய இடங்களில் 2016 – 17 ஆம் கல்வியாண்டில் இரு புதிய அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகள் தொடங்க அனுமதி அளிக்கப்பட்டு இயங்கி வருகின்றன. மேலும் ஒரு அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி திருப்பூர் மாவட்டம் அவினாசியில் 2017 – 18 ஆம் கல்வியாண்டில் தொடங்கப்பட்டுள்ளது.

## 3.3. அரசு கலைக் கல்லூரிகளில் புதிய பாடப் பிரிவுகள் தொடங்குதல்

அரசு கல்லூரிகளில் மாணாக்கர்கள் சேர்க்கை விகிதம் கணிசமாக உயர்வதைக் கருத்தில் கொண்டு, 2011 – 12 ஆம் கல்வியாண்டு முதல் 2016 – 17ஆம் கல்வியாண்டு வரை 961 புதிய பாடப்பிரிவுகள் தொடங்கி அதற்கென 1934 உதவிப்

`

பேராசிரியர் பணியிடங்கள் அரசால் ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ளன.

**அட்டவணை 3.2 புதிய பாடப்பிரிவுகளின் விவரங்கள்**

| வ. எண் | கல்வியாண்டு | பாடப் பிரிவுகள் எண்ணிக்கை | மொத்தக் கல்லூரிகள் | ஒப்பளிப்பு செய்யப்பட்ட பணியிடங்கள் |
|---|---|---|---|---|
| 1 | 2011-12 | 101 | 34 | 143 |
| 2 | 2012-13 | 298 | 51 | 833 |
| 3 | 2013-14 | 397 | 51 | 822 |
| 4 | 2015-16 | 163 | 34 | 124 |
| 5 | 2016-17 | 2 | 1 | 12 |
| மொத்தம் | | 961 | 171 | 1934 |

## 3.4. அரசு கல்லூரிகளில் உதவிப் பேராசிரியர் காலிப்பணியிட நியமனம் / பணி நிரவல்

அரசு, அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் உள்ள மிகை ஆசிரியர்களைக் கண்டறியும் பணியினை மேற்கொண்டது. ஜனவரி 2016 இல், 369 அண்ணாமலை பல்கலைக்கழக மிகை ஆசிரியர்களை அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகள் மற்றும் கல்வியியல் கல்லூரிகளில்,

`

ஒப்பந்த அடிப்படையில், பணியமர்த்தியுள்ளது. மேலும், மே 2017 இல், 208 உதவி பேராசிரியர் பணியிடங்கள் அண்ணாமலை பல்கலைக்கழக மிகை ஆசிரியர்களைக் கொண்டு நிரப்பப்பட்டுள்ளது. தற்போது, அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் உள்ள காலிப்பணியிடங்களில், 1,966 உதவிப்பேராசிரியர் பணியிடங்களை நிரப்பிட ஆசிரியர் தேர்வு வாரியம் நடவடிக்கை மேற்கொண்டு வருகிறது.

**3.5. அரசு கல்லூரிகளில் கௌரவ விரிவுரையாளர்கள்**

அரசு கல்லூரிகளில் உள்ள கட்டமைப்பு வசதிகளை அதிகபட்சம் பயன்படுத்தும் விதத்தில் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில், சுழற்சி முறையில் வகுப்புகள் நடத்தும் முறை ஒவ்வொரு ஆண்டும் செயல்படுத்தப்பட்டு வருகிறது. 2016 – 17 ஆம் கல்வியாண்டில், அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் முறையான உதவிப் பேராசிரியர் பணியிடங்களை நிரப்பும் வரையில், சுழற்சி–I முறையில் 1,683 கௌரவ விரிவுரையாளர்கள் நியமனத்திற்கு அரசால் ஒப்புதல் அளிக்கப்பட்டது. மேலும், சுழற்சி – II முறையில் அரசு கலை அறிவியல் கல்லூரிகளில், 1,661 கௌரவ விரிவுரையாளர்கள் நியமனம் செய்யப்படுவதற்கு அரசால் ஒப்புதல் அளிக்கப்பட்டது. அரசு, கௌரவ விரிவுரையாளர்களுக்கான

`

ஊதியத்தை பிப்ரவரி 2016 முதல் ரூ. 10,000 லிருந்து ரூ. 15,000 ஆக உயர்த்தியுள்ளது.

### 3.6. இலவசக் கல்வி

2016 – 17 ஆம் கல்வியாண்டில், அரசு மற்றும் அரசு உதவிபெறும் கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில், இளநிலையில் பயிலும் 4,63,063 மாணாக்கர்களும், அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில், முதுநிலையில் பயிலும் 30,403 மாணாக்கர்களும் என மொத்தம் 4,93,466 மாணாக்கர்கள் கல்விக் கட்டண ரத்து திட்டத்தின் வாயிலாக பயனடைந்துள்ளனர்.

### 3.7. கல்லூரி மாணாக்கர்களுக்கான இலவச பேருந்துஅட்டை

கல்லூரி மாணாக்கர்களுக்கான இலவச பேருந்து அட்டை வழங்கும் திட்டம் ஒவ்வொரு ஆண்டும் செயல்படுத்தப்பட்டு வருகிறது. 2011 – 12 ஆம் ஆண்டு முதல் 2016 – 17 ஆம் ஆண்டு வரை, அரசு கலை, அறிவியல் மற்றும் கல்வியியல் கல்லூரிகளில் பயின்ற 8,51,542 மாணாக்கர்களுக்கு இலவச பேருந்து அட்டை வழங்கியுள்ளது. இத்திட்டத்தின் கீழ் 2016 – 17 ஆம் ஆண்டில் 1,88,256 மாணாக்கர்கள் பயன்பெற்றுள்ளனர்.

`

## 3.8. இலவச குடிமைப் பணி பயிற்சி

அகில இந்திய குடிமைப் பணித் தேர்வுகளில் தமிழகத்தைச் சார்ந்த மகளிர் சிறப்பான வெற்றியை பெற்றுள்ளனர். அகில இந்திய குடிமைப்பணித் தேர்வுகளை எழுதும் மாணவிகளை ஊக்குவிக்கவும் தகுதிப்படுத்தும் பொருட்டும், 2001 – 02 ஆம் ஆண்டு முதல், சென்னை மாவட்டம், இராணிமேரி கல்லூரி மற்றும் மதுரை மாவட்டம், அருள்மிகு மீனாட்சி அரசு மகளிர் கல்லூரி ஆகியவற்றில் இலவச பயிற்சி வகுப்புகள் நடத்தப்படுகின்றன. இத்திட்டத்திற்கென ஒவ்வொரு ஆண்டும் ரூ. 10 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்படுகிறது. இத்திட்டம் 2017 – 18 ஆம் ஆண்டிலும் தொடர்ந்து செயல்படுத்தப்பட்டு வருகிறது.

## 3.9. வேலை வாய்ப்பு முகாம்

அரசு மற்றும் அரசு உதவி பெறும் கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் மாணாக்கர்களின் நலனுக்காக வேலைப் பணி அமர்த்துதல் பிரிவுகள் தொடங்கப்பட்டன. 2015 – 16 ஆம் ஆண்டில் 4,758 மாணாக்கர்கள் வேலைவாய்ப்பு பெற்று பயனடைந்தனர். 2016 – 17 ஆம் ஆண்டில், 6,633 மாணாக்கர்கள் பல்வேறு நிறுவனங்களில் வேலைவாய்ப்பு பெற்று பயனடைந்துள்ளனர்.

`

## 3.10. தமிழ் வழி பயிலும் மாணாக்கர்களுக்கு ஊக்கத் தொகை

தமிழ் வழிக் கல்வி பயிலும் மாணாக்கர்களை ஊக்கப்படுத்தும் பொருட்டு, 1971 – 72 ஆம் ஆண்டு முதல் படிப்பு உதவித் தொகை வழங்கும் திட்டம் தொடங்கப்பட்டது. தற்போது, இத்திட்டத்தின் மூலம் தமிழ் வழி பயிலும் மாணாக்கர் ஒவ்வொருவருக்கும் ரூ. 400 படிப்புதவித்தொகை வழங்கப்படுகிறது. 2016 – 17 ஆம் நிதியாண்டில் ரூ. 227.86 இலட்சம் அரசால் ஒப்பளிப்பு செய்யப்பட்டு மொத்தம் 56,965 மாணாக்கர்கள் பயனடைந்துள்ளனர்.

## 3.11. சிறப்புப் பயிற்சி வகுப்புகள் நடத்துதல்

அரசு கல்லூரிகளில் பயிலும் தாழ்த்தப்பட்ட மற்றும் பழங்குடியினர் மற்றும் மிகவும் பிற்படுத்தப்பட்ட இனத்தைச் சார்ந்த மாணாக்கர்களில், குறிப்பாக ஊரகப்பகுதியில் உள்ள மாணாக்கர்கள், ஆங்கிலம், கணிதம் மற்றும் அறிவியல் பாடப்பிரிவுகளை கற்பதற்கு துவக்கத்தில் சில சமயங்களில் சிரமங்களை சந்திக்கிறார்கள். அவர்களிடம் உள்ள அச்சத்தை போக்கி தன்னம்பிக்கையை உயர்த்தும் விதத்தில் அம்மாணாக்கர்களுக்கு, முறையான வகுப்புகள் முடிந்த பின்னர் மற்றும் விடுமுறை நாட்களில் சிறப்பு பயிற்சி

`

அளிக்கப்படுகின்றது. இத்திட்டம் ஒவ்வொரு ஆண்டும் தொடர்ந்து செயல்படுத்தப்படுகிறது. இத்திட்டத்தின் கீழ் 2016 – 17 ஆம் ஆண்டில் 8,447 மாணாக்கர்கள் பயனடைந்துள்ளனர்.

**3.12. ஆராய்ச்சி படிப்பு (பி.எச்டி.,) பயிலும் மாணாக்கர்களுக்கான உதவித்தொகை திட்டம்**

அரசு மற்றும் அரசு உதவிபெறும் கல்லூரிகளில், பல்வேறு பாடப்பிரிவுகளில், முழு நேர ஆராய்ச்சி மேற்கொள்ளும் மாணாக்கர்களுக்கு ஆராய்ச்சி காலத்தில் ஒரு வருடத்திற்கு ரூ. 36,000 ஊக்கத் தொகையாக வழங்கப்படுகிறது. இத்திட்டத்தின் மூலம் 2016 – 17 ஆம் ஆண்டில், 171 ஆராய்ச்சி மாணாக்கர்கள் (புதிய மற்றும் புதுப்பித்தல்) தெரிவு செய்யப்பட்டு பயன்பெற்றுள்ளனர். இதற்கென அவர்களுக்கு ரூ. 61.56 இலட்சம் ஊக்கத்தொகையாக அளிக்கப்பட்டுள்ளது.

**3.13. அரசு கல்லூரிகளில், அடிப்படை வசதிகள், தளவாடங்கள் மற்றும் உபகரணங்கள் வழங்குதல் / மேம்படுத்துதல்**

62 அரசு கலை அறிவியல் கல்லூரிகள், 7 கல்வியியல் கல்லூரிகள் மற்றும் 24 பல்கலைக்கழக உறுப்பு கல்லூரிகளுக்கு தளவாடங்கள், உபகரணங்கள் வழங்குதல், அடிப்படை வசதிகள் செய்து தருதல் ஆகியவற்றிற்கு

`

ரூ. 100 கோடி அரசால் வழங்கப்பட்டது. இதனால் மாணாக்கர்கள் உகந்த கல்விச் சூழலில் உயர்கல்வி பயில வழிவகை செய்யப்பட்டுள்ளது.

## 3.14. போஸ்ட் மெட்ரிக் படிப்புதவித் தொகை திட்டத்தின்கீழ் ஆதி திராவிடர்/ பழங்குடியினர்/ கிருத்துவ மதம் மாறிய ஆதி திராவிடர் மாணாக்கர்களுக்கு கல்விக் கட்டணம் திரும்ப வழங்கும் திட்டம்

அரசு உதவி பெறும் மற்றும் சுயநிதி கலை, அறிவியல் மற்றும் கல்வியியல் கல்லூரிகளில் உயர்கல்வி படிக்கும் ஆதிதிராவிடர் / பழங்குடியினர் / மதம் மாறிய கிருத்துவ ஆதி திராவிடர் மாணாக்கர்களுக்கு கல்விக் கட்டண தொகையை திரும்ப வழங்கும் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின்படி கலை, அறிவியல் மற்றும் கல்வியியல் கல்லூரிகளில் படிக்கும் ஆதிதிராவிடர் / பழங்குடியினர் / மதம் மாறிய கிருத்துவ ஆதி திராவிடர் மாணாக்கர்கள் சார்பாக அரசால் கல்விக் கட்டணம் நேரடியாக கல்லூரிகளுக்கு வழங்கப்படுகிறது. இத்திட்டத்தின்கீழ் பயனடைந்த மாணாக்கர்கள் எண்ணிக்கை மற்றும் ஒப்பளிப்பு செய்யப்பட்ட தொகை விவரம் பின்வருமாறு :

`

## அட்டவணை 3.3

### பயனடைந்த மாணாக்கர்களின் விவரம்

| ஆண்டு | அரசு உதவி பெறும் கல்லூரிகள் | | சுய நிதி கல்லூரிகள் | |
|---|---|---|---|---|
| | மாணாக்கர்கள் எண்ணிக்கை | தொகை (ரூபாய்) | மாணாக்கர்கள் எண்ணிக்கை | தொகை (ரூபாய்) |
| 2013–14 | 1,38,327 | 57,52,26,046 | 1,09,310 | 168,27,85,925 |
| 2014–15 | 1,45,026 | 59,33,99,916 | 1,06,246 | 175,97,64,007 |
| 2015–16 | 1,47,029 | 60,22,72,102 | 1,07,922 | 174,59,26,403 |

## 3.15. விளையாட்டு

தமிழ்நாட்டில் கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் விளையாட்டு என்பது கல்வியின் ஒருங்கிணைந்த பகுதியாக உள்ளது. மாணாக்கர்கள் விளையாட்டில் சிறப்பு நிலை பெற்று, தேசிய மற்றும் சர்வதேச அளவில் பரிசுகள் மற்றும் கேடயங்கள் வென்றுள்ளார்கள். அரசு / அரசு உதவி பெறும் / சுயநிதி கல்லூரி மாணவர்கள், வாள்சண்டை, கபடி, வாலிபால், தடை தாண்டுதல், தொடர் ஓட்டம், சதுரங்கம், ஹாக்கி, எடை தூக்குதல், பளு தூக்குதல், ஓட்டப்பந்தயம், நீச்சல் மற்றும் கைப்பந்து ஆகிய விளையாட்டுகளில் அகில இந்திய

`

பல்கலைக்கழகங்கள், மாநில, தேசிய மற்றும் சர்வதேச அளவில் சிறப்பு நிலையை அடைந்துள்ளனர்.

## 3.16. மண்டல கல்லூரிக் கல்வி இணை இயக்குநர் அலுவலகங்களுக்கு சொந்த கட்டடம் கட்டுதல்

திருச்சி, மதுரை மற்றும் திருநெல்வேலி ஆகிய மண்டல கல்லூரிக் கல்வி இணை இயக்குநர் அலுவலகங்களுக்கு ரூ. 4.59 கோடி செலவில் சொந்த கட்டடம் கட்ட அரசால், நிதி ஒப்பளிப்பு வழங்கப்பட்டது. கட்டிடப்பணிகள் முடிக்கப்பட்டு, 05.08.2016 அன்று மாண்புமிகு முன்னாள் தமிழக முதலமைச்சர் அவர்களால் திறக்கப்பட்டன.

## 3.17. புதிதாக தொடங்கப்பட்ட அரசு கல்லூரிகளுக்கு சொந்த கட்டடம் கட்டுதல்

அரசு, 2013 – 14 ஆம் ஆண்டு முதல் 2017 – 18 ஆம் ஆண்டு வரை, 21 புதிய அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளை தொடங்கியுள்ளது, இவைகளில், ஒசூர், குமாரபாளையம், காங்கேயம், உத்திரமேரூர், பேராவூரணி, சிவகாசி, காரிமங்கலம், கோவில்பட்டி, கறம்பக்குடி, வேப்பந்தட்டை மற்றும் மணல்மேடு ஆகிய இடங்களில் தொடங்கப்பட்டுள்ள அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளுக்கு சொந்த கட்டடம் கட்டி முடிக்கப்பட்டு

`

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களால் திறந்து வைக்கப்பட்டுள்ளன.

சென்னை, டாக்டர். இராதாகிருஷ்ணன் நகர் மற்றும் நாகர்கோவில் ஆகிய இடங்களில் தொடங்கப்பட்டுள்ள அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளுக்கு சொந்த கட்டடம் கட்டி முடிக்கப்பட்டுள்ளன. கடலாடி, முதுகுளத்தூர், திருவாடானை மற்றும் சத்தியமங்கலம் ஆகிய இடங்களில் தொடங்கப்பட்டுள்ள அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளுக்கான சொந்த கட்டடப் பணிகள் முடியும் நிலையில் உள்ளன. வீரபாண்டியில் தொடங்கப்பட்டுள்ள அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிக்கு சொந்த கட்டடம் கட்டும் பணிகள் நடைபெற்று வருகின்றன.

பெரும்பாக்கம், மேட்டுப்பாளையம் மற்றும் அவினாசியில் தொடங்கப்பட்ட அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளின் கட்டடப்பணிகளுக்காக அரசு, ரூ. 23.20 கோடி ஒதுக்கீடு செய்துள்ளது.

## 3.18 . நாட்டு நலப்பணித் திட்டம்

நாட்டு நலப்பணித்திட்டம், தமிழகத்தில், உயர்கல்வி நிறுவனங்களில் செப்டம்பர், 1969 முதல் வெற்றிகரமாக

`

செயல்படுத்தப்பட்டு வருகிறது. தற்போது, 3,90,700 மாணவத் தொண்டர்களுடன் இத்திட்டம் தமிழகத்தில் பல்வேறு கல்வி நிறுவனங்களில் செயல்பட்டு வருகிறது. 2016 – 17 ஆம் ஆண்டில் ரூ.13.43 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டது. பல்கலைக்கழகங்கள், கல்லூரிகள், பல்வேறு தொழில்நுட்பப் பயிலகங்களில், இத்திட்டம் வெற்றிகரமாக செயல்பட்டு வருகிறது.

`

## 4. பல்கலைக்கழகங்கள்

உயர்கல்வித்துறையின் ஆளுகையின் கீழ் பின்வரும் பல்கலைக்கழகங்கள் செயல்படுகின்றன:

1. சென்னைப் பல்கலைக்கழகம்
2. அண்ணாமலைப் பல்கலைக்கழகம்
3. மதுரை காமராசர் பல்கலைக்கழகம்
4. அண்ணா பல்கலைக்கழகம்
5. பாரதியார் பல்கலைக்கழகம்
6. பாரதிதாசன் பல்கலைக்கழகம்
7. அன்னை தெரசா மகளிர் பல்கலைக்கழகம்
8. அழகப்பா பல்கலைக்கழகம்
9. மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகம்
10. பெரியார் பல்கலைக்கழகம்
11. திருவள்ளுவர் பல்கலைக்கழகம்
12. தமிழ்நாடு திறந்த நிலைப் பல்கலைக்கழகம்
13. தமிழ்நாடு ஆசிரியர் கல்வியியல் பல்கலைக்கழகம்

`

## 4.1 சென்னைப் பல்கலைக்கழகம்

**4.1.1.** சென்னைப் பல்கலைக்கழகம் 1857–ஆம் ஆண்டு நிறுவப்பட்டது. இப்பல்கலைக்கழகம், 1923 – ஆம் ஆண்டு நிறைவேற்றப்பட்ட சென்னைப் பல்கலைக்கழகச் சட்டத்தின்படி நிர்வகிக்கப்படுகிறது. தற்பொழுது இப்பல்கலைக்கழகத்திற்கு சேப்பாக்கம், மெரினா, கிண்டி, தரமணி, சேத்துப்பட்டு மற்றும் மதுரவாயல் (கள ஆய்வகம்) ஆகிய இடங்களில் ஆறு வளாகங்கள் உள்ளன. சென்னைப் பல்கலைக்கழகத்திலிருந்து பிரிக்கப்பட்டு புதிய பல்கலைக்கழகங்கள் தோற்றுவிக்கப் பட்டமையால், தற்போது இப்பல்கலைக்கழகத்தின் அதிகார வரம்பில் சென்னை, காஞ்சிபுரம் மற்றும் திருவள்ளூர் மாவட்டங்கள் உள்ளன. கலை மற்றும் அறிவியல் கல்வி புலங்களில் போற்றத்தக்க பல்கலைக்கழகமாக விளங்கும் இப்பல்கலைக்கழகமானது, 87 கற்பித்தல் மற்றும் ஆய்வுத்துறைகள் மற்றும் 116 இணைவுக் கல்லூரிகளைப் பெற்றுள்ளது. சென்னைப் பல்கலைக்கழகம், தேசிய தரமதிப்பீட்டுக் குழுவின் (NAAC) உயர் மதிப்பீட்டினைத் தொடர்ந்து பெற்று வருகிறது. மேலும், இப்பல்கலைக்கழகம், பல்கலைக்கழக நிதிநல்கைக் குழுவினால் ‘ஆற்றல்சால் கல்லூரிகள்’ “(University with Potential for

`

Excellence)" என்ற அங்கீகாரத்தையும் பெற்றுள்ளது. தன்னாட்சிக் கல்லூாரி என்ற முறையை முதன் முதலில் அறிமுகப்படுத்திய பெருமை சென்னைப் பல்கலைக் கழகத்தையே சாரும். தற்போது, தன்னாட்சித் தகுதி பெற்ற 23 கல்லூரிகள் சென்னைப் பல்கலைக்கழகத்துடன் இணைவு பெற்றுள்ளன. அவற்றில் சில கல்லூரிகள், பல்கலைக்கழக நிதிநல்கைக் குழுவின் 'ஆற்றல்சால் கல்லூரிகள்' "(Colleges with Potential for Excellence)" என்ற அங்கீகாரத்தைப் பெற்ற கல்லூரிகளாக விளங்குகின்றன. தேசிய கல்வி நிறுவனங்களுக்கான தரவரிசைப் பட்டியல் 2017 (National Institutional Ranking Framework 2017) இன் படி இந்தியாவின் தலைசிறந்த பல்கலைக்கழகங்களின் வரிசையில், இப்பல்கலைக்கழகம் 41 வது இடத்தைப் பெற்றுள்ளது. மேலும், இப்பல்கலைக்கழகம், 2016 ஆம் ஆண்டிற்கான QS BRICS தரவரிசைப் பட்டியலில் 47.7 புள்ளிகள் பெற்று தலைசிறந்த பல்கலைக்கழகங்களில் 89 ஆம் இடத்தைப் பெற்றுள்ளது.

**4.1.2.** இப்பல்கலைக்கழகம், உயர் கல்வி அனைவரையும் சென்றடையும் நோக்குடன், 1981 ஆம் ஆண்டு தொலைதூரக் கல்வி நிறுவனத்தை தொடங்கியது. இத்தொலைதூரக் கல்வி

`

நிறுவனம், **27** இளங்கலைப் படிப்புகளையும், **22** முதுகலைப் படிப்புகளையும், **18** தொழிற் படிப்புகளையும், **30** ஏனைய படிப்புகளையும் வழங்கி வருகிறது**.** மேலும், தொலைதூரக் கல்வி நிறுவனம் தனது ஆப்பிரிக்கா மின்னணு வளைதள திட்டம் (e-network Pan African Project) மூலம் M.Sc.(IT), B.B.A. ஆகிய படிப்புகளை ஆப்பிரிக்க மாணாக்கர்களுக்கு வழங்கி வருகிறது**.**

**4.1.3.** இப்பல்கலைக்கழகத்தில், **2,681** மாணாக்கர்கள் **(**மாணவர் **– 1,186**, மாணவியர் - 1,495 **)** பயின்று வருகின்றனர்**.** இப்பல்கலைக்கழகத்தின் நெம்மேலி மற்றும் திருவொற்றியூரிலுள்ள உறுப்புக் கல்லூரிகளில் **1,599** மாணாக்கர்கள் **(**மாணவர் **– 619**, மாணவியர் **– 980)** பயின்று வருகின்றனர்**.** தொலைதூர கல்வி பாடத் திட்டத்தில் **93,164** மாணாக்கர்கள் **(**மாணவர் **– 40,804**, மாணவியர் **–52,360)** பயின்று வருகின்றனர்**.**

**4.1.4.** கடந்த ஐந்து ஆண்டுகளில், இப்பல்கலைக்கழகம் **12** புதிய மையங்களை நிறுவியுள்ளது**.** மேலும் மகளிர் கல்வி ஆய்வு, சமுதாயப் பணி, கணினி வலையமைப்பு மற்றும் தகவல் தொழில்நுட்பம், பொருள் அறிவியல், உயிரி தகவலியல்,

`

ஆலோசனை உளவியல் ஆகிய **6** புதிய துறைகளையும் நிறுவியுள்ளது. இப்பல்கலைக்கழகம், காணொலிக் காட்சி வசதிகளுடன் கூடிய நவீன வகுப்பறைகள், அயல் மொழி ஆய்வுக் கூடங்கள், தொழில்முனைவோர் மற்றும் திறன் மேம்பாட்டு மையம், பாடத்திட்ட மேம்பாட்டு மையம், மாற்றுத் திறனாளிகளுக்காகப் பல்வடிவக் கருவிகள் தயாரிக்கும் மையம், சுவாமி விவேகானந்தர் உயர் ஆய்வு மற்றும் கல்வி மையம், உயர் தொழில்நுட்பம் கொண்ட முதுகலை ஆய்வகம், தொழில்நுட்பம் மற்றும் கல்வி தொடர்பான எழுதுப் பயிற்சி மையம், பல்கலைக்கழக தொழில் கூட்டிணைவு மையம், அடைகாப்பு மற்றும் தொழில்நுட்ப மாற்று மையம் ஆகியவற்றை நிர்மானித்துள்ளது. இப்பல்கலைக்கழகம், மாணாக்கர் நலனைக் கருத்தில் கொண்டு, தொலைதூரக் கல்வி நிறுவனத்தில் ஒற்றைச் சாளர முறையில் மாணாக்கர் சேர்க்கை, பல்கலைக்கழகம் மற்றும் கல்லூரிகளில் சென்னைப் பல்கலைக்கழகத்தின் இலவசக் கல்வித் திட்டம், மாணவர் காப்பீட்டுத் திட்டம், பார்வை குறைவுள்ள மாணாக்கர்களுக்கு பேசும் நூலகம், Wi-Fi மற்றும் இணையதளத்துடன் கூடிய விளையாட்டு மற்றும் மாணவர் நலன் சார்ந்த வசதிகள் ஆகியவற்றை ஏற்படுத்தியுள்ளது. இப்பல்கலைக்கழகம்,

`

2016 – 17 ஆம் ஆண்டு முதல், இணையவழி (Online) மூலம் பல்கலைக்கழக துறைகளுக்கான மாணாக்கர் சேர்க்கையை நடைமுறைப்படுத்தி வருகிறது.

### 4.1.5. 2017 – 18 ஆம் ஆண்டில் மேற்கொள்ளவிருக்கும் செயல்பாடுகள் / திட்டங்கள்

(i) தேசிய உயர்கல்வி திட்டத்தின் (RUSA) கீழ் பெறப்பட்ட ரூ.1 கோடி நிதியுதவியுடன், தானியங்கி நிர்வாகம் (Automated Administration) மூலம் தாள்கள் இல்லா நிர்வாகத்தை மேற்கோள்ள இப்பல்கலைக்கழகம் திட்டமிட்டுள்ளது.

(ii) இப்பல்கலைக்கழக மாணாக்கர்களிடம் இருந்து பல்கலைக்கழக துறை சார்ந்த ஆசிரியர்கள் குறித்த கருத்து படிவத்தை இணையவழி (Online) முறையில் பெற திட்டமிட்டுள்ளது.

`

## 4.2. அண்ணாமலைப் பல்கலைக்கழகம்

**4.2.1.** 1929–ம் ஆண்டில் துவங்கப்பட்ட அண்ணாமலைப் பல்கலைக்கழகமானது ஒரு ஒருங்கிணைந்த, பல்துறை, உறைவிட பல்கலைக்கழகமாக தோற்றுவிக்கப்பட்டது. அண்ணாமலைப் பல்கலைக்கழக சட்டம் 2013–இன்படி இப்பல்கலைக்கழகம் மாநில அரசின் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டுவரப்பட்டு முறையாக நிர்வகிக்கப்பட்டு வருகிறது. தேசிய கல்வி நிறுவனங்களுக்கான தர கட்டமைப்பு (National Institute Ranking Framework) 2017–ஆம் ஆண்டின் தரவரிசைப்படி இப்பல்கலைக்கழகம் இந்திய அளவில் சிறந்த 100 பல்கலைக்கழகங்களில் 56–வது இடத்தையும், இந்திய அளவில் சிறந்த 100 மருந்தகக் கல்லூரிகளில் 13–வது இடத்தையும் பெற்றுள்ளது.

**4.2.2.** கலை, அறிவியல், கடல்சார் அறிவியல், இந்திய மொழிகள், கல்வியியல், நுண்கலை, பொறியியல் மற்றும் தொழில்நுட்பம், விவசாயம், மருத்துவம் மற்றும் பல் மருத்துவம் ஆகிய புலங்களின் கீழ் இயங்கும் 50 துறைகள் மூலம், நேரடி கல்வி முறையில் முனைவர், ஆய்வியல் நிறைஞர், முதுநிலை,

`

இளநிலை பட்டம் மற்றும் முதுநிலைப் பட்டயம் மற்றும் பட்டயம் உள்ளிட்ட படிப்புகளை வழங்குகிறது. இத்துறைகளுடன், ஊரக வளர்ச்சி, பேரிடர் மேலோண்மை, திறன்மேம்பாடு மற்றும் சுற்றுச்சூழல், சுகாதாரம் மற்றும் பாதுகாப்பு ஆகியவை தொடர்பான படிப்புகளை வழங்குவதற்கென இப்பல்கலைக்கழகத்தில் பல்வேறு சிறப்பு மையங்கள் உள்ளன.

**4.2.3.** இப்பல்கலைக்கழகத்தில் உள்ள இராஜா முத்தையா மருத்துவக் கல்லூரி மற்றும் மருத்துவமனை, இராணி மெய்யம்மை செவிலியர் கல்லூரி, இராஜா முத்தையா பல் மருத்துவக்கல்லூரி மற்றும் மருத்துவமனை ஆகியன மருத்துவம், பல் மருத்துவம் மற்றும் செவிலியர் பயிற்சி ஆகியவை தொடர்பான முதுநிலைப் பட்டம், இளநிலைப் பட்டம் / முதுநிலை பட்டயம் மற்றும் பட்டய படிப்புகளை வழங்கி வருகின்றன. இம்மருத்துவக் கல்லூரியில் 1,260 படுக்கை வசதிகொண்ட மருத்துவமனை உள்ளது.

**4.2.4.** 2016–17 ஆம் கல்வியாண்டில் இப்பல்கலைக் கழகத்தில் 21,256 மாணாக்கர்கள் (மாணவர்: 11,068, மாணவியர்: 10,188) சேர்க்கை பெற்றுள்ளனர். இவர்களில் 27 அயல்நாடுகளைச் சேர்ந்த 126 மாணாக்கர்களும் அடங்குவர்.

`

மேலும், தொலைதூரக்கல்வி இயக்ககத்தின் மாணாக்கர்களின் சேர்க்கை எண்ணிக்கை **2,14,903** ஆகும்.

**4.2.5.** தேசிய தரநிர்ணய மற்றும் மதிப்பீட்டுக் குழு **2014**–ஆம் ஆண்டில் அண்ணாமலைப் பல்கலைக்கழகத்துக்கு "A" தரநிலையை வழங்கியுள்ளது. கல்வி, ஆராய்ச்சி மற்றும் தொழில் நிறுவனங்களுடனான ஒப்பந்தம் ஆகியவை தொடர்பான சர்வ தேச ஒத்துழைப்பில் (International Collaboration) ஈடுபட்டுள்ள முதன்மையான இந்திய நிறுவனங்களில், அண்ணாமலைப் பல்கலைக்கழகம் **11**–வது இடத்தைப் பெற்றுள்ளது என ஸ்ப்ரிங்கர் நேச்சர் அறிக்கை (Springer Nature Report) தெரிவிக்கிறது. கடந்த ஐந்தாண்டுகளில் **2,630** மாணாக்கர்கள் முனைவர் பட்டமும், **1,248** மாணாக்கர்கள் ஆய்வியல் நிறைஞர் பட்டமும் பெற்றுள்ளனர். **2014** ஆம் ஆண்டிலிருந்து அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் செயல்பட்டு வரும் ஒரு திருக்குறள் இருக்கை, திருக்குறளை அடிப்படையாகக் கொண்ட செம்மொழி தமிழ் இலக்கணத்தை பரப்புவதை நோக்கமாக கொண்டுள்ளது. டாக்டர் அம்பேத்கர் அவர்களின் கொள்கைகளைப் பரப்புவதற்கும், கல்வி, மனித உரிமை மற்றும் இந்திய புலம் பெயர்ந்தோரின் சமூக பொருளாதார நிலைகள்

`

குறித்து ஆய்வு மேற்கொள்வதற்கும் டாக்டர் அம்பேத்கர் இருக்கை 2016– ஆம் ஆண்டில் நிறுவப்பட்டது.

**4.2.6.** மத்திய அரசின் அறிவியல் மற்றும் தொழில்நுட்பத் துறை இப்பல்கலைக்கழகத்தில் சீர்மிகு அறிவியல் மற்றும் பல்கலைக்கழக ஆராய்ச்சி மேம்பாடு பகுதி – I திட்டத்தின் கீழ், அறிவியல் உள்கட்டமைப்பை மேம்படுத்துவதற்காக ரூ. 15 கோடி நிதியொப்பளிப்பு செய்துள்ளது.

**4.2.7.** ஜெர்மனி, ஜப்பான், அமெரிக்கா, ஸ்காட்லாண்டு, தாய்லாந்து, சிங்கப்பூர், இலங்கை மற்றும் ஸ்வீடன் ஆகிய நாடுகளில் உள்ள நிறுவனங்களுடன் விவசாயம், பொறியியல் மற்றும் தொழில்நுட்பவியல் மருத்துவம், கலை, அறிவியல் மற்றும் கடல்சார் அறிவியல் ஆகிய துறைகள் தொடர்பாக புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் (MoU) இப்பல்கலைக்கழகத்தால் செய்யப்பட்டுள்ளன. சுரங்கத்தொழில் சார்ந்த மூன்றாண்டு பட்டயப்படிப்பு நடத்துவதற்கு மத்திய அரசின் நெய்வேலி பழுப்பு நிலக்கரி நிறுவனத்துடன் ஒரு புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ளது. தொழில் நிறுவனம் மற்றும் கல்வி

`

நிறுவனங்களுக்கு இடையேயான ஒருங்கிணைந்த செயல்பாட்டு திட்டத்தின் கீழ், இப்பல்கலைக்கழக பொறியியல் புலத்தில், முதுநிலை உலோக இணைப்பு (M.E Welding) பாடப்பிரிவினை **2016–17** ஆம் ஆண்டு அறிமுகப்படுத்தியுள்ளது. இதில் பல்வேறு தொழில் நிறுவனங்களின் ஆதரவுடன் **24** மாணவர்கள் சேர்க்கை பெற்றுள்ளனர்.

**4.2.8.** தொலைதூரக் கல்வி மூலம், **2015–16–**ஆம் கல்வியாண்டில் **9** புதிய பாடப்பிரிவுகள் ( **5** முதுநிலை பட்டயம், **2** பட்டயம் மற்றும் **2** சான்றிதழ்) துவங்கப்பட்டதுடன், **2016–17–**ஆம் கல்வியாண்டில் **44** புதிய பாடப்பிரிவுகள் (**10** முதுநிலை, **2** இளநிலை, **12** முதுநிலை பட்டயம், **19** பட்டயம் மற்றும் ஒரு சான்றிதழ்) துவங்கப்பட்டன.

**4.2.9.** ''தேசிய உயர்கல்வித் திட்டத்தின்'' மூலம் இப்பல்கலைக்கழகத்திற்கு ரூ. **20** கோடி பல்வேறு உள்கட்டமைப்பு தேவைகளுக்காக நிதியொப்பளிப்பு செய்யப்பட்டுள்ளது. இதில் பல்வேறு உள்கட்டமைப்பு தேவைகளுக்காக, ரூ. **11.56** கோடிக்கு நிர்வாக ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ளது. சீர்மிகு அறிவியல் மற்றும் பல்கலைக்கழக

`

ஆராய்ச்சி மேம்பாடு (PURSE Programme) பகுதி-II திட்டத்தின் கீழ், அறிவியல் உள்கட்டமைப்பை மேம்படுத்துவதற்காக, ரூ. **34** கோடி நிதி ஒப்பளிப்பு எதிர்பார்க்கப்படுகிறது.

**4.2.10. 2017 – 18 - ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட உள்ள செயல்பாடுகள் / திட்டங்கள்**

i) பல்கலைக்கழக நிதிநல்கைக்குழுவின் நிதி உதவியுடன் சமூக விழிப்புணர்வு குறித்த சுவாமி தயானந்த சரஸ்வதி அவர்களின் கொள்கைகளை பரப்புவதற்காக சுவாமி தயானந்த சரஸ்வதி இருக்கை ஒன்று இப்பல்கலைக்கழகத்தில் நிறுவப்படவுள்ளது.

ii) மத்திய, மாநில அரசு நிறுவனங்களின் நிதி உதவியுடன், அமைப்பு சாரா நிறுவன பணியாளர்களுக்கு, குறிப்பாக நலிவடைந்த பிரிவினர் முக்கியத்துவம் பெறுகின்ற வகையில், இப்பல்கலைக்கழகத்தின் திறன் மேம்பாட்டு மையம் மூலம் திறன் மேம்பாட்டு பயிற்சி அளிக்கப்பட உள்ளது.

`

## 4.3 மதுரை காமராசர் பல்கலைக்கழகம்

**4.3.1.** மதுரை காமராசர் பல்கலைக்கழகம், அப்பல்கலைக்கழக சட்டத்தின்படி 1965 ஆம் ஆண்டு நிறுவப்பட்டது. இப்பல்கலைக்கழகம், 745 ஏக்கர் நிலப்பரப்பில் பரந்து விரிந்த வளாகத்தை தன்னகத்தே கொண்டு, 20 புலங்களின் கீழ் 77 துறைகளைக் கொண்டு இயங்கி வருகிறது. இப்பல்கலைக்கழகத்தின் அதிகாரவரம்பிற்குட்பட்ட மதுரை, தேனி, விருதுநகர் மற்றும் திண்டுக்கல் ஆகிய 4 மாவட்டங்களில் இயங்கிவரும் 82 இணைவு பெற்ற கல்லூரிகள், 4 மாலை நேரக் கல்லூரிகள், 6 பல்கலைக்கழக உறுப்புக் கல்லூரிகள் மற்றும் 11 அங்கீகரிக்கப்பட்ட கல்வி நிறுவனங்களில் 1.5 இலட்சத்திற்கும் மேற்பட்ட மாணாக்கர்கள் பயின்று வருகின்றனர். மேலும், இப்பல்கலைக்கழக தொலைதூர கல்வி இயக்ககத்தின் மூலம் சுமார் 1.25 இலட்சம் மாணாக்கர்கள் பயின்று வருகின்றனர். பல்கலைக்கழக மானியக்குழு, புதுதில்லி, மதுரை காமராசர் பல்கலைக்கழகத்திற்கு ‘ஆற்றல்சால் பல்கலைக்கழகம்’ (University with Potential for Excellence) எனும் தகுதியினை வழங்கி இருக்கிறது.

`

**4.3.2.** 2016 - ஆம் ஆண்டுக்கான மதிப்புமிக்க இராமன் உதவித் தொகையினை பெற்றுள்ள **6** ஆசிரியர்களை கொண்ட பல்கலைக்கழகமாக இது திகழ்கிறது. திரைப்படம் மற்றும் மின்னணு ஊடகப் படிப்பு மையத்தின் மூலம் ஒருங்கிணைந்த **5** ஆண்டுகால முதுகலை திரைப்பட மற்றும் மின்னணு ஊடகப்படிப்பை வழங்கி வரும் ஒரே பல்கலைக்கழகம் என்ற பெருமையை இப்பல்கலைக்கழகம் பெற்றுள்ளது. இப்பல்கலைக்கழகமானது, பல்கலைக்கழக நிதிநல்கைக்குழுவின் உதவியோடு, உயிரி அறிவியல் துறையில் வளைதள வள மையம் (NRCBS) ஒன்றை நிறுவியுள்ளது. மேலும், இப்பல்கலைக்கழகம், சுவாமி விவேகானந்தர் பெயரிலான உயர் ஆராய்ச்சி மற்றும் கல்வி மையம் மற்றும் ஆங்கிலம், பிரெஞ்சு, சீனம் மற்றும் ஜெர்மன் மொழிகளை கற்பிப்பதற்கான அயல் மொழி ஆய்வகத்தினை பெற்றுள்ளது. மேலும், இப்பல்கலைக்கழகத்தின் தொழில் கூட்டிணைவு மையமானது, தொழிலகங்களில் பணியாற்றுவதற்கு தகுதிபடுத்தும் நோக்குடன் புதுமைகளை கற்பதற்கான பாடத் திட்டங்களை வழங்கும் பொருட்டு, பெரும் நிறுவனங்களுடன் புரிந்துணர்வு ஒப்பந்தங்களை (MOU) மேற்கொண்டுவருகிறது.

`

**4.3.3. 2017 – 18 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்படவிருக்கும் செயல்பாடுகள் / திட்டங்கள்**

i) பல்கலைக்கழகத்தின் திரைப்படம் மற்றும் மின்னணு ஊடகப் படிப்பு மையம், மத்திய மனிதவள மேம்பாட்டு அமைச்சகத்தின் உதவியுடன் ரூ. 10 கோடி மதிப்பில் "வடிவமைப்பு புதுமை மையத்தை" உருவாக்க விழைந்துள்ளது.

ii) தேசிய உயர் கல்வி திட்டத்தின் (RUSA) நிதியுதவியுடன், வளாக கம்பியில்லா தகவல் பரிமாற்றம் (Wi-Fi), மின்னாளுகை, நவீன தானியங்கி நூலகம், பல்நோக்கு மருத்துவமனை, நவீனமயமாக்கப்பட்ட விடுதி சமையலறைகள், சூரியஒளி விளக்கு, மழைநீர் சேகரிப்பு மற்றும் நவீன உடற்பயிற்சி மையம் ஆகியவை 2017 – 18 ஆம் ஆண்டில் ஏற்படுத்தப்படும்.

`

## 4.4 அண்ணா பல்கலைக்கழகம்

**4.4.1.** அண்ணா பல்கலைக்கழகமானது, **1978** ஆம் ஆண்டு, கிண்டி பொறியியல் கல்லூரி, அழகப்பா தொழில்நுட்ப கல்லூரி, சென்னை தொழில்நுட்ப நிறுவனம், கட்டடக்கலை மற்றும் திட்டமிடுதல் புலம் ஆகிய நான்கு தொழில்நுட்ப பயிலகங்களையும் தன்னகத்தே உள்ளடக்கி ஒருமைவகை பல்கலைக்கழகமாக உருவாகியது**. 2001** ஆம் ஆண்டில், அண்ணா பல்கலைக்கழகம் தமிழ்நாட்டிலுள்ள அனைத்து பொறியியல் கல்லூரிகளையும் தன்னுடன் இணைத்துக் கொண்டு இணைவு பல்கலைக்கழகமாக மாறியது**.** மீண்டும் **2010** ஆம் ஆண்டு ஒருமை வகை பல்கலைக்கழகமாக மாற்றப்பட்டது**.** பின்னர், தமிழ்நாட்டில் பொறியியல் கல்வியை அனைவருக்கும் ஒரே சீராக வழங்கிட ஏதுவாக **2012** ஆம் ஆண்டிலிருந்து மீண்டும் இப்பல்கலைக்கழகம் அனைத்து பொறியியல் கல்லூரிகளையும் தன்னுடன் இணைத்து, ஓர் இணைவு தொழில்நுட்ப பல்கலைக்கழகமாக இயங்கி வருகிறது**.**

**4.4.2.** அண்ணா பல்கலைக்கழகம் **4** வளாகங்கள் **(**சென்னை**)**, **13** உறுப்புக் கல்லூரிகள், திருச்சிராப்பள்ளி, திருநெல்வேலி, மதுரை மற்றும் கோயம்புத்தூர் ஆகிய இடங்களில் **4** மண்டல வளாகங்கள் மற்றும் **593** இணைவு பயிலகங்களை

`

தன்னகத்தே கொண்டுள்ளது. அண்ணா பல்கலைக்கழக துறைகளின் மூலமாக 29 இளநிலை பட்டப்படிப்புகள், 90 முதுநிலை பட்டப்படிப்புகளும், 16,000 மாணாக்கர்களுக்கு வழங்கப்பட்டு வருகிறது. மேலும், அண்ணா பல்கலைக்கழகத்துடன் இணைந்துள்ள கல்லூரிகளின் மூலமாக 41 இளநிலை மற்றும் 57 முதுநிலை பட்டப்படிப்புகள் 7,21,276 மாணாக்கர்களுக்கு வழங்கப்பட்டு வருகிறது. இப்பல்கலைக்கழகத்தில், 12,706 மாணாக்கர்கள் முனைவர் பட்ட படிப்பில் சேர்க்கை பெற்றுள்ளனர். இதில், 41.28 சதவிகிதம் பேர் மாணவியர் ஆவர்.

**4.4.3.** தேசிய தர மதிப்பீட்டுக் குழுவினால் (NAAC), அண்ணா பல்கலைக்கழகத்திற்கு 'A' தர மதிப்பீடு வழங்கப்பட்டுள்ளது. 2017 ஆம் ஆண்டிற்கான QS யின் (Quacquarelli Symonds) உலக பல்கலைக்கழக வரிசையில், வேதி பொறியியல் பிரிவில் அண்ணா பல்கலைக்கழகம் 201 ஆம் இடத்தில் உள்ளது. ஆசிரியர்கள் மற்றும் ஆராய்ச்சி மாணவர்களால் வெளியிடப்பட்ட ஆய்வுக் கட்டுரைகள் அடிப்படையில், 'h' குறியீடு என்று அழைக்கப்படும் ஆராய்ச்சித் தடத்தில் அண்ணா பல்கலைக்கழகம் இந்தியாவில் உள்ள பல்கலைக்கழகங்களில் 2 ஆம் இடத்தைப் பெற்றுள்ளது. இயந்திரவியல், வானூர்தி பொறியியல் மற்றும் உற்பத்தி பொறியியல் துறையில் அண்ணா

`

பல்கலைக்கழகம் உலக அளவில் **151**லிருந்து **200**வது இடத்திற்குள்ளும், தேசிய அளவில் **7** வது இடத்திலும் உள்ளது.

**4.4.4.** கடந்த ஆறு ஆண்டுகளில் **(2011 – 17)**, அண்ணா பல்கலைக்கழகம் **41** புரிந்துணர்வு ஒப்பந்தங்களை வெளிநாட்டு பல்கலைக்கழகங்கள் மற்றும் நிறுவனங்களுடனும், **39** புரிந்துணர்வு ஒப்பந்தங்களை தேசிய அளவில் உள்ள உள்நாட்டு நிறுவனங்கள் மற்றும் தொழிற்சாலைகளுடனும் கையெழுத்திட்டுள்ளது. அண்ணா பல்கலைக்கழகத்தில் ரூ. **96.18** கோடி நிதியுதவியுடன் **323** ஆராய்ச்சி திட்டப்பணிகளும், ரூ. **129.33** கோடிக்கு **5014** ஆலோசனை சேவைகளும் மற்றும் ரூ. **3.08** கோடிக்கு **8,157** பரிசோதனை பணிகளும் மேற்கொள்ளப்பட்டன. கடந்த ஆறு ஆண்டுகளில் **(2011–17)**, அண்ணா பல்கலைக்கழகத்தால் **54** கண்டுபிடிப்புகளுக்கு காப்புரிமை பெறுவதற்காக விண்ணப்பம் செய்யப்பட்டு, அதில், இதுவரை **6** தேசிய காப்புரிமைகள் பெறப்பட்டுள்ளன. **2014** ல் இருந்து **2019** ஆம் ஆண்டு வரையிலான ஐந்து ஆண்டுகளுக்கு, ரூ. **10.44** கோடி மதிப்பீட்டில் “DBT-Anna University Interdisciplinary Life Science Programme for Advance Research and Education” எனும் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. பல்கலைக்கழகத் துறைகளின்

`

**10,115** மாணாக்கர்கள் கடந்த **6** ஆண்டுகளில் வேலைவாய்ப்பு பெற்றுள்ளனர்**.**

**4.4.5.** 2017 இன் தேசிய கல்வி நிறுவனங்களின் தர வரிசைப்படுத்தும் கட்டமைப்பு (NIRF 2017) **03.04.2017**அன்று மத்திய மனிதவள மேம்பாடு அமைச்சகத்தால் வெளியிடப்பட்டது**.** அதில், பங்கெடுத்துக்கொண்ட பல்வேறு பல்கலைக்கழகங்கள் மற்றும் பயிலகங்களுக்கிடையே, அண்ணா பல்கலைக்கழகம் பல்வேறு நிலைகளில் கீழ்காணும் தகுதி நிலைகளை பெற்றுள்ளது:

- தேசிய அளவில் உள்ள பல்கலைக்கழகங்களின் தர வரிசையில் ஆறாமிடத்தில் உள்ளது**.**

- தொழில் கல்வி பயிற்றுவிக்கும் நிறுவனங்களின் பட்டியலில் **8–**ஆம் இடத்தை பெற்றுள்ளது**.**

**4.4.6. 2017–2018 இல் மேற்கொள்ளப்பட வேண்டிய நடவடிக்கைகள் / திட்டங்கள்:**

i) தேசிய உயர்கல்வி திட்டத்தின் (RUSA) கீழ் ரூ**. 10** கோடி செலவில், மாணவியர்கள் தங்கும் புதிய விடுதி ஒன்று கட்டுவதற்கும், சூரிய சக்தி மற்றும் உயிரி வாயுகளை உற்பத்தி செய்யும் அமைப்பு, கணினி மற்றும் பரிமாற்றி, புத்தகங்கள்

`

மற்றும் இதழ்கள் வாங்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

ii) தமிழக அரசின் மூலமாக புதுப்பிக்கத்தக்க ஆற்றல் மூலம் மின்சாரம் தயாரிப்பதற்கும், அதை சேமிப்பதற்கும் திறம்பட நிலையான ஆற்றல் தொழில்நுட்பம் (Sustainable Energy Technology) என்ற ஆராய்ச்சி திட்டத்தினை தேசிய உயர்கல்வி திட்டத்தின் (RUSA) கீழ் ரூ. 6.5 கோடி மதிப்பீட்டில் செயல்படுத்தப்படும்.

iii) அண்ணா பல்கலைக்கழகத்தில் ரூ. 260 கோடி செலவில் மேகக் கணினி மையம், மோட்டார் வாகன தொழில் நுட்ப மையம், சர்வதேச ஆராய்ச்சி மற்றும் பயிற்சி மையம் ஆகிய திட்டங்கள் செயல்படுத்தப்படும். ரூ. 50 கோடி செலவில் சுமார் 5,000 நபர்கள் அமரக்கூடிய மிகப்பெரிய அரங்கம் கட்டப்படும்.

`

## 4.5 பாரதியார் பல்கலைக்கழகம்

**4.5.1.** பாரதியார் பல்கலைக்கழகம், 1982 ஆம் ஆண்டு, பிப்ரவரி திங்கள், 9 துறைகளுடன் துவங்கப்பட்டது. இப்பல்கலைக்கழகத்தின் அதிகார வரம்பில் கோயம்புத்தூர், ஈரோடு, திருப்பூர் மற்றும் நீலகிரி ஆகிய மாவட்டங்கள் உள்ளன. இப்பல்கலைக்கழகம், 10 அரசு கல்லூரிகள், 3 உறுப்புக் கல்லூரிகள் (வால்பாறை, கூடலூர் மற்றும் மொடக்குறிச்சி), 16 உதவி பெறும் கல்லூரிகள் மற்றும் 86 சுயநிதி கல்லூரிகளையும் உள்ளடக்கிய 115 இணைவு கல்லூரிகளை கொண்டுள்ளது. இவற்றில் 23 தன்னாட்சிக் கல்லூரிகள் ஆகும்.

**4.5.2.** இப்பல்கலைக்கழகத்தில், 13 புலங்களைச் சார்ந்த 39 துறைகளின் மூலம் ஆய்வியல் நிறைஞர் மற்றும் முனைவர் பட்ட படிப்புகளுடன் (M.Phil & Ph.D.) 54 முதுகலை பாடப்பிரிவுகள் வழங்கப்பட்டு வருகின்றன. 2016 – 17 ஆம் கல்வியாண்டில், 1209 முதுகலை பட்ட மாணாக்கர்களும், 145 ஆய்வியல் நிறைஞர்களும் மற்றும் 219 முனைவர் பட்ட ஆய்வாளர்களும் சேர்க்கை பெற்றுள்ளனர். மேலும், தொலைதூரக் கல்வி திட்டத்தின்கீழ் வழங்கும் பல்வேறு

`

பாடத்திட்டங்களில், **38,319** மாணாக்கர்கள் சேர்க்கை பெற்றுள்ளனர். தற்போது, இப்பல்கலைக்கழக துறைகள், இணைவு கல்லூரிகள் மற்றும் தொலைதூரக்கல்வி நிறுவனம் ஆகியவற்றில் இளங்கலை, முதுகலை, பட்டயம் மற்றும் ஆராய்ச்சி பிரிவுகளில் **1,69,510** மாணாக்கர்கள் **(75,636** மாணாக்கர்கள் முறைசார் கல்வி மற்றும் **93,874** மாணாக்கர்கள் தொலைதூரக் கல்வி) பயின்று வருகின்றனர்.

**4.5.3. 2016–17** ஆம் ஆண்டிற்கான உலக அளவிலான பல்கலைக்கழக தர வரிசையில் கல்வி செயல்திறனை அடிப்படையாக கொண்டு, பாரதியார் பல்கலைக்கழகம் இந்திய அளவில் **18**வது இடத்தை பெற்றுள்ளது. தேசிய மதிப்பீடு மற்றும் தர நிர்ணய குழுமத்தால் (NAAC) கடந்த மார்ச் **2016** இல், மூன்றாவது முறையாக மறு மதிப்பீட்டின் மூலம் மீண்டும் ‘A’தரமதிப்பீடு இப்பல்கலைக்கழகத்திற்கு வழங்கப்பட்டுள்ளது. **2016–17** ஆம் ஆண்டில், மத்திய அரசின் மனித வளமேம்பாட்டுத் துறையின் கீழ் உள்ள தேசிய கல்வி நிறுவனங்களுக்கான தரவரிசை கட்டமைப்பு (NIRF) இப்பல்கலைக்கழகத்தை இந்திய அளவில் **28**வது இடத்திலும், மாநில அளவில் **6**வது இடத்திலும் தர நிர்ணயம் செய்து

`

அங்கீகரித்துள்ளது. பாரதியார் பல்கலைக்கழகம், ஸ்கோபஸ் தகவலின்படி அதிகபட்சமாக 38 புள்ளிகளுடன் உயர்தரமான "h" வரிசை எண்ணுடன், 11,749 மேற்கோள்களையும் மற்றும் 2011 வெளியீடுகளையும் பெற்று சிறந்து விளங்குகிறது. மேலும் இந்திய அரசின் டிஜிட்டல் நிதி கல்வியறிவு திட்டத்தினை (VISAKA) சிறப்பாக நடைமுறைப்படுத்திய பல்கலைக்கழகங்களில், இப்பல்கலைக்கழகம் இரண்டாம் இடத்தை பெற்றுள்ளது.

### 4.5.4. 2017 – 18 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப் படவுள்ள செயல்பாடுகள் / திட்டங்கள்

➢ பாரதியார் பல்கலைக்கழகத்திற்கான மேலாண்மை அமைப்பினை வடிவமைத்து, மேம்படுத்தி அதனை ரூ. 117 இலட்சம் செலவில் நடைமுறைப்படுத்த இப்பல்கலைக்கழகம் திட்டமிட்டுள்ளது. இவ்வமைப்பானது, புள்ளி விபரங்களை ஒருங்கிணைத்தல் மற்றும் துல்லியமான தகவல்களை குறித்த நேரத்தில் அளித்து தெளிவான முடிவுகளை மேற்கொள்ள வழிவகுக்கும்.

`

## 4.6 பாரதிதாசன் பல்கலைக்கழகம்

**4.6.1.** பாரதிதாசன் பல்கலைக்கழகம் 1982 ஆம் ஆண்டு நிறுவப் பெற்றது. இப்பல்கலைக்கழகத்திற்கு தேசிய தர மதிப்பீட்டு குழுவின் 'A' தரச் சான்றிதழ் மற்றும் பல்கலைக்கழக நிதிநல்கைக் குழுவின் 12 (B) அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது. இப்பல்கலைக்கழகத்திலுள்ள 21 புலங்கள், 40 துறைகள் மற்றும் 23 சிறப்பு மையங்கள் மூலம் 100க்கும் மேற்பட்ட பாடத் திட்டங்கள் நடத்தப்பட்டு வருகின்றன. இவை தவிர, இப்பல்கலைக்கழகத்தின் கீழ் 3 மாதிரி கல்லூரிகள், 6 உறுப்புக் கல்லூரிகள், 1 மாதிரி உறுப்புக் கல்லூரி, 1 முதுகலைப்பட்ட விரிவாக்க மையம், 19 அரசுக் கல்லூரிகள், 19 அரசு உதவிபெறும் கல்லூரிகள், 78 சுயநிதி கல்லூரிகள் உள்ளன. இவற்றில் 22 கல்லூரிகள் தன்னாட்சிக் கல்லூரிகள் ஆகும்.

**4.6.2.** கடந்த ஐந்து ஆண்டுகளில், இப்பல்கலைக்கழக ஆசிரியர்களால் ஏறத்தாழ 2100 ஆய்வுக் கட்டுரைகள் உலகத்தரம் வாய்ந்த ஆய்வு இதழ்களில் வெளியிடப்பட்டுள்ளதுடன், பல்வேறு துறைகளில் உயர்தரமிக்க ஆய்வுகளும் மேற்கொள்ளப் பட்டுள்ளன. இப்பல்கலைக்கழகத்தின் h-index தரநிலை

`

72 ஆகும். இப்பல்கலைக்கழகம், கற்றல் வசதிகளை நவீனப்படுத்தி, வழக்கமான வகுப்பறைகளை தொழில்நுட்ப வசதிகளுடன் கூடிய நவீன வகுப்பறைகளாக மாற்றியுள்ளது. இப்பல்கலைக்கழகத்தின் நூலகம், தகவல் தொடர்பு தொழில்நுட்ப (ICT) அடிப்படையிலான மேம்படுத்தப்பட்ட தகவல் சேவைகளுடன் நவீனப்படுத்தப் பட்டுள்ளது. இதன்மூலம் ஆற்றல் மிக்க நூலக வலைதளத்தின் வழியாக டிஜிட்டல் நூலகத்தை அணுகி, மின் நூல்கள், மின் இதழ்கள், பாடத்திட்டங்கள், மின் ஆய்வுக் கட்டுரைகள், பகுப்பாய்வு மென்பொருள் முதலிய வசதிகளை பல்கலைக்கழகத் துறைகள், உறுப்பு / மாதிரி மற்றும் இணைவு பெற்ற கல்லூரிகள் எளிதாக பெற இயலும். அறிவியல் கல்வியில் பல்கலைக்கழக ஆராய்ச்சியை மேம்படுத்துவதற்கான திட்டத்தின் கீழ் (**PURSE**) பல்கலைக்கழகத்தின்

உள்கட்டமைப்பு வசதிகள் மற்றும் முதலீட்டு சொத்துருவாக்கத்தின் பொருட்டு ரூ. 17.35 கோடியும், கால்நடை அறிவியல், உயிரிவேதியியல், உயிரிமருத்துவ அறிவியல், வேதியியல், கணிதம், நுண்ணுயிரியல், இயற்பியல் மற்றும் தாவர அறிவியல் ஆகிய துறைகளுக்கு அறிவியல் தொழில் நுட்பத்துறையின் அறிவியல் தொழில்நுட்ப மேம்பாட்டு நிதியிலிருந்து ரூ. 2.90 கோடியும் மற்றும் மாற்றுவழி

`

விலங்குப் பரிசோதனை தேசியமையத்திற்கு, UGC தனது தனிச்சிறப்பு புலங்களில் சிறப்புத் திறன் கொண்ட மையம் (CPEPA) என்ற திட்டத்தின் கீழ் ஆராய்ச்சியினை மேற்கொள்வதற்கு ரூ. 5 கோடியும் பெற்றுள்ளது. இப்பல்கலைக்கழகத்தின் வசதிகளை மேம்படுத்தும் பொருட்டு, பல்கலைக்கழக நிதிநல்கைக் குழுவின் பன்னிரண்டாம் திட்டத்தின் மூலம் ரூ. 17.06 கோடி பெறப்பட்டுள்ளது. இப்பல்கலைக்கழகம், தமிழக அரசின் நிதியுதவியின் மூலம், தொலை உணர்வு மைய ஆய்வகத்தினை தரம் உயர்த்தியுள்ளதுடன், மாற்றுத் திறனாளிகளுக்கான தகவல் தொடர்பு தொழில்நுட்பத்தில் செயலாக்கப்படும் பயிற்சி மையத்தையும் நிறுவியுள்ளது.

**4.6.3.** இப்பல்கலைக்கழகம் 10 பாடப்பிரிவுகளுக்கான பாடத் திட்டங்களை உலகத்தரத்திற்கு உயர்த்தும் பொருட்டு, உலகத் தரம் வாய்ந்த பாடத்திட்டப் பிரிவுகளை நிறுவியுள்ளது. பல்கலைக்கழக நிதிநல்கைக்குழுவின் பகுதியளவு நிதியுதவியுடன் ரூ. 44 இலட்சம் செலவில் ஓர் உள் விளையாட்டு அரங்கமும், ரூ. 36 இலட்சம் செலவில் இரண்டு செயற்கை டென்னிஸ் ஆடுகளங்களும் நிறுவப்பட்டுள்ளன. இப்பல்கலைக்கழகத்தின் தொழில் முனைவோர் சுய வேலை

`

மேம்பாட்டு நிறுவனத்தால் (IECD), பல்கலைக்கழக நிதிநல்கைக் குழுவின் தீன்—தயாள் உபாத்யாய அறிவு சேகரம் மற்றும் திறன்மிகு மனிதசெயல்பாடுகள் மற்றும் வாழ்வாதார மேம்பாட்டு திட்டத்தின் கீழ் ரூ. 3.5 கோடி பெறப்பட்டு, தீன்—தயாள் உபாத்யாய கௌஷல் மையம் ஏற்படுத்தப்பட்டுள்ளது. இப்பல்கலைக்கழத்தின் வணிக மேம்பாட்டு மையமானது, சான்றிதழ், பட்டய மற்றும் முதுகலைப் பட்ட படிப்புகளை வழங்கும் பொருட்டு, சிறப்பு நிறுவனங்கள், முகமைகள் மற்றும் மருத்துவமனைகளுடன் 17 புதிய புரிந்துணர்வு ஒப்பந்தங்களில் கையெழுத்திட்டுள்ளது. இப்பல்கலைக்கழகம், புரட்சிகரத் தலைவர்கள் மற்றும் சமூக சிந்தனையாளர்கள் புலம் ஒன்றினை நிறுவியுள்ளது. 2016 – 17 ஆம் ஆண்டு, பாரதிதாசன் மேலாண்மை புலத்தால் முதுகலை வணிக நிர்வாக பாடப்பிரிவு தொடங்கப்பட்டு, அதற்கான மாணவர் சேர்க்கை தமிழ்நாடு பொது நுழைவுத் தேர்வு மூலம் நடைபெற்றது.

### 4.6.4. 2017 –18ஆம் ஆண்டில் மேற்கொள்ளப் படவுள்ள செயல்பாடுகள் / திட்டங்கள்

i) பொது ஆய்வக கருவிகள் வசதிக்கான கட்டடம் அமைத்தல்

`

ii) பல்கலைக்கழக முதன்மை வளாகத்தில் பன்னாட்டு மாணவர்களுக்கான விடுதி கட்டடம் அமைத்தல்

iii) ஓலைச் சுவடிகள் மற்றும் பண்டைய புத்தகங்களை மின் அச்சுப்படுத்துவதற்கான வசதிகளை உருவாக்குதல்.

`

## 4.7 அன்னை தெரசா மகளிர் பல்கலைக்கழகம்

**4.7.1.** கொடைக்கானலில் அன்னை தெரசா மகளிர் பல்கலைக்கழகம் 1984ஆம் ஆண்டு தோற்றுவிக்கப்பட்டது. “சமநிலையை நோக்கி” என்பது பல்கலைக்கழகத்தின் பொன்மொழி ஆகும். இப்பல்கலைக்கழகம் உயர்கல்வி மூலம் மகளிர்க்கு அதிகாரமளிப்பதன் வழியாக சமநிலையை அடையக் கருதுகிறது. பல்கலைக்கழக உருவாக்கச் சட்டத்தில் குறிப்பிட்டபடி (1) மாநிலத்தில் மகளிர் கல்வியை எல்லா நிலைகளிலும் செயல் படுத்துதல் (2) மகளிருக்கான ஆராய்ச்சி வசதிகளைப் பெருக்குதல் (3) ஆலோசனை சேவைகளை நல்குவதன் மூலம் சமூகப் பொறுப்புகளை நிறைவு செய்தல் ஆகியவற்றை பல்கலைக்கழகம் மேற்கொண்டு வருகிறது. இப்பல்கலைக்கழகத்தில், பதினேழு துறைகளும், சென்னை, மதுரை மற்றும் கோயம்புத்தூர் ஆகிய இடங்களில் மூன்று ஆய்வு மற்றும் விரிவாக்க மையங்களும் செயல்பட்டு வருகின்றன. இப்பல்கலைக்கழகத்துடன் 2 உறுப்பு கல்லூரிகள், 5 சுயநிதி கல்லூரிகள், 2 அரசுக் கல்லூரிகள், 2 அரசு உதவி பெறும் கல்லூரிகள் மற்றும் 8 சமுதாயக் கல்லூரிகள் இணைவு பெற்றுள்ளன. 2016 – 17ஆம் ஆண்டில்

`

பல்கலைக்கழகம் மற்றும் 2 உறுப்பு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் 1,143 மாணவியர் பயின்று வருகின்றனர்.

**4.7.2.** 2016–ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம், கோயம்புத்தூரில் ஆராய்ச்சி மற்றும் விரிவாக்க மையம் தோற்றுவிக்கப்பட்டது. இம்மையத்தில் பல்கலைக்கழக நிதிநல்கைக் குழுவால் வழங்கப்பட்ட புதிய பாடப்பிரிவான தொழில் அறவியல் ( Professional Ethics) என்ற முதுகலை பட்டயப்படிப்பினை ரூ. 24 இலட்சம் மதிப்பீட்டில் தொடங்கப்பட்டுள்ளது. தேசிய உயர் கல்வி திட்டத்தின் (RUSA) கீழ் வழங்கப்பட்ட ரூ. 2.50 கோடியிலிருந்து இம்மையத்தின் உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகிறது.

**4.7.3.** 2010, 2011, 2013, 2014, 2015 மற்றும் 2016 ஆகிய ஆண்டுகளின் சிறந்த ஆய்வுக்கட்டுரை விருது, 2013 ஆம் ஆண்டில் சிறந்த கல்வியாளர் விருது மற்றும் சிறந்த ஆய்வேட்டிற்கான விருது, 2014 ஆம் ஆண்டிற்கான இளம் விஞ்ஞானி விருது, 2015 ஆம் ஆண்டில் டாக்டர் அப்துல் கலாம் வாழ்நாள் சாதனையாளர் தேசிய விருது, 2015 ஆம் ஆண்டிற்கான சிறந்த ஆசிரியர் விருது, 2016 ஆம்

`

ஆண்டிற்கான இந்தியாவின் பெருமைக்குரியவர் சர்வதேச விருது, 2016 ஆம் ஆண்டிற்கான தேசிய பெருமையாளர் விருது, 2016 ஆம் ஆண்டிற்கான சிறந்த அறிவியலாளர் விருது மற்றும் 2016 ஆம் ஆண்டிற்கான சிறந்த அறிஞருக்கான டாக்டர் இராதாகிருஷ்ணன் விருது ஆகிய விருதுகளை இப்பல்கலைக்கழகம் பெற்றுள்ளது.

**4.7.4.** இப்பல்கலைக்கழகம் விளையாட்டு முன்னேற்றத்திற்கு மிகுந்த முக்கியத்துவம் அளிக்கிறது. 2013 மற்றும் 2016 ஆம் ஆண்டுகளுக்கிடையில் தேசிய மற்றும் மாநில அளவில் ரூ. 2.88 இலட்சம் பணப்பரிசுகளையும் மற்றும் 274 பதக்கங்களையும் இப்பல்கலைக்கழக விளையாட்டு வீராங்கனைகள் பெற்றுள்ளனர். இப்பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த 5 விளையாட்டு வீராங்கனைகள் இரயில்வே துறையிலும், 10 விளையாட்டு வீராங்கனைகள் மாநில காவல்துறையிலும் மற்றும் 12 விளையாட்டு வீராங்கனைகள் காவல் பயிற்சிக்கான துணை ஆய்வாளர்களாகவும் உள்ளனர்.

`

## 4.8 அழகப்பா பல்கலைக்கழகம்

**4.8.1. 1985–**ஆம் ஆண்டு அழகப்பா பல்கலைக்கழகம் தோற்றுவிக்கப்பட்டது. தேசிய தர நிர்ணயக் குழுமத்தின் மூன்றாம் சுற்று மதிப்பீட்டில், '**A+**' தரத்தினை **3.64** தரப்புள்ளிகளுடன் பெற்றுள்ளது. அழகப்பா பல்கலைக்கழகம், தமிழ்நாட்டில் இத்தகைய தரத்தினைப் பெற்றுள்ள முதல் பல்கலைக்கழகமாகும். அழகப்பா பல்கலைக்கழகம், இந்திய பல்கலைக்கழகங்களின் கூட்டமைப்பில் உறுப்பினராகவும், காமன்வெல்த் பல்கலைக்கழகங்களின் கூட்டமைப்பில் உறுப்பினராகவும் இருக்கிறது. இப்பல்கலைக்கழகத்தின் அதிகாரவரம்பிற்குள் இராமநாதபுரம் மற்றும் சிவகங்கை மாவட்டங்கள் உள்ளன. அழகப்பா பல்கலைக்கழகத்தில், **34** துறைகளை உள்ளடக்கிய **5** புலங்கள், **9** இயக்குநரகங்கள் / மையங்கள் மற்றும் **2** கல்வியியல்/உடற்கல்வியியல் உறுப்பு கல்லூரிகள் உள்ளன. மேலும், இப்பல்கலைக்கழகத்தின்கீழ், **33** இணைப்புக் கல்லூரிகளும், **6** மாலை நேரக் கல்லூரிகளும், பரமக்குடியில் ஒரு பல்கலைக்கழக மாதிரி உறுப்பு கலை மற்றும் அறிவியல் கல்லூரியும் செயல்பட்டு வருகின்றன.

`

**4.8.2.** பல்கலைக்கழகத் துறைகளில் 151 பாடப்பிரிவுகளும், இணைப்புக் கல்லூரிகளில் 117 பாடப்பிரிவுகளும், தொலைநிலைக் கல்வியில் 58 பாடப்பிரிவுகளும் மற்றும் இணைவுக் கல்வித்திட்டத்தின் வாயிலாக 83 பாடப்பிரிவுகளும் வழங்கப்பட்டு வருகின்றன. தரமான கல்வியினை உறுதி செய்யும் வகையில் பல்கலைக்கழகம் மற்றும் இணைப்புக் கல்லூரிகளின் அனைத்துப் பாடப்பிரிவுகளிலும் பருவ முறை நடைமுறையை பின்பற்றி தொடர் உள் மதிப்பீடு முறையும், விருப்பத்தின் அடிப்படையிலான பாடத்தெரிவு முறையும் நடைமுறைப் படுத்தப்பட்டு வருகின்றது. பல்கலைக்கழகத் துறைகளில் 4,730 மாணாக்கர்கள், பல்கலைக்கழகத்தின் இணைவுக் கல்லூரிகளில் 44,881 மாணாக்கர்கள் கல்வி பயின்று வருகிறார்கள். இப்பல்கலைக்கழகத்தில், தற்பொழுது, 226 ஆசிரியர்களும், 222 நிர்வாக / தொழில்நுட்ப பணியாளர்களும் பணிபுரிந்து வருகின்றனர்.

**4.8.3.** அழகப்பா பல்கலைக்கழக தொலைநிலைக் கல்வி இயக்குநரகத்தின் மூலம் 130 படிப்பு மையங்கள் தமிழ்நாட்டில் செயல்பட்டு வருகின்றன. தொலைநிலைக் கல்வியில் சுமார் 54,000 மாணாக்கர்கள் பதிவு செய்துள்ளனர். இப்பல்கலைக்கழகத்தில், பல்கலைக்கழக மானியக்குழுவின்

`

நிதிநல்கை குழுமத்தின் சிறப்பு உதவித் திட்டத்தின்கீழ் (UGC–Special Assistance Programme) ஆறு துறைகளும், மத்திய அரசின் அறிவியல் மற்றும் தொழில் நுட்பத்துறையின் அறிவியல் மற்றும் தொழில் நுட்ப வசதிகள் மேம்பாட்டிற்கான திட்டத்தின் (DST-FIST) நான்கு துறைகளும் செயல்பட்டு வருகின்றன.

**4.8.4.** கடந்த ஆறு ஆண்டுகளில், பல்கலைக்கழகத்தில், ஆற்றல் அறிவியல், வரலாறு, தாவரவியல், நுண் உயிரியியல், சிறப்புக் கல்வியியல் மற்றும் புணர்வாழ்வு அறிவியல், நுண்கலைகள், உணவக அறிவியல் மற்றும் விடுதி மேலாண்மை, திறன் மேம்பாடு, சமூகப்பணியியல், இடப்பெயர்வு மேலாண்மை, கணினி அறிவியல், பன்னாட்டு வணிகம் போன்ற 12 புதிய துறைகள் துவங்கப்பட்டுள்ளன. அழகப்பா பல்கலைக்கழகம், அமெரிக்கா, இங்கிலாந்து, ஜப்பான், இத்தாலி, மெக்சிகோ, ஆஸ்திரேலியா, பின்லாந்து, செக். குடியரசு மற்றும் கொரியா ஆகிய நாடுகளைச் சார்ந்த 24 பல்கலைக்கழகங்கள் மற்றும் ஆராய்ச்சி மையங்களுடன் கூட்டு ஆராய்ச்சி மேம்பாட்டிற்காக புரிந்துணர்வு ஒப்பந்தங்களை மேற்கொண்டுள்ளது. பல்கலைக்கழக மானியக் குழுவின் புதுமைப் பாடத் திட்டத்தின் கீழ், அதன்

`

நிதியுதவியுடன், இளநிலை கல்வியில் ‘‘சிறப்புக் கல்வியியல்’’ (Special Education), முதுநிலைப் பட்டயப்படிப்பில் ‘‘மதிப்புக்கூட்டு வரி மற்றும் சேவை வரி’’ (PG Diploma in VAT and Service Tax), ‘‘பார்மோகோஜெனாமிக்ஸ்’’ (PG Diploma in Structural Pharmacogenomics) மற்றும் முதுநிலை இடப்பெயர்வு மேலாண்மை “MBA (Logistics Management)” படிப்புகளும், அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன. அழகப்பா பல்கலைக்கழகம், தரமான உயர்கல்வி மற்றும் ஆராய்ச்சிப் பணிகளுக்கு ISO 9001 : 2015 தரச் சான்றிதழைப் பெற்றுள்ளது. மேலும், தேசிய தூய்மைக் கல்வி மற்றும் ஆராய்ச்சி நிறுவனம் (NICER), புதுதில்லி, அழகப்பா பல்கலைக்கழகத்திற்கு ‘‘உலகத் தூய்மை மற்றும் பசுமையான பல்கலைக்கழக வளாக விருது ’’ **(2016)** மற்றும் உலகச் சுற்றுச்சூழல் மற்றும் வாழ்வாதார விருதினை **(2017)** வழங்கி சிறப்பித்துள்ளது. கடந்த ஐந்து ஆண்டுகளில், பல்கலைக்கழகத்தின் “h” index என்பது **22** லிருந்து **53** ஆக உயர்ந்துள்ளது.

**4.8.5.** அழகப்பா பல்கலைக்கழகம், புதுமை முயற்சிகளையும், தொழில்நுட்பக் காப்புரிமைகளையும் ஊக்கப்படுத்துகிறது. கடந்த **5** ஆண்டுகளில், அழகப்பா

`

பல்கலைக்கழகத்தின் உயிரித் தொழில்நுட்பத்துறை, தொழிலக வேதியியல் துறை, இயற்பியல் துறை மற்றும் கடலியல் மற்றும் கடலோரவியல் துறை பேராசிரியர்களின் மூலமாக 22 காப்புரிமைகள் பதிவு செய்யப்பட்டுள்ளன. அவற்றில் இரண்டு காப்புரிமைகள் வெளியிடப்பட்டுள்ளன.

**4.8.6.** ரூ. 65 இலட்சம் செலவில் தொடங்கப்பட்டுள்ள மாற்றுத்திறனாளிகளுக்கான விளையாட்டு மையத்தில் தகுந்த பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது. அழகப்பா பல்கலைக்கழக மாற்றுத்திறனாளிகளுக்கான விளையாட்டு மையத்திலிருந்து பயிற்சி பெற்ற 20 வீரர்கள், 17 தங்கம், 8 வெள்ளி, 5 வெண்கலப் பரிசுகளை, தேசிய அளவிலான விளையாட்டுப் போட்டிகளில் பெற்றுள்ளனர். ஆகஸ்டு, 4–13, 2017 இல் கனடாவில் நடைபெற உள்ள உலக குள்ளர்களுக்கான விளையாட்டுப் போட்டியில் கலந்து கொள்ள பாரா விளையாட்டு மையத்தின் இருவர் தேர்வு செய்யப்பட்டுள்ளனர்.

**4.8.7.** 2016 – 17 ஆம் ஆண்டில், இப்பல்கலைக்கழகத்தின் மையநூலகத்தில் மாணவர்கள் துரிதமாக நூல்களின் இடத்தை அறிந்து கொள்ள, வசதியான முழுமையான தானியங்கி முறையிலான RFID வசதி உட்பட அனைத்து

`

வசதிகளும் ஏற்படுத்தப்பட்டுள்ளன. பத்மபூஷன் டாக்டர் ஆர்.எம். அழகப்பச் செட்டியார் அவர்களின் அளப்பரிய மற்றும் மதிப்பிடமுடியாத கல்விச் சேவையினைப் பாராட்டும் வகையில் வள்ளல் அழகப்பர் அருங்காட்சியகம், ரூ. 79 இலட்சம் செலவில் நிறுவப்பட்டுள்ளது. தமிழ்ப் பண்பாட்டினை மேம்படுத்தவும், தமிழ்க் கலாச்சாரத்தினை வளர்த்திடவும் பல்கலைக்கழகத்தில் தமிழ்ப் பண்பாட்டு மையம் தொடங்கப்பட்டுள்ளது. மேலும், தமிழ் பண்பாட்டு அருங்காட்சியகம் ஒன்று ரூ. 50 இலட்சம் செலவில் நிறுவப்பெற்று, தமிழ் மக்களின் கலாச்சாரம், பண்பாடு மற்றும் தமிழ் மொழியினை பறைசாற்றும் வகையிலான பொருள்கள் மற்றும் அரிதான புராதன பொருள்களும் திரட்டப் பெற்று காட்சிப்படுத்தப்பட்டுள்ளது சிறப்பம்சமாகும். அறிவியல் கருவிகள் மையம் இப்பல்கலைக்கழகத்தின் அறிவியல் வளாகத்தில் மிகக் சிறந்த முறையில் நிறுவப்பட்டுள்ளது.

### 4.8.8. 2017 – 18 – ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்படவுள்ள செயல்பாடுகள் / திட்டங்கள்

i) பன்னாட்டு ஆய்வுத்திட்டங்கள் பெறுவதற்கும், மாணவர்– ஆசிரியர் பரிமாற்ற எண்ணிக்கையினை அதிகரிக்கவும் அழகப்பா பல்கலைக்கழக

`

பன்னாட்டு உறவுகள் மையத்தின் வழியாக தக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட உள்ளது.

ii) பல்கலைக்கழக முன்னாள் மாணாக்கர்களின் துணையுடன் பல்கலைக்கழக மாணவர்களுக்கான வேலைவாய்ப்புகளை மேம்படுத்தவும், வேலைவாய்ப்புகளுக்கான உரிய பயிற்சி அளிக்கவும் தக்க முயற்சி மேற்கொள்ளுதல்.

iii) பல்கலைக்கழகம் மற்றும் தொழில் நிறுவனங்களின் உறவுகளை மேம்படுத்தி, தொழில் நிறுவனங்களுக்கான தொழில்நுட்பப் பிரச்சினைகளுக்கு தீர்வு காணவும், புதிய தொழில் நுட்பங்களை அறிமுகப்படுத்தவும் உரிய திட்டங்களை வகுத்தல்.

`

## 4.9 மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகம்

**4.9.1.** புகழ் பெற்ற தமிழறிஞரும் தத்துவ ஆசிரியருமான சுந்தரம்பிள்ளை (1855-1897) அவர்களின் பெயரில் மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகம் 1990-இல் நிறுவப்பட்டது. இப்பல்கலைக்கழகம் திருநெல்வேலி, தூத்துக்குடி, கன்னியாகுமரி ஆகிய மூன்று தென்கோடி மாவட்ட மக்களின் உயர்க்கல்வித் தேவையை நிறைவு செய்யும் வகையில் இயங்கி வருகின்றது.

**4.9.2.** மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகம், 4 உறுப்புக் கல்லூரிகள், 6 பல்கலைக்கழக கல்லூரிகள், நாகர்கோவிலில் ஒரு முதுநிலை விரிவாக்க மையம், 73 இணைவுக் கல்லூரிகள், (4 அரசு கல்லூரிகள், 25 அரசு உதவி பெறும் கல்லூரிகள் 7 உதவி பெறும் தன்னாட்சி கல்லூரிகள் மற்றும் 37 சுயநிதி கல்லூரிகள்) ஆகியவற்றை உள்ளடக்கியது. இப்பல்கலைக்கழகத்தில் 26 துறைகள் /மையங்கள், 22 சமுதாயக் கல்லூரிகள், 67 கல்வி விரிவாக்க மையங்கள் உள்ளன. பல்கலைக்கழக துறைகளில் உள்ள மாணாக்கர்களின் எண்ணிக்கை 1,372 (மாணவர்கள் : 366 மாணவிகள் : 1, 006). உறுப்பு / பல்கலைக்கழக கல்லூரிகளின் மாணாக்கர்களின் எண்ணிக்கை 6,484 (மாணவர்கள் : 1,794

`

மாணவிகள் : **4,690). 95,322** மாணாக்கர்கள் இணைவு கல்லூரிகளில் பயில்கின்றனர் (மாணவர்கள் : **38,129** மாணவிகள் : 57,193).

**4.9.3.** இப்பல்கலைக்கழகம் **48** பாடப்பிரிவுகளை வழங்கும் தொலைதூரக் கல்வி இயக்ககத்தைக் கொண்டுள்ளது. இவ்வியக்ககத்தின் வழியாக **17,966** மாணாக்கர்கள் சேர்க்கை பெற்றுள்ளனர்.

### 4.9.4. 2017 – 18 ஆம் ஆண்டுக்கான செயல்பாடுகள் / திட்டங்கள்

i) **2017 – 18** ஆம் கல்வியாண்டில் இணைய பாதுகாப்பு மற்றும் தரவுப் பகுப்பாய்வு ஆகிய இரு முதுநிலை பாடப்பிரிவுகள் அறிமுகப்படுத்தப்படவுள்ளன.

ii) அனைத்து பாடப்பிரிவுகளிலும் சேருகின்ற திருநங்கைகளுக்கு, இலவசமாகக் கல்வி வழங்கப்பட உள்ளது. கல்வியில் சிறந்த திருநங்கைகளுக்கு படிப்புதவித்தொகையாக மாதம் ரூ. **3,000** வீதம் வழங்கப்படும்.

iii) கீழ்காணும் பணிகள் இப்பல்கலைக்கழகத்தில் நடைபெற்று வருகின்றன:-

1) ரூபாய் **138** இலட்சம் மதிப்பீட்டில் உள்விளையாட்டு அரங்கம் கட்டுதல்.

`

2) ரூபாய் 60 இலட்சம் மதிப்பீட்டில் உடற்பயிற்சிக் கூடம் கட்டுதல்.

3) பல்கலைக்கழக முதன்மை வளாகத்தில் ரூபாய் 1 கோடி மதிப்பீட்டில் பெண்கள் விடுதி கட்டுதல்.

4) ரூபாய் 5 கோடி மதிப்பீட்டில் வாயிற்கதவு, புல்வெளிஅமைத்தல், வடிகால்வசதி, சாலைப் பராமரிப்பு ஆகியபணிகள் மேற்கொள்ளுதல்.

5) நாகலாபுரம், கன்னியாகுமரி மற்றும் கடையநல்லூரில் உள்ள பல்கலைக்கழக உறுப்பு கல்லூரிகளுக்கென புதிய கட்டடங்கள் தலா ரூபாய் 7.25 கோடி மதிப்பீட்டில் கட்டுதல்.

6) ரூபாய் 2.50 கோடி மதிப்பீட்டில் பல்கலைக்கழக வளாகத்தில் பணியாளர்கள் குடியிருப்புக் கட்டடம் கட்டுதல்.

7) கன்னியாகுமரி மாவட்டம், இராஜாக்கமங்கலம் கடல்சார் அறிவியல் மையத்தில் ரூபாய் 75 லட்சம் மதிப்பீட்டில் பெண்கள் விடுதிக் கட்டுதல்.

8) சங்கரன்கோவில், பணகுடி, புளியங்குடி மற்றும் திசையன்விளை ஆகிய இடங்களில் உள்ள பல்கலைக்கழக கல்லூரிகளுக்கு ரூபாய் 4 கோடி மதிப்பீட்டில் சொந்தக் கட்டடங்கள் கட்டுதல்.

9) பல்கலைக்கழக வளாகத்தில் ரூபாய் 1 கோடி மதிப்பீட்டில் 500KVA மின்மாற்றி அமைத்தல்.

`

# 4.10 பெரியார் பல்கலைக்கழகம்

**4.10.1.** பெரியார் பல்கலைக்கழகம் 1997 ஆம் ஆண்டு தோற்றுவிக்கப்பட்டது. பல்கலைக்கழக நிதி நல்கைக் குழுவின் 2(f), 12(B) அங்கீகாரத்தை இப்பல்கலைக்கழகம் பெற்றுள்ளது. CGPA இன் 3.15 புள்ளிகளை பெற்று இப்பல்கலைக்கழகம் தேசிய தர மதிப்பீட்டு குழுமத்தின் (NAAC) 'A' தரச்சான்றினை பெற்றுள்ளது. மனிதவள மேம்பாட்டுத் துறையின் NIRFன் தரவரிசைப் பட்டியலில் இந்தியாவில் உள்ள 724 பல்கலைக்கழகங்களில் 85$^{வது}$ இடத்தினை இப்பல்கலைக்கழகம் பெற்றுள்ளது. இப்பல்கலைக்கழகம் 27 துறைகள் அடங்கிய 5 அறிவியல் புலங்கள், 3 கலைப் புலங்கள் கொண்டதாக வளர்ந்துள்ளது. இத்துறைகளின் வாயிலாக, 29 முதுநிலைப் பாடப்பிரிவுகளும், 28 ஆராய்ச்சிப் பாடப்பிரிவுகளும் நடத்தப்படுகின்றன. இப்பல்கலைக் கழகத்தின் பல்வேறு துறைகளில் தற்போது 164 ஆசிரியர்கள் பணிபுரிகின்றனர். மேட்டூர், பென்னாகரம், அரூர், பாப்பிரெட்டிப்பட்டி மற்றும் எடப்பாடி ஆகிய 5 பல்கலைக்கழக உறுப்புக் கல்லூரிகளில் 28 ஆசிரியர்களும் மற்றும் தர்மபுரியில் உள்ள முதுநிலை பட்ட மையத்தில் 20 ஆசிரியர்களும் பணிபுரிகின்றனர். தற்போது சேலம், நாமக்கல், தர்மபுரி மற்றும்

`

கிருஷ்ணகிரி ஆகிய மாவட்டங்களில் உள்ள 96 கல்லூரிகள் இப்பல்கலைக்கழகத்துடன் இணைவு பெற்று 2 இலட்சம் மாணாக்கர்களின் எண்ணிக்கையுடன் இயங்கி வருகின்றன.

4.10.2. கடந்த ஆறு வருடங்களில், இப்பல்கலைக்கழகத்தில் 7 புதிய துறைகளும், 9 புதிய பாடப்பிரிவுகளும் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன. இதில் 5 துறைகள் DST-FIST என்ற தகுதி நிலையினையும் மற்ற 3 துறைகள் UGC- SAP என்ற தகுதி நிலையினையும் பெற்றுள்ளன. இப்பல்கலைக்கழக உறுப்புக் கல்லூரிகளுக்கு ரூ. 29.75 கோடி செலவில் கட்டடங்கள் கட்டப்பட்டுள்ளன. இப்பல்கலைக்கழக வளாகத்தில் ரூ. 16 கோடி செலவில் கூடுதல் கட்டடங்கள் கட்டப்பட்டுள்ளன. புதியதாக 11 பாடப்பிரிவுகளுக்கு இணைவு அளிக்கப்பட்டுள்ளன. இப்பல்கலைக்கழகம் பல்வேறு தொழிற்சாலைகள் மற்றும் நிறுவனங்களுடன் 25 புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் (MoU) கையெழுத்திட்டுள்ளது. இப்பல்கலைக்கழகத்தின் வணிகவியல் துறையானது, ரூ. 1.67 கோடி செலவில் அயல்நாட்டு கூட்டிணைவு கல்விக்காக (Foreign Collaboration Programme) இங்கிலாந்து நாட்டுடன் இணைந்துள்ளது. 27 பல்கலைக்கழகத் துறைகள் 8 புலங்களுடன் இணைக்கப்பட்டுள்ளன. உணவு பாதுகாப்பு

`

பயிற்சி மற்றும் சான்றிதழ் படிப்புகளுக்காக இப்பல்கலைக்கழகம் Food Safety and Standards Authority of India (FSSAI) உடன் கூட்டிணைவினை மேற்கொண்டுள்ளது.

**4.10.3. 2016–17** ஆம் ஆண்டில் ரூ. **4.92** கோடி மதிப்பீட்டிலான பல்வேறு நிதிநிறுவனங்களின் உதவியுடன் **53** ஆராய்ச்சி திட்டங்கள் இப்பல்கலைக்கழகத்தால் மேற்கொள்ளப்பட்டது. இப்பல்கலைக்கழகம் அனைத்து பாடப்பிரிவுகளுக்கான பாடத்திட்டத்தினை சீரமைத்துள்ளது. வளாக நேர்காணல் மூலம் இந்தியாவில் உள்ள **28** பல்வேறு வணிக நிறுவனங்களில் **4,510** மாணாக்கர்கள் பணியமர்த்தப்பட்டுள்ளனர். இப்பல்கலைக்கழகம் அனைத்து மாணாக்கர்களுக்காக, விபத்தின்போது நிதியுதவி கோருவதற்கான மருத்துவ காப்பீட்டுத் திட்டத்தை அறிமுகப்படுத்தியுள்ளது. இப்பல்கலைக்கழகத்தால் யோகா மற்றும் தியான ஆராய்ச்சி மையம், கிராமப்புற வளர்ச்சிக்கான மையம், நலிவுற்றப் பிரிவினரை உயர்த்துவதற்கான மையம் போன்றவை அமைக்கப்பட்டுள்ளன. ரூ. **15.75** கோடி மதிப்பீட்டிலான கட்டடப்பணிகள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன.

`

## 4.10.4. 2017 – 18 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்படவுள்ள செயல்பாடுகள் /திட்டங்கள்:

i) இப்பல்கலைக்கழகம், 2017–ஆம் ஆண்டு டிசம்பர் 18– 22–இல் சமூக அறிவியல் ஆராய்ச்சிக்கான இந்திய குழுமத்தின் காங்கிரஸை (ICSSR) கூட்டத்தை நடத்தவுள்ளது.

ii) தேசிய மற்றும் சர்வதேச நிறுவனங்களுடன் கூட்டிணைந்து ஆராய்ச்சி திட்டங்கள் மேற்கொள்ளப்படவுள்ளன.

iii) ஒரு மெகாவாட் மின்சாரத்தை சூரிய ஒளி மூலம் பெறுவதற்கான கருவிகள் பல்கலைக்கழக வளாகத்தில் அமைக்கப்படவுள்ளது.

iv) 2018ஆம் ஆண்டில் NIRF-ன் தரவரிசையில் முதல் 50 இடங்களுக்குள் இடம் பெறுவதற்கு முயற்சி எடுக்கவுள்ளது.

v) மேக கணினி மற்றும் மின் ஆளுமையை பல்கலைகழக வளாகத்தில் செயல்படுத்த நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது.

`

## 4.11 தமிழ்நாடு திறந்தநிலைப் பல்கலைக்கழகம்

**4.11.1.** தமிழ்நாடு திறந்தநிலைப் பல்கலைக்கழகம் தமிழ்நாடு அரசால் 2002 ஆம் ஆண்டு தோற்றுவிக்கப்பட்டது. தமிழக அளவில் திறந்தநிலை மற்றும் தொலைநிலைக் கல்விமுறையை மேம்படுத்துவதும், அதன் தரத்தினை ஒருங்கிணைத்து உறுதிப்படுத்துவதும் இப்பல்கலைக் கழகத்தின் முதன்மை நோக்கமாகும். மிகக் குறைந்த செலவில் சமூகத்திற்கு தேவையான படிப்புகளை தொலைநிலைக் கல்வி மூலம் வழங்குவதே முக்கிய இலக்காகும். குறிப்பாக, இதுவரை கல்வி வாய்ப்புகள் கிடைக்கப்பெறாத பின்தங்கிய கிராமப்புறப் பகுதிகளில் வாழும் மக்கள், வேலைக்கு செல்லும் மக்கள், இல்லத்தரசிகள், மாற்றுத்திறனாளிகள், ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின மாணவர்கள் ஆகியோருக்கு மிகக் குறைந்த கட்டணத்தில் நிறைவான, தரமான படிப்புகளை இப்பல்கலைக்கழகம் வழங்கி வருகிறது.

**4.11.2.** தற்போது, தமிழ்நாடு திறந்தநிலைப் பல்கலைக்கழகம் 13 கல்விப் புலங்கள் வாயிலாக 148 பாடப்பிரிவுகளை வழங்கி வருகிறது. இப்பல்கலைக்கழகம் தமிழகம் முழுவதும் 419 படிப்பு மையங்களுடன் இயங்கி வருகிறது. இப்பல்கலைக்கழகத்தில் ஆண்டு முழுவதும்

`

மாணவர் சேர்க்கை இரண்டு சுழற்சிகளில் நடைபெற்று வருகிறது. நாட்காட்டி ஆண்டு சேர்க்கை ஜனவரி முதல் ஜுன் வரையிலும், கல்வி ஆண்டு சேர்க்கை ஜுலை முதல் டிசம்பர் வரையிலும் நடைபெறுகிறது. 2016–17ஆம் கல்வியாண்டில் 26,361 மாணாக்கர்கள் சேர்ந்துள்ளனர். இவர்களுள் 13,279 பேர் மாணவிகள் ஆவர். தற்பொழுது முனைவர் ஆய்வு பட்டப்படிப்பில் 78 ஆராய்ச்சி மாணாக்கர்களும், ஆய்வியல் நிறைஞர் பட்டப் படிப்பில் 67 ஆராய்ச்சி மாணாக்கர்களும் முழுநேர / பகுதிநேர பிரிவில் படித்து வருகின்றனர்.

**4.11.3.** இப்பல்கலைக்கழகம், 2016 –ஆம் ஆண்டு ஜனவரி மாதம் பல்கலைக்கழக நிதிநல்கைக் குழுவின் 12 (B) தகுதிநிலையைப் பெற்றுள்ளது. மத்திய மனித வள மேம்பாட்டு அமைச்சகத்தின் இளம் மற்றும் படிப்பார்வம் மிக்கவர்களுக்கான செயல்வழி கற்றல் இணையத் திட்டத்தினை (Swayam Prabha Projects) இந்திராகாந்தி தேசியத் திறந்தநிலைப் பல்கலைக்கழகத்தோடு இணைந்து செயல்படுத்துவதற்கும், அப்பல்கலைக்கழகத்தின் மின்னணு ஊடகத் தயாரிப்பு ஆராய்ச்சி மையத்தின் வசதியை டி.டி.எச் வசதிமூலம் மாணவர்கள் பயன்படுத்துவதற்கும் பணிகள் நடைபெற்று வருகின்றன.

`

**4.11.4.** கடந்த ஐந்து ஆண்டுகளில், தமிழ்நாடு திறந்தநிலைப் பல்கலைக்கழகம் சென்னை, கோயம்புத்தூர், தருமபுரி, மதுரை, நீலகிரி, திருச்சிராப்பள்ளி மற்றும் விழுப்புரம் ஆகிய ஏழு இடங்களில் மண்டல மையங்களையும் மற்றும் ஏழு உறுப்புச் சமுதாயக் கல்லூரிகளையும் நிறுவியுள்ளது. பல்கலைக்கழக நிர்வாகக் கட்டிடத்தில் தமிழக அரசின் சிறப்பு நிதி உதவியுடன் காணொலிக் காட்சி வசதியுடன் கூடிய சிறப்பு வகுப்பறைகள், அயல்மொழி ஆய்வகம், தொழில்முனைவோர் திறன் மேம்பாட்டு மையம், பாடத்திட்டம் மேம்பாட்டு குழு ஆகியவை உருவாக்கப்பட்டுள்ளன. மேலும், பல்வேறு துறைசார் அயல்நாட்டு பேராசிரியர்களை அழைத்து சிறப்புச் சொற்பொழிவாற்றுவதற்கும் தமிழ்நாடு அரசு நிதி உதவி வழங்கியுள்ளது.

**4.11.5. 2016–17**ஆம் ஆண்டில் இப்பல்கலைக் கழகத்தின் புதிய மண்டல மையங்கள் விழுப்புரம் மற்றும் நீலகிரி மாவட்டங்களில் தொடங்கப்பட்டு, கல்விச் சேவை வழங்கப்பட்டு வருகிறது. இப்பல்கலைக்கழகம் இணையவழி மாணவர் சேர்க்கை முறையை **2017** ஆம் நாட்காட்டி ஆண்டில் அறிமுகப்படுத்தியுள்ளது.

`

**4.11.6. 2017–18ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்படவுள்ள செயல்பாடுகள் / திட்டங்கள்:**

i) கணினி அடிப்படைகள், அலுவலக கணினிமயமாக்கல், நிரலாக்கத் தொழில்நுட்பங்கள், கணினிப் பயன்பாடுகள், பல்லூடக முறை, முடிதிருத்துதல், தையல் கலைஞர் மற்றும் ஆடை தயாரிப்பு, தரை நுண்நய ஒப்பனை, மணப்பெண் ஒப்பனை மற்றும் மலர் அலங்காரம், புதுப்பாணி நகை தயாரிப்பு மற்றும் ஆங்கிலப் புலமை ஆகிய பிரிவுகளில் திறன்மேம்பாட்டு தொழிற்பயிற்சி அளிக்கும் வகையில் கற்றல் அளவெண் முறை இல்லாத குறுகிய கால சான்றிதழ் படிப்புகளை வழங்க இப்பல்கலைக்கழகம் திட்டமிட்டுள்ளது.

ii) 2017 – 18 –ஆம் கல்வி ஆண்டில், 3 முதுநிலைப் படிப்புகள், 5 பட்டப் படிப்புகள், 7 முதுநிலைப் பட்டயப் படிப்புகள், 3 பட்டயப் படிப்புகள், 2 சான்றிதழ் படிப்புகள் மற்றும் 2 தொழில் பட்டயப் படிப்புகள் உட்பட 22 புதிய படிப்புகளை அறிமுகப்படுத்தப்படவுள்ளது.

`

## 4.12 திருவள்ளுவர் பல்கலைக்கழகம்

**4.12.1.** திருவள்ளுவர் பல்கலைக்கழகம், அப்பல்கலைக்கழகச் சட்டம் 2002–ன் படி 16.10.2002 அன்று தமிழக அரசால் வேலூரில் துவங்கப்பட்டது. இப்பல்கலைக் கழகத்தில் அதிகாரவரம்பின் கீழுள்ள வேலூர், திருவண்ணாமலை, விழுப்புரம் மற்றும் கடலூர் மாவட்டங்களில், 10 அரசு கல்லூரிகள், 9 அரசு உதவிபெறும் கல்லூரிகள், 6 பல்கலைக் கழக உறுப்புக் கல்லூரிகள், ஒரு முதுகலை மேலாண்மையியல் நிறுவனம், 89 சுயநிதி கலை மற்றும் அறிவியல் கல்லூரிகள், 3 கீழ்திசைக் கல்லூரிகள், ஒரு முதுகலை விரிவாக்க மையம் மற்றும் 5 ஆராய்ச்சி நிறுவனங்கள் உட்பட 123 கல்லூரிகள் இயங்கி வருகின்றன. இப்பல்கலைக்கழகத்தில், தமிழ், ஆங்கிலம், கணிதம், உயிரிதொழில்நுட்பவியல், விலங்கியல், பொருளியல் மற்றும் வேதியியல் ஆகிய 7 துறைகள் உள்ளன. இன்றைய தேதி வரை பல்கலைக்கழகத் துறைகளில் 274 மாணாக்கர்களும், இணைவுக் கல்லூரிகளில் 47,470 மாணாக்கர்களும் சேர்ந்துள்ளனர்.

`

**4.12.2. 2014** ஆம் ஆண்டில் பல்கலைக்கழக நிதிநல்கைக் குழுவால் இப்பல்கலைக்கழகத்திற்கு 12(B) அந்தஸ்து வழங்கப்பட்டுள்ளது. இப்பல்கலைக்கழகத்திற்கு தேசிய மதிப்பீடு மற்றும் தர நிர்ணயம் (NAAC-Accreditation) குழுவின் அங்கீகாரத்தை பெறுவதற்கு முயற்சிகள் எடுக்கப்பட்டு வருகிறது. திருவள்ளுவர் பல்கலைக்கழகம், மற்ற பல்கலைக்கழகங்களான தேசிய தைவான் பெருங்கடல் பல்கலைக்கழகம், கீலுங், தைவான் மற்றும் நிம் கோர், சென்னை பல்கலைக்கழகம் ஆகியவற்றுடன் மேற்கொள்ளப்பட்ட புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் மாணாக்கர்கள் மற்றும் ஆசிரியர்கள் ஆராய்ச்சி திட்டங்களை மேற்கொள்வதற்கும் மற்றும் உலகத்தரத்திலான அனுபவத்தை பெறுவதற்கும் உதவியாக இருக்கும். மேலும், ஹாங்காங் பேப்டிஸ்ட் பல்கலைக்கழகத்துடன் விஞ்ஞானிகள், பட்டதாரி மாணவர்கள், முதுமுனைவர்கள் மற்றும் தொழிற் கல்வியாளர்களை பரிமாற்றம் செய்து கொள்வதற்கு புரிந்துணர்வு ஒப்பந்தம் கையெழுத்திடப்பட்டுள்ளது.

**4.12.3.** இப்பல்கலைக்கழகம் ஆராய்ச்சி பணிகளுக்கு முக்கியத்துவம் கொடுத்ததன் விளைவாக, ஆராய்ச்சி மாணாக்கர்களின் பதிவு **30** சதவீதத்திற்கு அதிகமாக

`

உயர்ந்துள்ளதுடன், ஆராய்ச்சி மேற்பார்வையாளர்களின் எண்ணிக்கையும் இருமடங்கு அதிகமாக உயர்ந்துள்ளது.

**4.12.4.** இப்பல்கலைக்கழகம் கம்பியில்லா தகவல் பரிமாற்ற நுட்ப இணைப்பு மின்னணு வளங்களைப் பெற்று அமைந்துள்ளது. பல்கலைக்கழக நூலகத்தில் **6,130** புத்தகங்கள் இடம்பெற்றுள்ளன. மேலும் இப்பல்கலைக்கழக நூலகம் **342** ஆய்வியல் முனைவர் விளக்கவுரைகள் (Dissertation) மற்றும் **29** பத்திரிக்கைகளுடன் தொடர்பில் உள்ளது. இப்பல்கலைக்கழக நூலகம், INFLIBNET–லிருந்து இணையவழி தகவல் வளங்களை பெற்று விளங்குகிறது.

**4.12.5.** இப்பல்கலைக்கழகம் விளையாட்டு முன்னேற்றத்திற்கு தனி முக்கியத்துவம் அளிக்கிறது. பல்கலைக்கழக நிதிநல்கைக்குழுவின் உதவியுடன், **8** வழி புல் ஓடுதளத்தினை ரூ. 7 இலட்சம் செலவிலும் செயற்கை பிளாஸ்டிக் பின்பலகையுடன் கூடிய சராசரி அளவிலான கூடைப்பந்து ஆடுகளத்தினை ரூ. **5.00** இலட்சம் செலவிலும் அமைக்கப்பட்டு வருகிறது.

`

## 4.13 தமிழ்நாடு ஆசிரியர் கல்வியியல் பல்கலைக்கழகம்

**4.13.1.** ஆசிரியர் கல்வியின் தரத்தினை மேம்படுத்துவதற்காக தமிழ்நாடு ஆசிரியர் கல்வியியல் பல்கலைக்கழகம் தோற்றுவிக்கப்பட்டது. தற்போது, 7 அரசு, 14 அரசு உதவி பெறும் மற்றும் 713 சுயநிதி கல்வியியல் கல்லூரிகள் உட்பட மொத்தம் 734 கல்வியியல் கல்லூரிகள் இப்பல்கலைக்கழகத்துடன் இணைவு பெற்றுள்ளன. இப்பல்கலைக்கழகம், ஆறு கல்வி மற்றும் ஆய்வுத் துறைகளை கொண்டுள்ளது. 2014-ஆம் ஆண்டிலிருந்து பல்கலைக்கழகத் துறைகளில் எம்ஃபில் மற்றும் பி.எச்.டி ஆராய்ச்சி படிப்புகளும் மற்றும் 2016 - 17ஆம் ஆண்டிலிருந்து 4 ஆண்டுகள் ஒருங்கிணைந்த பி.எஸ்.ஸி., பி.எட் மற்றும் பி.ஏ.,பி.எட் பட்டப்படிப்புகளும் துவங்கப்பட்டுள்ளன. இப்பல்கலைக் கழகத்தால் 2017 - 18 ஆம் ஆண்டிலிருந்து வழங்கப்படும் எம்.எட் பட்ட மேற்படிப்புக்கு தேசிய ஆசிரியர் கல்விக்குழுமத்தின் ஒப்புதல் பெறப்பட்டுள்ளது.

**4.13.2.** இப்பல்கலைக்கழகம் தனது ஆளுகையின் கீழ் உள்ள 732 கல்லூரிகள் மூலம் பி.எட் பாடப்பிரிவுகள், 141 கல்லூரிகள் மூலம் எம்.எட் மற்றும் எம்ஃபில் பாடப்பிரிவுகள், 12 கல்லூரிகள்

`

மூலம் முனைவர் பட்டத்திற்கான பாடப்பிரிவுகளை வழங்குகிறது. 2016 - 17 ஆம் ஆண்டில் 52,280 பி.எட் மாணாக்கர்களும், 5,510 எம்.எட் மாணாக்கர்களும், 284 ஆய்வியல் நிறைஞர் மாணாக்கர்களும், 227 பி.எச்.டி மாணாக்கர்கள் இணைவுக் கல்லூரிகளில் சேர்க்கப்பட்டுள்ளனர். பல்கலைக்கழகத் துறைகளில் 93 பி.எச்.டி மாணாக்கர்கள் ஆராய்ச்சி மேற்கொண்டுள்ளனர். இப்பல்கலைக்கழகம் 2016 – 17 –ஆம் கல்வியாண்டு முதல், இணையவழி சேர்க்கையின் மூலம் பி.எட், பி.எட் (சிறப்புக்கல்வி) மற்றும் எம்.எட். படிப்புகளுக்கு மாணவர் சேர்க்கையை அறிமுகப்படுத்தியுள்ளது.

**4.13.3. 2017 – 18 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட உள்ள நடவடிக்கைகள்/திட்டங்கள்:**

(i) 2017-18 ஆம் ஆண்டில் இப்பல்கலைக்கழகம் கலையரங்கம் மற்றும் பணியாளர் குடியிருப்பு கட்டுவதற்கு நடவடிக்கை எடுக்க உத்தேசித்துள்ளது.

(ii) ஐந்து பல்கலைக்கழக உறுப்பு கல்வியியல் கல்லூரிகளை நிறுவுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

`

# 5 தமிழ்நாடு ஆவணக்காப்பகம்

**5.1.** சென்னை, எழும்பூரில் அமைந்துள்ள தமிழ்நாடு ஆவணக்காப்பகம் அரசு ஆவணங்களை தன்னகத்தே கொண்டு அவைகளை பாதுகாத்து வருவதோடு, அரசின் பல்வேறு துறைகளுக்கும் முடிவுகளை எடுக்க தேவையான ஆவணங்களை வழங்கும் முக்கிய பணியையும் ஆற்றி வருகிறது. இக்காப்பகம் தகவல் அறியும் உரிமைச் சட்டம் 2005 இன்படி பொதுமக்கள் கோரும் ஆவணங்களின் நகல்களை வழங்கி வருகின்றது.

**5.2.** மெட்ராஸ் ரெக்கார்டு ஆபீஸ் என்ற பெயரால் முதலில் அழைக்கப்பட்ட தமிழ்நாடு ஆவணக்காப்பகத்தில் 1857 ஆம் ஆண்டுக்கு முந்தைய தலைமைச் செயலக ஆவணங்கள், முந்தைய வருவாய் வாரிய ஆவணங்கள், சில துறைகளின் தலைமை அலுவலக ஆவணங்கள், மாவட்ட ஆட்சியர் அலுவலக ஆவணங்கள் மற்றும் மாவட்ட நீதிமன்ற ஆவணங்கள் பாதுகாக்கப்பட்டு வருகின்றன. இதோடு மட்டுமல்லாமல் அரிய டச்சு, டேனிஷ் மற்றும் பாரசீகம் ஆகிய பிறமொழி ஆவணங்களும் தமிழ்நாடு ஆவணக்காப்பகத்தில் பாதுகாக்கப்பட்டு வருகின்றன.

`

**5.3.** பன்னாட்டு மற்றும் இந்திய பல்கலைக்கழகங்கள் மற்றும் கல்லூரிகளிலிருந்து புகழ்பெற்ற நூலாசிரியர்கள், வரலாற்று ஆசிரியர்கள் மற்றும் ஆராய்ச்சியாளர்கள் தமிழ்நாடு ஆவணக்காப்பகத்திற்கு வருகை தந்து ஆராய்ச்சி மேற்கொள்கின்றனர். இங்குள்ள ஆவணக்காப்பக நூலகம் ஆராய்ச்சியாளர்களுக்கு சிறந்த அறிவுக் களஞ்சியமாக திகழ்வதோடு அரிய புத்தகங்களையும் தன்னகத்தே கொண்டுள்ளது.

**5.4.** தமிழ்நாடு ஆவணக்காப்பகத்தில் செயல்பட்டு வரும் விவரச்சுவடி பிரிவு தமிழ்நாட்டின் பல்வேறு மாவட்டங்களின் விவரச்சுவடிகளை தயாரித்து வெளியிட்டு வருகிறது. தமிழ்நாடு ஆவணக்காப்பகத்தின் கீழ் ஆறு மாவட்ட ஆவணக்காப்பகங்கள் கோயம்புத்தூர், மதுரை, தஞ்சாவூர், திருச்சிராப்பள்ளி, கடலூர் மற்றும் சேலம் ஆகிய இடங்களில் செயல்பட்டு வருகின்றன.

**5.5.** தமிழ்நாடு ஆவணக்காப்பகம் தன்னகத்தே கொண்ட ஆவணங்களை கணினிமயமாக்கி இணையத்தில் பதிவேற்றம் செய்தல், உள்ளிணைப்பு கட்டமைப்பு ஏற்படுத்தி அலுவல் சார்ந்த ஆவணம் தொடர்பான பணிகள் தமிழ்நாடு புதுமை

`

முயற்சிகள் நிதியத்திடமிருந்து (Tamil Nadu Innovation Initiatives Fund) பெறப்பட்ட ரூ. 67 இலட்சம் நிதியைக் கொண்டு 2015 – 16 மற்றும் 2016 –17 ஆம் ஆண்டுகளில் நிறைவேற்றப்பட்டுள்ளது. இத்திட்டத்தினை தொடர்ந்து மின் ஆளுமை செயலாக்க நிதியிலிருந்து ஒப்பளிக்கப்பட ரூ. 105 இலட்சம் நிதியுதவியில் மின் ஆவணக்காப்பகம் (digi - Archives) தமிழ்நாடு மின் ஆளுமை நிறுவனத்தின் மூலம் (Tamil Nadu e - governance Agency) தோற்றுவிக்கப்பட்டு செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டம் 2017 – 18 ஆம் ஆண்டில் நிறைவடையும். இத்திட்டத்தை நிறைவேற்றுவதன் மூலம், இக்காப்பகத்தில் உள்ள ஆவணங்களை பொருள் விவர பட்டியலுடன் இணையத்தில் தேடும் வசதி உருவாக்கப்படும்.

**5.6.** 2016–17 ஆம் ஆண்டில் இக்காப்பக ஆவணங்களை மின்மயமாக்க, ரூ.10 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டது. இதே நிதி 2017–18 ஆம் ஆண்டிலும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இத்துறையின் ஆறு மாவட்ட ஆவணக்காப்பக அலுவலகங்களுக்கு கணினி மற்றும் அதன் தொடர்புடைய பொருட்களை வாங்குவதால், ஆவணங்களை மின்மயமாக்குதல் மற்றும் நுண்புகைப்படமாக்குதல் ஆகிய திட்டத்திற்கு தேசிய ஆவணக்காப்பகம் ஒப்புதல் அளித்து,

`

இதற்கென ரூ. 47 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்துள்ளது. இத்திட்டம் 75 சதவிகிதம் மத்திய அரசின் பங்களிப்புடனும், எஞ்சிய 25 சதவிகிதம் மாநில அரசின் பங்களிப்புடனும் மேற்கொள்ளப்பட்டு 2017 – 18 ஆம் ஆண்டு முதல் செயல்படுத்தப்படும்.

`

## 6. தமிழ்நாடு மாநில உயர்கல்வி மன்றம்

**6.1.** மாநில அளவிலான உயர்கல்வி திட்டங்களின் மேம்பாட்டிற்கும், மாநிலத் திட்டங்கள், பல்கலைக்கழக நிதிநல்கை குழுவின் திட்டங்கள் இவற்றை ஒருங்கிணைக்க உதவும் வகையிலும் தமிழ்நாடு மாநில உயர்கல்வி மன்றம் **1992**ஆம் ஆண்டில் தமிழ்நாடு சட்டப்பேரவையால் ஏற்றப்பட்டுள்ள சட்டத்தின் கீழ் தோற்றுவிக்கப்பெற்றது.

**6.2.** கடந்த ஐந்தாண்டுகளில், இம்மன்றம் பல்கலைக்கழகங்களுடன் இணைந்து பின்வரும் ஆறு பல்கலைக்கழகங்களில் தொழில் நிறுவனங்களின் கூட்டிணைவு மையங்களை நிறுவும் ஒருங்கிணைப்பு மையமாக செயல்பட்டு வருகிறது – சென்னைப் பல்கலைக்கழகம், அழகப்பா பல்கலைக்கழகம், பாரதிதாசன் பல்கலைக்கழகம், பாரதியார் பல்கலைக்கழகம், மதுரை காமராசர் பல்கலைக்கழகம், மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகம். இம்மையங்கள் கல்வியாளர்கள் மற்றும் தொழில் துறையினரிடையே இணைப்பை ஏற்படுத்தி, மாணவர்கள் தொழிற்சாலைகளில் உள்பயிற்சி, தொழில் துறை உதவியுடன் ஆராய்ச்சி திட்டங்கள், ஆலோசனை சேவைகள், பல்லுயிர்கள் பாதுகாப்பு, பராமரிப்பு மற்றும் வேலை வாய்ப்பு

`

பெற ஏதுவாக உள்ளன. இந்த மையங்கள் தொழில் நிறுவனங்களுடன் இணைந்து உள்பயிற்சி வழியாக வேலைவாய்ப்பளித்தல், வளாக தேர்வுகள் நடத்துதல் போன்றவற்றிற்கும் உறுதுணையாக உள்ளது.

**6.3.** தமிழ்நாடு மாநில உயர்கல்வி மன்றத்தால் 62 அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் மாணாக்கர்கள் பட்டபடிப்பினை முடித்த பின்பு வேலைவாய்ப்பு பெற கணினி கல்வி, பேச்சுத்திறன், ஆளுமை வளர்ச்சி, நேர்காணல் திறன் போன்ற பயிற்சிகள் அளிக்கும் பொருட்டு ‘‘மென்திறன் மையங்கள்’’ உருவாக்கப்பட்டுள்ளன. இத்திட்டம் மாணாக்கர்களிடம் வரவேற்பை பெற்றுள்ளது. மெதுவாக கற்கும் மாணவர்கள் இடைநிற்றலை தவிர்க்கும் பொருட்டு இம்மன்றத்தால் சிறப்பு கவனத் திட்டம் 6 அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளிலும், 18 பல்கலைக்கழக உறுப்புக் கல்லூரிகளிலும் அமல்படுத்தப்பட்டு சிறப்பு பயிற்சி வகுப்புக்கள் நடத்தப்பட்டு வருகின்றன. தமிழ்நாடு மாநில உயர்கல்வி மன்றம், பல்கலைக்கழக உறுப்பு கல்லூரிகள் / அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் பயிலும் முதுநிலை பட்ட மாணவர்களுக்கு (அ) ‘‘மாணவர் சிறு திட்டத்தையும்’’

`

(Student Mini Project), ஆசிரியர்களுக்கு (ஆ) ‘‘சிறு ஆராய்ச்சித் திட்டத்தையும்’’ சிறப்பாக செயல்படுத்தி வருகிறது.

**6.4.** **2014** ஆம் ஆண்டு வலையமைப்பு எண்ணிலக்க நூலகம் அமைக்க தமிழக அரசு ஒப்பளித்துள்ளது. இத்திட்டம் மூலம் தமிழகத்தின் பல்கலைக்கழகங்கள் மற்றும் கல்லூரிகளில் உள்ள நூலக தகவல்கள் அனைத்தும் எண்ணியியல் மயமாக்கப்பட்டு தமிழக மாணவர்கள் அனைவரும் பயனடைய உதவுகிறது. இத்திட்டத்திற்கு தேவையான உள்கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்த அண்ணா பல்கலைக்கழகம் மற்றும் தமிழ்நாடு திறந்தநிலை பல்கலைக்கழகத்திற்கு தலா ரூ. **69.50** இலட்சம் வழங்கப்பட்டுள்ளது.

**6.5.** Tamil Nadu Innovation Initiatives (TANII) திட்டத்தில், தமிழ்நாடு மாநில உயர்கல்வி மன்றத்திற்கு அரசு கலை மற்றும் அறிவியல், பல்கலைக்கழக உறுப்பு கல்லூரி மாணாக்கர்களின் பாடத்திட்டத்துடன் இணைந்த மொழிகற்கும் திறனை வளர்க்கும் பொருட்டு CLIL: Content and Language Integrated Learning என்ற திட்டத்திற்கு ரூ. **62.4** இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்திற்கான

`

காலவரையறை மூன்று ஆண்டுகளாகும் (2015 முதல் 2018 வரை). மாணாக்கர்கள் தங்களை கல்லூரி சூழலுக்கு ஏற்ப தகவமைத்துக் கொள்ள உதவிடும் பொருட்டு, மொழி பரிமாற்ற மேம்பாட்டு திறனில் உள்ள இடைவெளியை நிரப்ப, சீர்மைப் பயிற்சிக்கென (Bridge Course), 19 தன்னாட்சி அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் பயிலும் முதலாம் ஆண்டு இளங்கலை பட்டப்படிப்பு மாணாக்கர்களுக்கு, தமிழ்நாடு அரசு ரூ. 12.50 இலட்சம் செலவில் “The wor(l)d in your stride” என்ற புத்தகம் இலவசமாக வழங்க உள்ளது.

**6.6.** தமிழக அரசின் தொலைநோக்கு பார்வை 2023 இன் படி உயர்கல்வித்துறையில் 5 தனிச்சிறப்பு மையங்களை ஏற்படுத்த இம்மன்றம் ஒருங்கிணைத்து வருகிறது – சூரிய மற்றும் தூய்மையான எரிசக்தி தொழில்நுட்பம் (அண்ணா பல்கலைக்கழகம்), விண்வெளி (அண்ணா பல்கலைக்கழகம்), அடிப்படை அறிவியல் (சென்னைப் பல்கலைக்கழகம்), தானியங்கி மற்றும் வாகன தொழில்நுட்பம் (அண்ணா பல்கலைக்கழகம்) மற்றும் உயிரி தொழில்நுட்பம் (சென்னை பல்கலைக்கழகம் மற்றும் மதுரை காமராசர் பல்கலைக்கழகம்).

`

# 7. தேசிய உயர்கல்வித் திட்டத்திற்கான (RUSA) மாநில இயக்குநரகம்

**7.1.** தேசிய உயர்கல்வித் திட்டம் (RASHTRIYA UCHCHATAR SHIKSHA ABHIYAN) மைய அரசின் நிதியுதவியுடன் மாநிலத்தின் அரசு பல்கலைக்கழகங்கள் மற்றும் கல்லூரிகளின் உயர்கல்வி தரத்தை உயர்த்த செயல்படுத்தப்படும் முக்கிய திட்டமாகும். இத்திட்டத்தின் மத்திய, மாநில அரசு நிதி பங்களிப்பு **60**:**40** ஆகும்.

**7.2.** இத்திட்டத்தின் கீழ் பெறப்பட்ட தயார்படுத்துதல் நிதி ரூ.**5** கோடியைக் கொண்டு உயர்கல்விக்கான மாநில திட்டமும், தேசிய உயர்கல்வித் திட்ட இயக்ககமும் நிறுவப்பட்டு திறம்பட செயல்பட்டுக் கொண்டிருக்கிறது.

**7.3.** இத்திட்ட வரைவு வழிகாட்டுதலின் பல்வேறு கூறுகளின் படி மாநில திட்டம் (STATE HIGHER EDUCATION PLAN) உருவாக்கப்பட்டுள்ளது. தமிழகத்தில் அடுத்த ஐந்தாண்டுகளில் தரமான உயர்கல்வி அனைவரையும் சென்றடைவதை உறுதி செய்யும் வகையில் மேற்கொள்ள வேண்டியவைகளின் அடிப்படையிலேயே மாநில திட்டம் உருவாக்கப்பட்டது.

`

**7.4.** இத்திட்டத்தின் திட்ட அனுமதி வாரியம் (Project Approval Board) நம் மாநில திட்டத்தை நன்கு ஆய்வு செய்து, தேசிய தரமதிப்பீட்டு குழுவின் அங்கீகாரம் பெற்ற 10 பல்கலைக்கழகங்களுக்கு பல்கலைக்கழகங்களின் உட்கட்டமைப்பினை மேம்படுத்த ரூ. 200 கோடி நிதி வழங்கி உள்ளது. மேலும், இரு அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளை மாதிரி கல்லூரிகளாக மேம்படுத்த ரூ. 8 கோடி வழங்கப்பட்டுள்ளது. இது தவிர, 44 அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகள் மற்றும் 21 பல்கலைக்கழக உறுப்புக் கல்லூரிகளுக்கும் உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவதற்காக மொத்தம் ரூ. 130 கோடி ஒப்பளிக்கப்பட்டுள்ளது.

**7.5.** மேலும், நாமக்கல் மற்றும் திருவள்ளூர் மாவட்டத்தில் தலா ரூ. 21 கோடி செலவில் இரு அரசு பொறியியல் கல்லூரிகள் நிறுவுவதற்கு இத்திட்டத்தின் அனுமதி வாரியம் ஒப்புதல் அளித்துள்ளது. இதற்கான இடம் கண்டறியப்பட்டுள்ளது. நிதி ஒப்பளிப்பு பெற்றபிறகு கட்டடிடப் பணி துவங்கப்படும். மேலும் தொழிற்கல்விக்காக ரூ. 13.3 கோடியும், உயர் கல்வி நிறுவனங்களில் ஆராய்ச்சி மற்றும் புது கண்டுபிடிப்புகளை ஊக்கப்படுத்தும் நிதியாக

`

ரூ. 15 கோடியும் பெறப்பட்டுள்ளது. இத்திட்டத்திற்காக மொத்தம் ரூ. 423.2 கோடி நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தால் அதிகமாக பயனடைந்த மாநிலங்களில் நம் மாநிலமும் ஒன்றாகும்.

**7.6.** 10 பல்கலைக்கழகங்கள் மற்றும் 55 அரசு கல்லூரிகளுக்கு இத்திட்டத்தில் வழங்கப்பட்டுள்ள நிதியைப் பயன்படுத்தி புதிய கல்லூரி வகுப்பறைகள், மாணவ மாணவியர் விடுதிகள், கழிப்பறைகள் மற்றும் சோதனைக் கூடங்கள் கட்டப்பட்டுள்ளன. மேலும் பல்கலைக்கழகங்களிலும், கல்லூரிகளிலும் நிர்வாக கட்டடங்கள், வகுப்பறைகள், விடுதிகள் புதுப்பிக்கப்பட்டுள்ளன. மேலும் பல்கலைக்கழகங்கள் மற்றும் கல்லூரிகள் நவீன முறையில் கல்வி கற்பிக்க கணினிகள், புத்தகங்கள் மற்றும் விளையாட்டு உபகரணங்கள் பெறப்பட்டுள்ளன.

**7.7.** ஆராய்ச்சி மற்றும் புதிய கண்டுபிடிப்புகளை ஊக்குவிக்க வழங்கப்பட்ட நிதி ரூ.15 கோடியை பயன்படுத்தி தமிழ்நாட்டின் அரசு பல்கலைக்கழகங்களில் நிலையான

`

ஆற்றல் தொழில்நுட்பங்கள் குறித்த ஆராய்ச்சிகள் மேற்கொள்ளப்படவுள்ளன.

**7.8.** தமிழக அரசும் தேசிய உயர் கல்வி திட்டமும் இணைந்து நம் மாநிலத்தை உயர் கல்வி கற்றல், பயிற்றுவித்தல் மற்றும் ஆராய்ச்சியில் முக்கிய மையமாக விளங்க அனைத்து சிறப்பு முயற்சிகளையும் எடுத்து வருகிறது.

`

# 8. அறிவியல் நகரம்

**8.1.** சென்னை நகரில் கிண்டி மற்றும் தரமணி பகுதியில் அமைந்துள்ள மத்திய மற்றும் மாநில அரசினை சேர்ந்த இந்திய தொழில்நுட்ப நிறுவனம், அண்ணா பல்கலைக்கழகம், மைய தோல் ஆராய்ச்சி நிறுவனம், கணித நிறுவனம், புற்றுநோய் மையம் போன்ற சுமார் 60 ஆராய்ச்சி நிறுவனங்களை உள்ளடக்கிய இவ்வளாகத்தை "அறிவியல் நகரம்" என அழைக்கிறோம். இவ்வறிவியல் நகரத்தின் நோக்கம் அறிவியல் மற்றும் தொழில்நுட்பத்தை வளர்ப்பதாகும். அறிவியல் நகரத்தில் அமைந்துள்ள உறுப்பினர் நிறுவனங்களில் 1,500க்கும் மேற்பட்ட முனைவர்கள் மற்றும் 3,500 க்கும் மேற்பட்ட ஆராய்ச்சியாளர்கள் உள்ளனர். இந்த அறிவியல் நகரத்தில் அமைந்துள்ள நிறுவனங்களில் சுமார் 1000க்கும் மேற்பட்ட ஆய்வுகள் அறிவியல், பொறியியல் மற்றும் தொழில்நுட்பத் துறைகளில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. அறிவியல் நகரத்தில் உள்ள நிறுவனங்களில் சுமார் ரூ. 500 கோடி மதிப்புள்ள அறிவியல் தொழில்நுட்ப சோதனை மற்றும் பரிசோதனை உபகரணங்களும் கருவிகளும் உள்ளன.

`

**8.2.** அறிவியல் நகரம் லாபம் ஈட்டாத நிறுவனமாக தமிழ்நாடு சங்கங்களின் சட்டம் **1975** கீழ் பதிவு செய்யப்பட்டுள்ளது. பற்பல அறிவியல் நிகழ்வுகளை நடத்தி பள்ளி மற்றும் கல்லூரி மாணாக்கர்களிடையே அறிவியலை மேம்படுத்துவதே அறிவியல் நகரத்தின் முக்கிய நோக்கமாகும்.

**8.3. அறிவியல் நகர செயல்பாடுகள்**

அறிவியல் நகரத்தில் **2016–17** ஆம் ஆண்டில் கீழ்க்கண்ட அறிவியல் நிகழ்வுகள் நடைபெற்றன:

**8.3.1.** அறிவியலை பரப்புதல் நிகழ்ச்சியில், விரிவுரைகள், முக்கிய தலைப்புகளில் பயிற்சி பட்டறைகள் நடத்தப்படுவதோடு, அறிவியல் மற்றும் தொழில் நுட்பத்துறைகளில் தற்கால முன்னேற்றங்கள் குறித்து பள்ளி மற்றும் கல்லூரி மாணாக்கர்களுக்கு நிகழ்ச்சிகள் நடத்தப்படுகின்றன.

**8.3.2.** அறிவியல் நகரத்தின் செய்தி மடல் மாதந்தோறும் வெளிவருகிறது. இதில் தற்கால அறிவியல் கட்டுரைகள் தமிழிலும் ஆங்கிலத்திலும் இடம் பெற்றுள்ளன.

`

**8.3.3.** தேசிய அளவில் கருத்தரங்குகள், பயிலரங்குகள் ஆகியன நடத்தப்படுகின்றன.

**8.3.4.** அறிவியல் நகரம், வாழ்நாள் அறிவியல் சாதனையாளர் விருது, இளம் அறிவியலாளர் விருது மற்றும் இளம் மாணவ அறிவியல் அகாடமி விருது ஆகிய விருதுகளை வருடந்தோறும் வழங்கி வருகிறது.

**8.3.5.** இயற்பியல், வேதியியல் மற்றும் உயிரியல் ஆகிய துறைகளில் முதுகலை மாணவர்களுக்காக ஒரு மாத கோடை கால பயிற்சி முகாம் நடத்தப்பட்டது. இப்பயிற்சி முகாமில் **90** மாணாக்கர்கள் பங்கேற்று பயனடைந்தனர்.

**8.3.6.** இயற்பியல் அறிவியல் ஆய்வுகள் மற்றும் ஆய்வறிக்கையினை எப்படி எழுத வேண்டும் என்ற பயிற்சிப் பட்டறை முதுகலை மாணாக்கர்களுக்கு நடத்தப்பட்டது. இப்பயிற்சி பட்டறையில் **100** மாணாக்கர்கள் பங்கேற்று பயனடைந்தனர்.

**8.3.7.** அறிவியலில் செயல்முறை விளக்கம் என்ற பயிற்சிப் பட்டறை சென்னை பள்ளி மாணவர்களுக்காக நடத்தப்பட்டது. இப்பயிற்சி பட்டறையில் **250** மாணாக்கர்கள் பங்கேற்று பயனடைந்தனர்.

`

**8.3.8.** அறிவியல் நகரம், நோய் தடுப்பு மற்றும் தடுப்பூசிகள் என்ற விழிப்புணர்வு முகாமை பள்ளி மற்றும் கல்லூரி மாணாக்கர்களுக்காக நடத்தியது. இவ்விழிப்புணர்வு முகாமில் 200 மாணாக்கர்கள் பங்கேற்று பயனடைந்தனர்.

**8.3.9.** "கிராமப்புற ஏழை மக்களின் முன்னேற்றத்தில் அறிவியல்" என்ற தலைப்பில் 3 ஒரு நாள் பயிற்சிப் பட்டறைகள், மதிப்பூட்டிய பால் பொருட்களின் உற்பத்தியில் நவீன அறிவியல் நுட்பங்கள், சுகாதார முறையில் மதிப்பூட்டிய இறைச்சிப் பொருட்களை தயாரித்தல் மற்றும் பண்ணைக் கழிவுப் பொருட்களின் மேலாண்மை தொழில்நுட்பங்கள் குறித்து நடத்தப்பட்டன. இம்மூன்று பயிற்சி பட்டறைகளில் 100 விவசாயிகள் பங்கேற்று பயனடைந்தனர்.

**8.3.10.** சென்னை அறிவியல் விழா பிப்ரவரி மாதம் 2017 ல் நடத்தப்பட்டது. பள்ளி மற்றும் கல்லூரி மாணாக்கர்களுக்கிடையே அறிவியலில் ஆர்வம் ஏற்படுத்துவதே இவ்விழாவின் நோக்கமாகும். இவ்விழாவில் மாபெரும் அறிவியல் கண்காட்சி, குழு விவாதங்கள், விரிவுரைகள், அறிவியல் பொழுதுபோக்குகளான அறிவியல் செயல் முறை விளக்கங்கள், பொம்மலாட்டம், கல்லூரி மற்றும்

`

பள்ளி மாணவர்களுக்கிடையேயான வினாடி வினாப் போட்டி, கட்டுரைப் போட்டி, பேச்சுப் போட்டி, ஓவியப் போட்டி, அறிவியல் மாதிரிகள் தயார் செய்தல் ஆகியன இடம்பெற்றன.

**8.3.11.** அதிநுண் அறிவியல் மற்றும் தொழில்நுட்பத்தில் முதுநிலை பயிலும் மாணவர்களுக்காக 4 நாட்கள் விழிப்புணர்வு முகாம் நடத்தப்பட்டது. இப்பயிற்சி பட்டறையில் 100 மாணாக்கர்கள் பங்கேற்று பயனடைந்தனர்.

**8.3.12.** உயிரியல் மேற்படிப்பு பயிலும் மாணாக்கர்களுக்காக மூலக்கூறு உயிரியல் தொழில்நுட்பங்கள் என்ற தலைப்பில் மார்ச் – 2017ல் பயிற்சிப் பட்டறைகள் நடத்தப்பட்டது. இப்பயிற்சி பட்டறையில் 30 மாணாக்கர்கள் பங்கேற்று பயனடைந்தனர்.

## 8.4 அறிவியியல் நகரம் 2017–18 ஆம் நிதியாண்டில் கீழ்க்காணும் திட்டங்களை செயல்படுத்த உள்ளது:

i) அடிப்படை அறிவியலில் கோடைக்கால பயிற்சி முகாம்.

ii) கல்லூரி மாணாக்கர்களுக்கான நுண் அறிவியல் மற்றும் நுண் தொழில்நுட்பப் பட்டறை.

iii) கல்லூரி மாணாக்கர்களுக்கான மூலக்கூறு உயிரியல் நுட்பங்கள் பற்றிய பயிற்சிப் பட்டறை.

`

iv) பால், மாமிசம், மீன் பொருட்களை பதப்படுத்துதல் பற்றிய பயிற்சிப் பட்டறை.

v) கல்லூரி மாணாக்கர்களுக்கான ஏரோ மாடலிங் பற்றிய பயிற்சிப் பட்டறை.

vi) தகவல் மற்றும் தொடர்பியல் தொழில் நுட்பம் – அண்மைக்கால போக்குகள் [மேகக் கணினியம் (Cloud computing), திறந்த நிலை கணினி வளம் (Open Source), செயற்கை நுண்ணறிவு (Artificial intelligence)] பற்றிய கருத்தரங்கு.

vii) கிராமப்புற மாணாக்கர்களுக்கான பொருளாதார மேம்பாட்டிற்காக அறிவியல் சார்ந்த கால்நடை வளர்ப்பு மற்றும் பராமரிப்பு குறித்து அறிவியல் பயிற்சிப் பட்டறை.

viii) கிராமப்புற மாணவர்களுக்காக அறிவியல் நிகழ்ச்சிகள்.

ix) தேவையின் அடிப்படையில் கிராமப்புற கண்டுபிடிப்புகளை கண்டறிந்து, விருது வழங்கி ஊக்குவித்தல்.

x) இல்லத்தரசிகளுக்கான கழிவிலிருந்து செல்வம் என்ற தலைப்பில் பயிற்சிப் பட்டறை.

xi) உயிர் தொழில்நுட்பம் மற்றும் மரபணு பொறியியலில் பயிற்சிப் பட்டறைகள்.

`

## 9. தமிழ்நாடு அறிவியல் தொழில்நுட்ப மையம்

**9.1.** தமிழ்நாடு அறிவியல் தொழில்நுட்ப மையம், தமிழக அரசால் 1983–ல் மாண்புமிகு உயர்கல்வித் துறை அமைச்சர் அவர்களின் தலைமையின் கீழ் இயங்கும் ஒரு தன்னாட்சி பெற்ற மையமாக நிறுவப்பட்டது. அறிவியல் தொழில்நுட்பக் கருத்துக்களை பொதுமக்களிடையேயும் குறிப்பாக மாணவர்களிடையேயும் பரவலாக்குவது இம்மையத்தின் முக்கிய நோக்கமாகும். பொது மக்களின் அனைத்து வயதினருக்கும் அறிவியல் கற்றல் என்பதை மகிழ்வளிப்பதாகவும், உற்சாகமளிக்கும் அனுபவமாகவும் இருக்கும்படி தமிழ்நாடு அறிவியல் தொழில்நுட்ப மையம் செய்து வருகிறது என்பதில் இம்மையம் பெருமை கொள்கிறது.

**9.2.** சென்னை பெரியார் அறிவியல் தொழில்நுட்ப மையம் மிகவும் புகழ்பெற்ற பி.எம்.பிர்லா கோளரங்கம் மற்றும் டாக்டர் சாலமன் விக்டரின் - இதயங்களின் காட்சிக்கூடத்தையும் உள்ளடக்கியுள்ளது. மேலும் பெரியார் அறிவியல் தொழில்நுட்ப மையம், வேடிக்கைக் கண்ணாடிகள் காட்சிக்கூடம், பெரியார் காட்சிக்கூடம், போக்குவரத்து, தகவல் தொழில்நுட்பம், ராமானுஜன் கணிதக்காட்சிக்கூடம், இந்திய விண்வெளி ஆய்வுக்காட்சிக்கூடம், உயிர் அறிவியல்,

`

கடல்சார் காட்சிக் கூடம், பாதுகாப்பு ஆராய்ச்சிக்காட்சிக்கூடம், அணுக்கரு ஆற்றல் காட்சிக்கூடம் மற்றும் மின்னணு மற்றும் தகவல் தொழில்நுட்பம் காட்சிக்கூடம் ஆகிய காட்சிக்கூடங்களை உள்ளடக்கியுள்ளது.

**9.3.** இந்த மையத்தில் ஆர்வம் ஊட்டும் வகையில் வெளிப்புறப் பரப்பளவில் வானவியல், அறிவியல், தொழில்நுட்பம், கணிதம் ஆகிய துறைகளில் அறிவியல் பூங்காக்கள், முப்பரிமாணத்திரையரங்கம், பரிணாம வளர்ச்சி பூங்கா மற்றும் மாநில அளவிலான ஆற்றல் பூங்கா ஆகியன பல்வேறு செய்திகளை உள்ளடக்கியவையாக அமைக்கப்பட்டுள்ளன.

**9.4.** பாதுகாப்பு ஆராய்ச்சிக் காட்சிக்கூடம் மற்றும் அணுக்கரு ஆற்றல் காட்சிக்கூடம் ஆகிய இரண்டு புதிய வசதிகள் அந்தந்தத்துறைகள் பற்றிய சிறப்பான செய்திகளை உள்ளடக்கியவையாக அமைக்கப்பட்டு, மாண்புமிகு முன்னாள் தமிழக முதலமைச்சர் அவர்களால் ஆகஸ்ட் **5, 2016** அன்று திறந்து வைக்கப்பட்டது.

**9.5.** தமிழ்நாடு அறிவியல் தொழில்நுட்ப மையமானது திருச்சியில் அண்ணா அறிவியல் மையம் மற்றும்

`

கோளரங்கத்தையும், கோவையில் மண்டல அறிவியல் மையத்தையும், வேலூரில் மாவட்ட அறிவியல் மையத்தையும் நிறுவியுள்ளது.

## 9.6. செயல்பாடுகள்

- தமிழ்நாடு அறிவியல் தொழில்நுட்ப மையம் மாணாக்கர்களுக்கு பல்வேறுபட்ட வகைகளில் அறிவியல் மேம்பாட்டு நிகழ்ச்சிகளை நடத்தி முறையான அறிவியல் கல்வி கற்றல் செயல்பாடுகளை மேம்படுத்துகிறது. அறிவியல் திறன் போட்டிகள், பயிலரங்குகள், சொற்பொழிவுகள், மாநில அளவிலான திறனறி மற்றும் ஊக்கமளித்தல் போட்டிகள், அறிவியல் மையத்தில் ஒரு நாள் நிகழ்ச்சிகள் மற்றும் மாணவர், ஆசிரியர் மற்றும் பொதுமக்களுக்கான பிற அறிவியல் நிகழ்ச்சிகளைத் தொடர்ந்து நடத்தி வருகிறது.

- தற்காலிகக் கண்காட்சிகள், பயிலரங்குகள், கருத்தரங்குகள், விரிவுரைகள் குறுகிய கால அறிவியல் வகுப்புகள், வானவியல்

`

பயிலரங்குகள், வினாடி வினா போட்டிகள் ஆகியனவும் அறிவியல் தொழில்நுட்ப மையத்தினால் தொடர்ந்து நடத்தப்பட்டு ஆண்டுதோறும் ஆயிரக்கணக்கான மாணவர்கள் மற்றும் பொதுமக்கள் பயனடைந்து வருகின்றனர். ஒவ்வொரு ஆண்டும் ஐக்கிய நாடுகள் சபை அந்த ஆண்டிற்கான அறிவியல் தலைப்பை அறிவியல் பரப்புரை நிகழ்வுகளுக்காக வெளியிடுகிறது. இதனையடுத்து, அந்தந்தத் துறைகளில் தமிழ்நாடு அறிவியல் தொழில்நுட்ப மையம் பல்வேறு நிகழ்ச்சிகளை மாணாக்கர்களின் நலனிற்காக நடத்துகிறது.

- வானவியல் நிகழ்வுகளின்போதும் மற்றும் தொடர் நிகழ்வாக இரவு நேர வானியல் நிகழ்வின் போதும் சிறந்த தொலை நோக்கிகளின் உதவியுடன் வான்நோக்கும் நிகழ்ச்சிகளை பொதுமக்களுக்காக இம்மையம் நடத்துகிறது. இது மாணாக்கர்கள் மற்றும் பொதுமக்களிடையே பெரும் வரவேற்பைப் பெற்றுள்ளது.

`

- நடமாடும் அறிவியல் கண்காட்சி மற்றும் நடமாடும் கணிதக் கண்காட்சி ஆகியன தமிழகத்தின் அனைத்து உட்புறப் பகுதிகளுக்கும் சென்றடையும் வண்ணம் இயக்கப்படுகின்றன.

- தமிழகப் பள்ளி மாணாக்கர்களிடையே அறிவியல்பால் ஈர்ப்பு ஏற்படும் விதமாக, புத்தாக்க அறிவியல் பயிற்சி மற்றும் ஊக்கத் தொகை அளிக்கப்பட்டு மாவட்ட, மாநில மற்றும் தேசிய அளவிலான போட்டிகளில் ஆறு முதல் பத்தாம் வகுப்புவரை பயிலும் மாணாக்கர்கள் பங்குபெற்று பயனடைந்து வருகின்றனர். இதுவரை 73,473 மாணாக்கர்களுக்கு தலா ரூ.5000 உடன், விருதுகளும் வழங்கப்பட்டுள்ளன. மேலும் 10 மாணாக்கர்கள் ஜப்பானுக்கு அறிவியல் தொழில்நுட்ப கருத்துக்களையும் ஆராய்ச்சி நிலைகளையும் அறிந்துவர தேர்ந்தெடுக்கப்பட்டு ஜப்பானுக்கு சென்று வந்துள்ளனர்.

`

## 9.7. அறிவியல் தொழில்நுட்பப் கருத்துகளைப் பரப்புவதற்காக உருவாக்கப்பட்டுள்ள வசதிகள்

அறிவியல் தொழில்நுட்ப கருத்துகளைப் பரப்புவதற்காக கீழ்க்கண்ட வசதிகள் மாண்புமிகு முன்னாள் முதலமைச்சர் அவர்களால் ஆகஸ்ட் 5, 2016 அன்று துவக்கி வைக்கப்பட்டன :

### 9.7.1. பரிணாம வளர்ச்சிப் பூங்கா, அண்ணா அறிவியல் மையம் –கோளரங்கம் திருச்சிராப்பள்ளி

தமிழ்நாடு அறிவியல் தொழில்நுட்ப மையமானது பரிணாம வளர்ச்சிப் பூங்கா ஒன்றினை அண்ணா அறிவியல் மையம், திருச்சிராப்பள்ளியில் ரூ. 70 இலட்சம் மதிப்பீட்டில் சென்னையில் உள்ள பரிணாம வளர்ச்சி பூங்கா அமைப்பினை போன்று அமைந்துள்ளது. இந்த பூங்கா ஆர்வமுள்ள பார்வையாளர்கள் பரிணாம வளர்ச்சி பற்றி தெரிந்துக்கொள்ள உதவுகிறது. இதுவரை சுமார் 29,250 பார்வையாளர்கள் இந்த வசதியை பார்வையிட்டு பயன் பெற்றுள்ளனர்.

`

## 9.7.2. புதுமைகாண் மையம், பெரியார் அறிவியல் தொழில்நுட்ப மையம், சென்னை

சென்னை, பெரியார் அறிவியல் தொழில்நுட்ப மையத்தில் ரூ. 1. கோடி மதிப்பீட்டில் ஒரு புதுமைகாண் மையம் அமைக்கப்பட்டுள்ளது. இங்கு பல்வேறு பயன்பாட்டுக் கருவிகளை மாணவர்கள் இயக்கவும், அவற்றைப் பிரித்து பின்னர் மீண்டும் இணைக்கவும் கற்றுக்கொள்வார்கள். புதுமையான கருத்துக்களை உருவாக்கி செயல்வடிவம் தர அவர்களுக்கு உதவும் வண்ணம் இங்கு பயிற்றுவிக்கப்படுகிறது. இதுவரை சுமார் 530 மாணாக்கர்கள் பயிற்றுவிக்கப்பட்டு பயன் பெற்றுள்ளனர். பல மாணாக்கர்கள் இந்த வசதியை பயன்படுத்தி அறிவியல் தொழில்நுட்பக் கருத்துக்களை கற்று அறிவை வளர்த்துக் கொள்கின்றனர்.

## 9.7.3. இந்திய பாதுகாப்பு ஆராய்ச்சி காட்சிக்கூடம், பெரியார் அறிவியல் தொழில்நுட்ப மையம், சென்னை

நாட்டின் பாதுகாப்பு படைகளில் மேற்கொள்ளப்பட்டு வரும் தொழில்நுட்ப வளர்ச்சி விவரங்கள் குறித்து பொதுமக்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்தும் பொருட்டு ரூ. 1 கோடி மதிப்பீட்டில் மைய அரசின் பாதுகாப்பு ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு அமைப்பின் (Defence Research and

`

Development Organisation) மூலமாக “இந்திய பாதுகாப்பு ஆராய்ச்சி” காட்சிக்கூடம் சென்னையிலுள்ள பெரியார் அறிவியல் தொழில்நுட்ப மையத்தில் நிர்மாணிக்கப்பட்டுள்ளது. இதுவரை சுமார் **1,55,000** பார்வையாளர்கள் இக்காட்சிக்கூடத்திற்கு வருகை தந்துள்ளனர்.

### 9.7.4. அணுக்கரு ஆற்றல் காட்சிக்கூடம், பெரியார் அறிவியல் தொழில்நுட்ப மையம், சென்னை

அணு ஆற்றல் மீதான தவறான எண்ணங்களை நீக்கி ஆதாரமற்ற அச்சத்தைப் போக்கும் பொருட்டு, அணு ஆற்றலை சமுதாயத்தின் ஆக்கபூர்வமான பயன்பாடுகளுக்கு உபயோகப்படுத்தப்படும் வழிமுறைகள் அடங்கிய அணுக்கரு ஆற்றல்காட்சிக்கூடம் (Hall of Nuclear Energy) ஒன்று, மத்திய அரசின் அணுக்கரு ஆற்றல் கழகத்தின் (Nuclear Power Corporation of India Limited) நிதி உதவியுடன் ரூ. 2.4 கோடி மதிப்பீட்டில் சென்னையிலுள்ள பெரியார் அறிவியல் தொழில்நுட்ப மையத்தில் அமைக்கப்பட்டுள்ளது. இதுவரை சுமார் **1,55,000** பார்வையாளர்கள் இக்காட்சிக்கூடத்திற்கு வருகை தந்துள்ளனர்.

`

## 9.7.5. முப்பரிமாண அறிவியல் அரங்கு, மாவட்ட அறிவியல் மையம், வேலூர்

ஆழ்ந்து உணரும் வகையில் அறிவியல் கருத்துக்களை வழங்கினால் அவற்றை எளிதாகத் தெரிவித்துவிடலாம். மனதைக் கவரும் வகையில் அறிவியல் கருத்துக்களை வழங்க முப்பரிமாண ஒளிப்படக்காட்சியரங்கு உதவும். மாணவர்கள் பயன்பெறும்பொருட்டு ரூ. 23 இலட்சம் செலவில் ஒரு முப்பரிமாண அரங்கு வேலூர் மாவட்ட அறிவியல் மையத்தில் அமைக்கப்பட்டுள்ளது.

## 9.8. அறிவியல் தொழில்நுட்பக் கருத்துகளைப் பரவலாக்க 2017 – 18 -ஆம் ஆண்டில் கீழ்க்காணும் செயல்பாடுகள் மேற்கொள்ளப்படும் :

## 9.8.1 . பெரியார் அறிவியல் தொழில்நுட்ப மையத்தில் எண்ணிலக்கக் கோளரங்கம் புதிதாக அமைத்தல்

வானவியல் மற்றும் வான் இயற்பியல் குறித்த செய்திகளை சிறப்புற வழங்கும் பொருட்டு நவீன தொழில்நுட்ப எண்ணிலக்க மின்னணு கருவியுடன் கூடிய கோளரங்கம் ஒன்று தற்போதுள்ள கோளரங்கத்தில் புதிதாக அமைக்கப்படும். இது வானவியல் கோட்பாடுகளை சிறந்த செயலாற்றலுடன் தெளிவாக விளக்கும் தன்மையுடையது.

`

இந்த எண்ணிலக்கக் கோளரங்க அமைப்பு ரூ. 10 கோடி மதிப்பீட்டில் அமைக்கப்படவுள்ளது.

### 9.8.2. கோயம்புத்தூர், மண்டல அறிவியல் மையத்தில் புதுமைகாண் மையம் நிறுவுதல்

கோயம்புத்தூரில் உள்ள மண்டல அறிவியல் மையத்தில் ரூ. 180 இலட்சம் மதிப்பீட்டில் புதுமைகாண் மையம் ஒன்று அமைக்கப்படும். இங்கு கண்டுபிடிப்புக்கூடம், கருத்து ஆய்வுக் கூடம், பிரித்து மீண்டும் உருவாக்கும் பகுதி, பயனற்றவை என ஒதுக்கும் பொருள்களிலிருந்து புதியன உருவாக்கும் பகுதி, கருத்துப் பெட்டி பகுதி என பல்வேறு பகுதிகள் அமைக்கப்படும். அறிவியல் கோட்பாடுகளைப் புரிந்து கொள்வதற்கும், தங்களுடைய புத்தாக்கத் திறமைகளை வளர்ப்பதற்கும் மாணவர்களுக்கான வாய்ப்புகளை இவை வழங்கும். இந்திய அரசின் பண்பாட்டு வளர்ச்சித் துறையின்கீழ் உள்ள தேசிய அறிவியல் அருங்காட்சியகம் (NCSM) மற்றும் தமிழ்நாடு அறிவியல் தொழில்நுட்ப மையம் ஆகியவை இணைந்து 50:50 என்ற விகிதத்தில் இத்திட்டம் செயல்படுத்தப்படும்.

`

## 9.8.3. திருச்சிராப்பள்ளி, அண்ணா அறிவியல் மையத்தில் புதுமைகாண் மையம் நிறுவுதல்

நவீன தொழில்நுட்பங்கள், அறிவியல் தொழில்நுட்ப வளர்ச்சி ஆகியவற்றை அறிந்து கொள்ளவும் புரிந்து கொள்ளவும் வாய்ப்பை வழங்குவது புதுமைகாண் மையத்தின் முக்கிய நோக்கமாகும். திருச்சிராப்பள்ளி, அண்ணா அறிவியல் மையத்தில் ரூ. 150 இலட்சம் மதிப்பீட்டில் புதிய புதுமைகாண் மையம் (Innovation Hub) நிறுவப்படவுள்ளது.

இந்த புதுமைகாண் மையம் மாணவர்களிடையே புதிய கண்டுப்பிடிப்புகளை மேற்கொள்வதற்கு ஊக்குவித்து எதிர்காலத்தில் அறிவியல் தொழில்நுட்ப துறையில் சிறந்து விளங்குவதற்கு உதவுகிறது. இந்திய அரசின் பண்பாட்டு வளர்ச்சித் துறையின்கீழ் உள்ள தேசிய அறிவியல் அருங்காட்சியகம் (NCSM) மற்றும் தமிழ்நாடு அறிவியல் தொழில்நுட்ப மையம் ஆகியவை இணைந்து 50:50 என்ற விகிதத்தில் இத்திட்டம் செயல்படுத்தப்படும்.

`

### 9.8.4. சென்னை, திருச்சிராப்பள்ளி மற்றும் வேலூர் அறிவியல் மையங்களில் குறுங்கோளரங்கங்கள் நிறுவுதல்

தமிழ்நாடு அறிவியல் தொழில்நுட்ப மையமானது, சென்னை மற்றும் திருச்சிராப்பள்ளியில் அமையப் பெற்றுள்ள கோளரங்கங்களின் மூலமாக வானவியல் கருத்துக்களை பள்ளி மாணவர்கள் மற்றும் பொதுமக்களுக்கு பரப்பி வருகின்றது. மாணவச் செல்வங்கள் பயனுறும் வகையில் நான்கு குறுங்கோளரங்கங்கள் ரூ. 40 இலட்சம் மதிப்பீட்டில் நிறுவப்படும் (சென்னையில் இரண்டு, திருச்சிராப்பள்ளி மற்றும் வேலூரில் ஒன்று).

### 9.8.5. பெரியார் அறிவியல் தொழில்நுட்ப மையத்தில் வான்ஆய்வுக்கூடம் நிறுவுதல்

வான்ஆய்வுக்கூடம் என்பது மிகச் சிறந்த தொலைநோக்கிகள், பிம்பங்களைப் பெறுவதற்கான கருவிகள், பகுப்பாய்வு செய்யப் பயன்படும் கருவிகள் முதலியவை பொருத்தப்பட்ட ஓரிடமாகும். விண்வெளியில் காணப்படும் பொருள்களை பொதுமக்கள் உற்று நோக்கவும், வான் இயற்பியலில் ஆய்வுகளை மேற்கொள்ளவும் இக்கூடம் பயன்படும். நகரக்கூடிய குவியமைப்புடைய கூரையுடன் வடிவமைக்கப்பட்ட கட்டிடத்தில் இத்தொலைநோக்கிகள்

`

பொருத்தப்பட்டிருக்கும். இந்த குவியமைப்புடைய கூரையானது வானை நோக்கி திரும்புவதற்கும் மற்றும் திறப்பதற்குமான வசதியைப் பெற்றுள்ளது. இத்தகைய வான்ஆய்வுக்கூடம் ரூ. 40 இலட்சம் மதிப்பீட்டில் அமைக்கப்படும்.

`

## 10. தமிழ்நாடு அறிவியல் தொழில்நுட்ப மாநில மன்றம்

**10.1.** தமிழ்நாடு அறிவியல் தொழில்நுட்ப மாநில மன்றம், தமிழக அரசால் ஒரு தன்னாட்சி நிறுவனமாக 1984 ஆம் ஆண்டு அமைக்கப்பட்டது. இம்மன்றம் பல்வேறு அறிவியல் துறைகளின் ஆராய்ச்சி மற்றும் முன்னேற்றத்திற்கான தலைமை நிறுவனமாகும். நமது மாநிலத்தின் அறிவியல் தொழில்நுட்ப வளர்ச்சியை ஊக்குவிக்க பல அறிவியல் தொழில்நுட்ப திட்டங்களை இம்மன்றம் நிறைவேற்றி வருகிறது.

**10.2.** அறிவியல் தொழில்நுட்ப திட்டங்களின் பரவலாக்கத்திற்காக கடந்த 2011 – 12 ஆம் ஆண்டு முதல் 2016 – 17 ஆம் ஆண்டு வரையிலான காலத்தில் ரூ. 1200.70 இலட்சம் தொகையும் மற்றும் 2017 – 18 ஆம் ஆண்டில் ரூ. 194.61 இலட்சம் தொகையும் ஒதுக்கீடு செய்யப்பட்டன. இதன் மூலம் இம்மன்றத்தின் செயல்பாடுகள் அதிகரிக்கப்படுவதோடு, ஆய்வுகள் மற்றும் விரிவாக்க திட்டங்களின் வாயிலாக அதிகப்படியான பயன்களை பெற முடியும்.

`

## 10.3. மாணவர் ஆராய்ச்சித் திட்டம்

இத்திட்டத்தின் கீழ், பி.இ./பி.டெக்./பி.ஆர்க் மற்றும் முதுநிலை அறிவியல், மருத்துவயியல், வேளாண்மையியல், கால்நடை மருத்துவயியல் மற்றும் பொறியியல் போன்ற துறைகளில் இறுதியாண்டில் பயின்றுவரும் மாணாக்கர்களுக்கு ஒரு ஆய்வு திட்டத்திற்கு அதிகபட்சமாக ரூ. 10,000 வரை நிதியுதவி வழங்கப்படுகிறது. சமூக பயன்பாடு கொண்ட மற்றும் நமது மாநிலத்திற்கு பயனளிக்கும் திட்டங்களுக்கு முன்னுரிமை வழங்கப்படுகிறது. 2011 – 12 ஆம் ஆண்டு முதல் 2016 – 17 ஆம் ஆண்டு வரை மொத்தம் ரூ. 110.92 இலட்சங்கள் செலவில் 1,550 திட்டங்களை இம்மன்றம் நிறைவேற்றியுள்ளது. இதனால் 3,650 மாணாக்கர்கள் பயனடைந்துள்ளனர். 2017 – 18 ஆம் ஆண்டில் ரூ. 20 இலட்சம் செலவில் 250 மாணவர் ஆய்வுத் திட்டங்களை செயல்படுத்த திட்டமிடப்பட்டுள்ளது.

`

## 10.4. அறிவியல் தொழில்நுட்ப ஆய்வுத் திட்டங்கள்

அறிவியலறிஞர்கள் மற்றும் ஆராய்ச்சியாளர்களுக்கு உயிரியல், வேளாண்மை, சுற்றுப்புறச் சூழல், மருத்துவவியல், சமூகவியல் மற்றும் பொறியியல்/ தொழில்நுட்பம் போன்ற பிரிவுகளில் ஆய்வுகள் மேற்கொள்ள நிதியுதவி வழங்கப்படுகிறது. 2011 – 12 ஆம் ஆண்டு முதல் 2016 – 17 ஆம் ஆண்டு வரை மொத்தம் ரூ. 193.15 இலட்சம் செலவில் 90 திட்டங்களை இம்மன்றம் நிறை வேற்றியுள்ளது. இதனால் 175 ஆய்வாளர்கள் பயனடைந்துள்ளனர். 2017 – 18 ஆம் ஆண்டில் ரூ. 35 இலட்சம் செலவில் 15 திட்டங்களை தொடர திட்டமிடப்பட்டுள்ளது.

## 10.5. இளம் மாணவ அறிவியலறிஞர்கள் செயல் திட்டம்

இத்திட்டத்தின் மூலம் ஒன்பதாம் வகுப்பு மாணவர்கள் எதிர்காலத்தில் அறிவியல் மற்றும் ஆராய்ச்சிகளில் ஈடுபட ஊக்கமளிக்கப்படுகிறது. பல்வேறு மாவட்டங்களிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட மாணாக்கர்களுக்கு கல்லூரி அல்லது பல்கலைக்கழகத்தில் திறமை வாய்ந்த பேராசிரியர்களால் மே திங்களில் பல்வேறு அறிவியல் தொழில்நுட்பங்கள் குறித்து சிறப்பு பயிற்சி அளிக்கப்படுகிறது. 2011 – 12 ஆம் ஆண்டு

`

முதல் 2016 – 17 ஆம் ஆண்டு வரை மொத்தம் ரூ. 132.10 இலட்சம் செலவில் 65 திட்டங்களை இம்மன்றம் நிறைவேற்றியுள்ளது. இதனால் 2,800 மாணாக்கர்கள் பயனடைந்துள்ளனர். 2017 – 18 ஆம் ஆண்டில் ரூ. 15 இலட்சம் செலவில் 10 மாவட்டங்களில் இத்திட்டத்தை செயல்படுத்த திட்டமிடப்பட்டுள்ளது.

## 10.6. இளம் அறிவியலறிஞர்களுக்கு ஆதரவு ஊதியம் அளித்தல்

இத்திட்டத்தின் வாயிலாக 40 வயதுக்குட்பட்ட இளம் அறிவியல் ஆராய்ச்சியாளர்கள், ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி தொழில்நுட்பங்களின் நுணுக்கங்களை நன்கு கற்றுக் கொள்வதற்காக, ஒரு முதுநிலை அறிவியலறிஞருடன் சேர்ந்து ஆராய்ச்சி செய்யவும் அதிநவீன கருவிகளின் செயல்முறை தொழில்நுட்பத்தைக் கற்றுக் கொள்ளவும் ஊக்கப்படுத்தப்படுகிறது. இத்திட்டத்தின்படி அவர்களுக்கு தாங்கள் பணிபுரியும் தாயக நிறுவனங்களில் பெற்றுவரும் மாதச் சம்பளத்துடன் கூடுதலாக ஆதரவு ஊதியம் மாதந்தோறும் ரூ. 10,000 இரண்டு முதல் ஆறு மாதங்களுக்கு வழங்கப்படும். 2011 – 12 ஆம் ஆண்டு முதல் 2016 – 17 ஆம் ஆண்டு வரை மொத்தம் ரூ. 16.45 இலட்சம் செலவில் 135 ஆய்வாளர்களுக்கு இம்மன்றம் நிதியுதவி வழங்கி

`

பயனடையச்செய்துள்ளது. இத்திட்டத்தை 2017 – 18 ஆம் ஆண்டில் ரூ. 3 இலட்சம் செலவில் செயல்படுத்த திட்டமிடப்பட்டுள்ளது.

## 10.7. கருத்தரங்கு மற்றும் பயிற்சிப் பட்டறை நடத்துவதற்கு பகுதி நிதியுதவி அளித்தல்

நமது மாநிலத்திலுள்ள கல்வி மற்றும் ஆராய்ச்சி நிறுவனங்களுக்கு அறிவியல் ஆய்வு குறித்து பரிமாற்றங்கள் செய்யவும், கலந்துரையாடவும் கருத்தரங்குகள் மற்றும் பயிற்சிப் பட்டறைகள் நடத்த பகுதி நிதியுதவி வழங்கப்படுகிறது. 2011 – 12 ஆம் ஆண்டு முதல் 2016 – 17 ஆம் ஆண்டு வரை மொத்தம் ரூ. 53.59 இலட்சம் செலவில் 215 திட்டங்களை இம்மன்றம் நிறைவேற்றியுள்ளது. இதனால் 11,000 மாணவர்கள் மற்றும் ஆய்வாளர்கள் பயனடைந்துள்ளனர். 2017 – 18 ஆம் ஆண்டில் இத்திட்டத்தில் ரூ. 10 இலட்சம் செலவில் 50 கருத்தரங்குகள் மற்றும் பயிற்சிப் பட்டறைகளுக்கு நிதியுதவி அளிக்க திட்டமிடப்பட்டுள்ளது.

## 10.8 அறிவியல் தொழில்நுட்பத்தைப் பிரபலப்படுத்துதல்

பல்கலைக்கழகங்கள், கல்லூரிகள், அரசு சாரா தன்னார்வ அமைப்புகள் அறிவியல் மற்றும்

`

தொழில்நுட்பங்களை விவசாயிகள், பொதுமக்கள் மற்றும் பள்ளிக் குழந்தைகளிடையே பிரபலப்படுத்துவதற்கு நிதியுதவி அளிக்கப்படுகிறது. அறிவியல் கண்காட்சிகள், பயிற்சி முகாம்கள், விரிவுரைகள் போன்ற நிகழ்ச்சிகள் மூலம் இத்திட்டத்தின் நோக்கம் நிறைவேற்றப்படுகிறது. **2011 – 12** ஆம் ஆண்டு முதல் **2016 – 17** ஆம் ஆண்டு வரை மொத்தம் ரூ. **50.79** இலட்சம் செலவில் **460** திட்டங்களை இம்மன்றம் நிறைவேற்றியுள்ளது. இதனால் **23,000** மாணாக்கர்கள் மற்றும் ஆய்வாளர்கள் பயனடைந்துள்ளனர். **2017 – 18** ஆம் ஆண்டில் இத்திட்டத்தின் மூலம் ரூ. **7.50** இலட்சம் செலவில் **50** நிகழ்வுகளுக்கு நிதியுதவி அளிக்க திட்டமிடப்பட்டுள்ளது.

## 10.9. இளம் அறிவியலறிஞர்களுக்கு பயண நிதிஉதவி அளித்தல்

தமிழகத்திலுள்ள **40** வயதுக்கு கீழ் உள்ள இளம் அறிவியல் ஆராய்ச்சியாளர்கள் பன்னாட்டு மாநாடுகளில் கலந்து கொள்வதற்கு தேவையான விமான பயணத்தொகையில் **50** விழுக்காடு வரை நிதி உதவியும் மற்றும் அத்தகைய உள்நாட்டு மாநாடுகளில் பங்கு கொள்வதற்கு **100** விழுக்காடு இரயில் பயணக்கட்டணமும்

`

நிதி உதவியாக வழங்கப்படுகிறது. 2011 – 12 ஆம் ஆண்டு முதல் 2016 – 17 ஆம் ஆண்டு வரை மொத்தம் ரூ. 16.03 இலட்சம் செலவில் 92 அறிவியலறிஞர்களுக்கு இம்மன்றம் நிதியுதவி வழங்கி ஊக்குவித்துள்ளது. 2017 – 18 ஆம் ஆண்டில் ரூ. 2.50 இலட்சம் செலவில் ஆய்வாளர்களுக்கு தங்களுடைய ஆராய்ச்சிகளின் கண்டுபிடிப்புகளைச் சமர்ப்பிக்க செல்வதற்கு உதவி செய்ய திட்டமிடப்பட்டுள்ளது.

## 10.10. அறிவியல் தொழில்நுட்ப வெளியீடுகளுக்கு நிதியுதவி அளித்தல்

இத்திட்டத்தின் நோக்கம், பள்ளி, கல்லூரி மாணாக்கர்கள் மற்றும் பொது மக்கள் பயன்பெறும் வகையில் நிறுவனங்கள்/அறிவியலறிஞர்கள்/ஆசிரியர்கள் போன்றோரை தமிழில் அறிவியல் வெளியீடுகளை வெளிக்கொணர ஊக்குவிப்பதாகும். 2011 – 12 ஆம் ஆண்டு முதல் 2016 – 17 ஆம் ஆண்டு வரை மொத்தம் ரூ. 2.76 இலட்சம் செலவில் 24 வெளியீடுகளுக்கு இம்மன்றம் நிதியுதவி வழங்கியுள்ளது. இதனால் 24,000 மாணவர்கள் மற்றும் பொதுமக்கள் பயனடைந்துள்ளனர். 2017 – 18 ஆம் ஆண்டில்

`

ரூ. **0.50** இலட்சம் செலவில் அறிவியல் வெளியீடுகளுக்கு நிதியுதவி வழங்க திட்டமிடப்பட்டுள்ளது.

## 10.11. தமிழக அறிவியலறிஞர்கள் விருது

அறிவியல் தொழில்நுட்ப துறையில் குறிப்பிடத்தக்க அளவில் பணிகள் செய்த அறிவியலாளர்களை 'தமிழக அறிவியலறிஞர்கள் விருது' என்ற பெயரில் ரூ.**50,000/–** ரொக்கமும், சான்றிதழும் வழங்கி ஊக்குவிப்பது மற்றும் பெருமைப்படுத்துவது இத்திட்டத்தின் நோக்கமாகும். இத்திட்டத்தின் கீழ் 1) வேளாண்மை **2)** உயிரியல் **3)** வேதியியல் **4)** பொறியியல் தொழில் நுட்பம் **5)** சுற்றுப்புறச் சூழலியல் **6)** மருத்துவம் **7)** கணிதவியல் **8)** இயற்பியல் **9)** சமூகவியல் **10)** கால்நடை மருத்துவயியல் போன்ற துறைகளில் விருதுகள் வழங்கப்படுகின்றன. **2011 – 12** ஆம் ஆண்டு முதல் **2016 – 2017** ஆம் ஆண்டு வரை இம்மன்றம், மொத்தம் ரூ. **23.32** இலட்சம் செலவில் **50** அறிஞர்களுக்கு விருதுகள் வழங்கி கௌரவித்துள்ளது. **2016 – 17** ஆம் ஆண்டில் ஆய்வாளர்களை ரூ. **7** இலட்சம் செலவில் கௌரவிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இத்

`

திட்டத்தை வரும் 2017 – 18 ஆம் ஆண்டில் ரூ. 7 இலட்சம் செலவில் தொடர திட்டமிடப்பட்டுள்ளது.

## 10.12. அறிவியல் விழிப்புணர்வை ஏற்படுத்துதல்

நமது மாநிலத்திலுள்ள பல்வேறு நிறுவனங்களுக்கு நிதியுதவி வழங்குவதன் மூலம் கிராமப்புற மாணாக்கர்கள், விவசாயிகள் மற்றும் சுயஉதவி குழுக்களின் உறுப்பினர்களிடையே அறிவியல் விழிப்புணர்வை ஏற்படுத்துவதே இத்திட்டத்தின் நோக்கமாகும். 2011 – 12 ஆம் ஆண்டு முதல் 2016 – 17ஆம் ஆண்டு வரை மொத்தம் ரூ. 38.55 இலட்சம் செலவில் 70 திட்டங்களை இம்மன்றம் நிறைவேற்றியுள்ளது. இதனால் 10,750 மக்கள் பயனடைந்துள்ளனர். 2017 – 18ஆம் ஆண்டில் ரூ. 6.50 இலட்சம் செலவில் 10 மாவட்டங்களில் இத்திட்டத்தை செயல்படுத்த திட்டமிடப்பட்டுள்ளது.

## 10.13 கிராமப்புற பள்ளிகளில் அறிவியல் கல்வியின் தரத்தை உயர்த்துதல்

ஆறாம் வகுப்பு முதல் எட்டாம் வகுப்புவரை அறிவியல் பாடங்களை நடத்தும் பள்ளி ஆசிரியர்களுக்கு அவர்களின் கற்பிக்கும் திறனை மேம்படுத்த, நமது மாநிலத்தில் கலை

`

மற்றும் அறிவியல் கல்லூரிகளில் **5** நாட்களுக்கு பயிற்சி அளிக்கப்படுகிறது. **2011 – 12**ஆம் ஆண்டு முதல் **2016 – 17**ஆம் ஆண்டு வரை மொத்தம் ரூ **55.68** இலட்சம் செலவில் **70** திட்டங்களை இம்மன்றம் நிறைவேற்றியுள்ளது. இதனால் **3,500** ஆசிரியர்கள் பயனடைந்துள்ளனர். **2017 – 18**ஆம் ஆண்டில் ரூ. **9** இலட்சம் செலவில் **10** மாவட்டங்களில் இத்திட்டத்தை செயல்படுத்த திட்டமிடப்பட்டுள்ளது.

## 10.14. புதுமைத் தொழில்நுட்பமும் பரவலாக்கமும்

புதிய மற்றும் பயனுள்ள வேலைவாய்ப்புகளை மேம்படுத்தும் தொழில்நுட்பங்களை கல்வியாளர்கள் மற்றும் அறிவியலாளர்கள் மூலம் உரிய பயனாளிகளுக்கு எடுத்துச் செல்ல தேவையான பயிற்சி மற்றும் பட்டறைகள் இத்திட்டத்தின் வாயிலாக ஏற்பாடு செய்யப்படுகின்றன. **2011 – 12**ஆம் ஆண்டு முதல் **2016 – 17**ஆம் ஆண்டு வரை மொத்தம் ரூ **51.05** இலட்சம் செலவில் **98** திட்டங்களை இம்மன்றம் நிறைவேற்றியுள்ளது. இதனால் **3,000** மாணவர்கள்/ சுய உதவி குழு உறுப்பினர்கள் மற்றும் பொதுமக்கள் பயனடைந்துள்ளனர். இத்திட்டம் **2017 – 18**ஆம்

`

ஆண்டில் ரூ. 9 இலட்சம் செலவில் செயல்படுத்த திட்டமிடப்பட்டுள்ளது.

## 10.15. கிராமப்புற மேம்பாட்டிற்கு அறிவியல் தொழில்நுட்பங்களின் பயன்பாடு

கிராமப்புற மக்களுக்கு அறிவியல் தொழில்நுட்பங்கள் மற்றும் கண்டுபிடிப்புகளின் பயன்களை தேர்ந்தெடுக்கப்பட்ட கல்வி மற்றும் ஆராய்ச்சி நிறுவனங்கள் மூலம் எளிதில் கொண்டு சேர்ப்பதே இத்திட்டத்தின் நோக்கமாகும். 2011 – 12 ஆம் ஆண்டு முதல் 2016 – 17ஆம் ஆண்டு வரை மொத்தம் ரூ 66.10 இலட்சம் செலவில் 60 திட்டங்களை இம்மன்றம் நிறைவேற்றியுள்ளது. இதனால் 17,000 கிராமப்புற மக்கள் பயனடைந்துள்ளனர். 2017 – 18ஆம் ஆண்டில் ரூ. 10.00 இலட்சம் செலவில் 10 மாவட்டங்களில் இத்திட்டத்தை செயல்படுத்த திட்டமிடப்பட்டுள்ளது.

## 10.16. தொழில்துறைக்கான அறிவியல் மற்றும் தொழில்நுட்ப திறன் வளர்த்தல்

தொழில்துறைக்கேற்றவாறு பட்டதாரிகளின் திறமைகளை மேம்படுத்துவதற்கும், அவர்கள் தாங்களாகவே சுயதொழில் தொடங்குவதற்கு ஊக்கப்படுத்தவும் பயிற்சி அளிப்பது இத்திட்டத்தின் நோக்கமாகும். தொழிற்சாலைகள் மற்றும்

`

கல்லூரிகள் (பலவகை தொழில்நுட்ப கல்லூரிகள் உட்பட) இணைந்து இப்பயிற்சியினை அளிக்கின்றன. 2011 – 12ஆம் ஆண்டு முதல் 2016 – 17ஆம் ஆண்டு வரை மொத்தம் ரூ 66.10 இலட்சம் செலவில் 60 திட்டங்களை இம்மன்றம் நிறைவேற்றியுள்ளது. இதனால் 14,000 மாணவர்கள் பயனடைந்துள்ளனர். 2017 – 18ஆம் ஆண்டில் ரூ. 10 இலட்சம் செலவில் 10 மாவட்டங்களில் இத்திட்டத்தை செயல்படுத்த திட்டமிடப்பட்டுள்ளது.

**10.17. கல்லூரிகளின் ஆய்வு மாணவர்களுக்கான அறிவியல் ஆய்வு நிதியுதவி பற்றாக் குறையை களையும் திட்டம்**

கல்லூரி ஆய்வு மாணவர்களின் ஆய்வுத் திட்ட வரைவுகளை கல்லூரிகளிலிருந்து பெற்று அவற்றுள் தேர்வு செய்யப்பட்ட ஆய்வுத் திட்டங்களுக்கு நிதியுதவி அளிக்கப்படுகிறது. 2011 – 12ஆம் ஆண்டு முதல் 2016– 17ஆம் ஆண்டு வரை ரூ. 75 இலட்சம் செலவில் 25 மாணவர்கள் பயனுறும் வகையில் நிதியுதவி அளிக்கப்பட்டுள்ளது. 2017 – 18 ஆம் ஆண்டில் ரூ. 15 இலட்சம் செலவில் இத்திட்டத்தை தொடர்ந்து செயல்படுத்த திட்டமிடப்பட்டுள்ளது.

`

## 10.18. அரசு கல்லூரிகளின் அறிவியல் மற்றும் தொழில்நுட்ப ஆய்வு கட்டமைப்பை மேம்படுத்துதல்

ஆராய்ச்சி மற்றும் முன்னேற்றத்திற்கு உகந்த அறிவியல் ஆய்வு கட்டமைப்புகளை அரசு கல்லூரிகளில் மேம்படுத்துவதன் மூலம் உயர்கல்வி மாணவர்களின் ஆய்வுத்திறனை உயர்த்துவதே இத்திட்டமாகும். இதற்காக அரசு அறிவியல் கல்லூரிகளில் அறிவியல் ஆய்வுக் கட்டமைப்புகளான ஆய்வுக் கூட வசதி மற்றும் ஆய்வு உபகரண வசதி ஆகியவை மேம்படுத்தப்பட நிதியுதவி வழங்கப்படுகிறது. 2011 – 12ஆம் ஆண்டு முதல் 2016 – 17ஆம் ஆண்டு வரை ரூ. 60 இலட்சம் செலவில் 13 அரசு கல்லூரிகள் பயனுறும் வகையில் நிதியுதவி அளிக்கப்பட்டது. 2017 – 18ஆம் ஆண்டில் மேலும் ரூ. 15 இலட்சம் செலவில் இத்திட்டத்தை தொடர திட்டமிடப்பட்டுள்ளது.

`

# 11. தமிழ் நாடு மாநில தொழில்நுட்பக் கல்வி மன்றம்

**11.1.** பல்கலைக் கழகங்களின் மானியக் குழு மற்றும் அகில இந்திய தொழில்நுட்பக் கல்வி மன்றம் ஆகியவற்றுக்கு தொழில்நுட்பக் கல்வியின் தரம் மற்றும் நியமங்களை பேணுவதற்கு உதவிடவும், மாநிலத்தில் தொழில்நுட்பக் கல்வியின் வளர்ச்சிக்காக தொலைநோக்கு திட்டங்கள் தயாரிக்கவும், தொழில்நுட்பப் பல்கலைக்கழகத்தில் மேன்மை மையங்களை அடையாளம் காணவும், தேர்வுகளில் தேவையான சீர்திருத்தங்கள் செய்யவும், பொறியியல் மற்றும் தொழில்நுட்பத்தில் இன்றைய அளவிலான வளர்ச்சிகளுக்கேற்றப்படி பாடத்திட்டதைத் திருத்தி அமைக்கவும், 2010 ஆம் ஆண்டு தமிழ் நாடு சட்டத்தின்படி தமிழ் நாடு மாநில தொழில் நுட்பக் கல்வி மன்றம் நிறுவப்பட்டது.

## 11.2 . 2011 – 12 முதல் 2016 – 17 முடிய உள்ள ஆண்டுகளில் செய்த முக்கிய சாதனைகள்

i) தேசிய தர அங்கீகார வாரியத்தின் ஒருங்கிணைப்புடன், தரச் சான்றிதழ் வழங்குதல் தொடர்பாக வாஷிங்டன் ஒப்பந்தம் மற்றும் ‘அபெட்’ முடிவுகள் (ABET - Accreditation Board of Engineering and

`

Technology) அடிப்படையில் சென்னையில் 2011 ஆம் ஆண்டு மே மாதத்தில் பன்னாட்டு மாநாடு நடத்தப்பட்டது.

ii) ஆங்கிலம் போதிக்கும் ஆசிரியர்கட்கும் புதிதாக பொறியியல் கல்வி பயில சேர்ந்த மாணவர்கட்கும் ஆங்கிலம் புரிந்துகொள்ளும் திறனை மேம்படுத்த பிரிட்டிஷ் கவுன்சிலின் ஒத்துழைப்புடன் ஜூலை 2012ல் ஆங்கில மொழியில் (இணைப்புப் பாதை கல்விப் பயிற்சி) சிறப்புப் பயிற்சி திட்டங்களை அண்ணா பல்கலைக் கழகம், சென்னை உடன் சேர்ந்து ஒருங்கிணைக்கப்பட்டது.

iii) அ) தொழில் நுட்ப ஆங்கிலம், ஆ) பொறியியல் பௌதிகம், இ) கணிதவியல் பாடங்கள் குறித்த கல்வி ஆதார ஏடுகள் இம்மன்றத்தால் பல்வேறு பொறியியல் கல்லுரிகளுக்கு வழங்கப்பட்டன.

iv) ஆங்கில மொழி போதனையில் பிறமொழிச் சொல் பயன்பாட்டு முறைமைகள் குறித்து ஒரு பன்னாட்டு கருத்தரங்கம் கேம்பிரிட்ஜ் பல்கலைக் கழக பேராசிரியர்களைக் கொண்டு நவம்பர் 2014ல் அண்ணா பல்கலைக் கழகம், மற்றும் தொழில்நுட்பக் கல்வி தர மேம்பாடு திட்ட ஏதுவாக்கல் அலகின் ஒத்துழைப்புடனும் நடத்தப்பட்டது.

v) மார்ச் 2016 இல் நாஸ்காம் (NASSCOM) இன் ஒருங்கிணைந்த உற்பத்தி வளர்ச்சியில் அடிப்படைத் திறன் எனும் பயிற்சி இம்மன்றம், அண்ணா பல்கலைக்கழகத்தின் ஆசிரியர் மேம்பாட்டு மையம் ஆகியோரின் ஒருங்கிணைப்பில் 180 ஆசிரியர்களுக்கு

`

சென்னை, திருநெல்வேலி மற்றும் நாகர்கோவில் ஆகிய இடங்களில் நடத்தப்பட்டது.

vi) மாநிலத்தில் தொழில் நுட்பக் கல்வியின் தரத்தினை மேம்படுத்த திருத்தப்பட்ட தொலைநோக்கு திட்டம் தயாரிக்கப்பட்டு வருகிறது.

`

## 12. தமிழ்நாடு மாநில உருது கழகம்

**12.1.** தமிழ்நாடு மாநில உருது கழகம் 2000ஆம் ஆண்டில் தொடங்கப்பட்டது. மாண்புமிகு உயர்கல்வித் துறை அமைச்சர் அவர்கள் இக்கழகத்தின் தலைவர் ஆவார். தமிழ்நாட்டில் 20 கல்லூரிகளில் உருது மொழி பாடப்பிரிவும், 5 கல்லூரிகளில் அரபு மொழி பாடப்பிரிவும் நடத்தப்படுகிறது.

**12.2.** தேசிய வணிகர் கூட்டமைப்புடன் இணைந்து அகில இந்திய அளவில் தமிழ்நாடு மாநில உருது கழகத்தால் கவியரங்கம் நடத்தப்படுகிறது. இக்கழகம் உருது மொழியில் சிறந்து விளங்கும் இலக்கியத்திற்காக ரூ. 25,000 பரிசுத் தொகையுடன் கூடிய 'டாக்டர் அப்துல் ஹக்' விருதினை ஆறு கவிஞர்களுக்கும், உருது மொழி தேர்வுகளில் மாநில அளவில் இடம் பிடித்த மாணவர்களுக்கு தகுதிப் பரிசு மற்றும் பணப் பரிசுகளும் வழங்கப்படுகிறது.

**கே.பி. அன்பழகன்**
உயர்கல்வித் துறை அமைச்சர்

# கல்லூரிக் கல்வி

## 2016–17ஆம் ஆண்டில் கலை மற்றும் அறிவியல் கல்லூரிகள் மற்றும் கல்வியியல் கல்லூரிகளில் மாணாக்கர்கள் சேர்க்கை

| கல்லூரிகளின் வகைகள் | சேர்க்கை விவரம் | | | | | |
|---|---|---|---|---|---|---|
| | இளநிலை | முதுநிலை | ஆராய்ச்சி படிப்பு | கல்வியியல் | ஆராய்ச்சி மேற்படிப்பு | மொத்தம் |
| அரசு கல்லூரிகள் | 64165 | 14499 | 2207 | 1281 | 699 | **82851** |
| அரசு உதவிபெறும் கல்லூரிகள் | 98507 | 23347 | 2106 | 2140 | 526 | **126626** |
| பல்கலைக்கழக உறுப்புக் கல்லூரிகள் | 12819 | 408 | 20 | 0 | 27 | **13274** |
| சுயநிதி கல்லூரிகள் | 105623 | 17949 | 1373 | 69122 | 252 | **194319** |
| மொத்தம் | **281114** | **56203** | **5706** | **72543** | **1504** | **417070** |

# தொழில்நுட்பக் கல்வி

## 2016 –17 ஆம் ஆண்டில் பலவகை தொழில்நுட்பக் கல்லூரிகளில் முதலாம் ஆண்டு பட்டய வகுப்பு மாணாக்கர்கள் சேர்க்கை விவரம்

| கல்லூரிகளின் வகைகள் | கல்லூரிகளின் எண்ணிக்கை | பொது | | பிற்பட்ட வகுப்பினர் (மற்றவர்) | | பிற்பட்ட வகுப்பினர் (முஸ்லிம்) | | மிகவும் பிற்பட்ட வகுப்பினர் / சீர் மரபினர் | | ஆதிதிராவிடர் | | ஆதிதிராவிடர் (அருந்ததியர்) | | பழங்குடியினர் | | மொத்தம் | | மொத்த சேர்க்கை |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | ஆண் | பெண் | ஆண் | பெண் | ஆண் | பெண் | ஆண் | பெண் | ஆண் | பெண் | ஆண் | பெண் | ஆண் | பெண் | ஆண் | பெண் | |
| அரசுக் கல்லூரிகள் | 46 | 146 | 25 | 4294 | 696 | 493 | 43 | 4229 | 633 | 2204 | 498 | 251 | 79 | 82 | 15 | 11699 | 1989 | 13688 |
| அரசு உதவிபெறும் கல்லூரிகள் | 34 | 431 | 51 | 4705 | 517 | 651 | 28 | 2768 | 278 | 1189 | 194 | 207 | 23 | 52 | 2 | 10003 | 1093 | 11096 |
| இணைப்புப் பயிலகங்கள் | 5 | 15 | 1 | 92 | 0 | 8 | 0 | 63 | 0 | 72 | 0 | 2 | 0 | 1 | 0 | 253 | 1 | 254 |
| சுயநிதி கல்லூரிகள் | 418 | 6721 | 690 | 23366 | 1576 | 3656 | 116 | 19411 | 1160 | 24262 | 3886 | 1678 | 347 | 887 | 159 | 79981 | 7934 | 87915 |
| பொறியியல் கல்லூரிகளில் சுழற்சி முறையில் நடத்தப்படும் பட்டய நிலை வகுப்புகள் | * | 137 | 12 | 72 | 5 | 3 | 1 | 35 | 4 | 116 | 7 | 30 | 11 | 2 | 0 | 395 | 40 | 435 |
| உணவு மேலாண்மை பயிலகங்கள் | 15 | 6 | 1 | 29 | 4 | 1 | 0 | 12 | 1 | 12 | 0 | 0 | 0 | 0 | 0 | 60 | 6 | 66 |
| மொத்தம் | 518 | 7456 | 780 | 32558 | 2798 | 4812 | 188 | 26518 | 2076 | 27855 | 4585 | 2168 | 460 | 1024 | 176 | 102391 | 11063 | 113454 |

* பட்டய நிலை வகுப்புகள் சுழற்சி முறையில் ஐந்து பொறியியல் கல்லூரிகளில் நடத்தப்படுகின்றன.

# தொழில்நுட்பக் கல்வி

## 2016–17 ஆம் ஆண்டில் பொறியியல் கல்லூரிகளில் முதலாம் ஆண்டு பி.ஈ. / பி.டெக். / பி.ஆர்க். மாணாக்கர்கள் சேர்க்கை விவரம்

| கல்லூரிகளின் வகைகள் | கல்லூரிகளின் எண்ணிக்கை | பொது | | பிற்பட்ட வகுப்பினர் (மற்றவர்) | | பிற்பட்ட வகுப்பினர் (முஸ்லிம்) | | மிகவும் பிற்பட்ட வகுப்பினர் / சீர் மரபினர் | | ஆதிதிராவிடர் | | ஆதிதிராவிடர் (அருந்ததியர்) | | பழங்குடியினர் | | மொத்தம் | | மொத்த சேர்க்கை |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | ஆண் | பெண் | ஆண் | பெண் | ஆண் | பெண் | ஆண் | பெண் | ஆண் | பெண் | ஆண் | பெண் | ஆண் | பெண் | ஆண் | பெண் | |
| அரசு பொறியியல் கல்லூரிகள் | 10 | 84 | 49 | 877 | 584 | 100 | 47 | 513 | 333 | 258 | 218 | 59 | 41 | 21 | 8 | 1912 | 1280 | 3192 |
| அரசு உதவி பெறும் பொறியியல் கல்லூரிகள் | 3 | 208 | 120 | 887 | 624 | 63 | 28 | 330 | 184 | 193 | 105 | 29 | 25 | 11 | 7 | 1721 | 1093 | 2814 |
| சுயநிதி பொறியியல் கல்லூரிகள் | 554 | 10990 | 3796 | 38697 | 21143 | 4431 | 1241 | 19599 | 8210 | 16373 | 9880 | 1552 | 1110 | 628 | 277 | 92270 | 45657 | 137927 |
| அண்ணா பல்கலைக்கழக உறுப்புக் கல்லூரிகள் | 17 | 156 | 135 | 1754 | 1256 | 191 | 116 | 1132 | 705 | 562 | 461 | 92 | 58 | 33 | 15 | 3920 | 2746 | 6666 |
| மொத்தம் | 584 | 11438 | 4100 | 42215 | 23607 | 4785 | 1432 | 21574 | 9432 | 17386 | 10664 | 1732 | 1234 | 693 | 307 | 99823 | 50776 | 150599 |

**பல்கலைக்கழகங்கள்**
**2016–17ஆம் ஆண்டில் பல்கலைக்கழக வளாகத்தில்**
**பயிலும் மாணாக்கர்களின் எண்ணிக்கை**

| வ. எண். | பல்கலைக்கழகத்தின் பெயர் | மாணவர்களின் எண்ணிக்கை | | மொத்தம் |
|---|---|---|---|---|
| | | ஆண் | பெண் | |
| 1 | சென்னைப் பல்கலைக்கழகம், சென்னை | 522 | 661 | 1,183 |
| 2 | அண்ணாமலை பல்கலைக்கழகம், அண்ணாமலை நகர் | 11,113 | 10,205 | 21,318 |
| 3 | மதுரை காமராசர் பல்கலைக்கழகம், மதுரை | 953 | 924 | 1,877 |
| 4 | அண்ணா பல்கலைக்கழகம், சென்னை | 9,550 | 6,457 | 16,007 |
| 5 | பாரதியார் பல்கலைக்கழகம், கோயம்புத்தூர் | 1,225 | 2,099 | 3,324 |
| 6 | பாரதிதாசன் பல்கலைக்கழகம், திருச்சிராப்பள்ளி | 726 | 1,098 | 1,824 |
| 7 | அன்னை தெரசா மகளிர் பல்கலைக்கழகம், கொடைக்கானல் | - | 766 | 766 |
| 8 | அழகப்பா பல்கலைக்கழகம், காரைக்குடி | 1,486 | 3,244 | 4,730 |
| 9 | மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகம், திருநெல்வேலி | 366 | 1,006 | 1,372 |
| 10 | பெரியார் பல்கலைக்கழகம், சேலம் | 1,549 | 2,254 | 3,803 |
| 11 | தமிழ்நாடு திறந்தநிலைப் பல்கலைக்கழகம், சென்னை | 88 | 57 | 145 |
| 12 | திருவள்ளுவர் பல்கலைக்கழகம், வேலூர் | 106 | 168 | 274 |
| 13 | தமிழ்நாடு ஆசிரியர் கல்வியியல் பல்கலைக்கழகம், சென்னை | 66 | 34 | 100 |
| | மொத்தம் | 27750 | 28973 | 56723 |

## பல்கலைக்கழகங்கள்

## 2016–17ஆம் ஆண்டில் தொலைதூரக் கல்வி வாயிலாக பயிலும் மாணாக்கர்களின் எண்ணிக்கை

| வ. எண் | பல்கலைக்கழகத்தின் பெயர் | மாணவர்களின் எண்ணிக்கை | | மொத்தம் |
|---|---|---|---|---|
| | | ஆண் | பெண் | |
| 1 | சென்னைப் பல்கலைக்கழகம், சென்னை | 11,410 | 14,105 | 25,515 |
| 2 | அண்ணாமலை பல்கலைக்கழகம், அண்ணாமலை நகர் | 95,203 | 1,19,700 | 2,14,903 |
| 3 | மதுரை காமராசர் பல்கலைக்கழகம், மதுரை | - | - | - |
| 4 | அண்ணா பல்கலைக்கழகம், சென்னை | 2,996 | 2,994 | 5,990 |
| 5 | பாரதியார் பல்கலைக்கழகம், கோயம்புத்தூர் | 47,236 | 66,544 | 1,13,780 |
| 6 | பாரதிதாசன் பல்கலைக்கழகம், திருச்சிராப்பள்ளி | 5,797 | 9,331 | 15,128 |
| 7 | அன்னை தெரசா மகளிர் பல்கலைக்கழகம், கொடைக்கானல் | - | 2,796 | 2,796 |
| 8 | அழகப்பா பல்கலைக்கழகம், காரைக்குடி | 26,734 | 29,232 | 55,966 |
| 9 | மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகம், திருநெல்வேலி | 7,755 | 10,211 | 17,966 |
| 10 | பெரியார் பல்கலைக்கழகம், சேலம் | 37,000 | 30,000 | 67,000 |
| 11 | தமிழ்நாடு திறந்தநிலைப் பல்கலைக்கழகம், சென்னை | 13,082 | 13,279 | 26,361 |
| 12 | திருவள்ளுவர் பல்கலைக்கழகம், வேலூர் | - | - | - |
| 13 | தமிழ்நாடு ஆசிரியர் கல்வியியல் பல்கலைக்கழகம், சென்னை | - | - | - |
| | மொத்தம் | | | |

# அமைப்பு முறை வரைபடம்

- முதலமைச்சர்
- அமைச்சர் (உயர்கல்வி)
- தலைமைச் செயலாளர்
- முதன்மைச் செயலாளர் (உயர்கல்வி)


## துறைகள்

- தொழில்நுட்பக் கல்வி இயக்ககம்
- கல்லூரிக் கல்வி இயக்ககம்
- தமிழ்நாடு ஆவணக் காப்பகம்
- தமிழ்நாடு மாநில உயர்கல்வி மன்றம்
- தேசிய உயர்கல்வித் திட்டத்திற்கான மாநில திட்ட இயக்குநரகம் (RUSA)
- அறிவியல் நகரம்
- தமிழ்நாடு அறிவியல் மற்றும் தொழில்நுட்ப மையம்
- தமிழ்நாடு அறிவியல் மற்றும் தொழில்நுட்ப மாநில மன்றம்
- தமிழ்நாடு அறிவியல் மற்றும் தொழில்நுட்பக் கல்வி மன்றம்
- தமிழ்நாடு மாநில உருது கழகம்


## பல்கலைக்கழகங்கள்

- சென்னை பல்கலைக்கழகம்
- அண்ணாமலை பல்கலைக்கழகம்
- மதுரை காமராசர் பல்கலைக்கழகம்
- அண்ணா பல்கலைக்கழகம்
- பாரதியார் பல்கலைக்கழகம்
- பாரதிதாசன் பல்கலைக்கழகம்
- அன்னை தெரசா பல்கலைக்கழகம்
- அழகப்பா பல்கலைக்கழகம்
- மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகம்
- பெரியார் பல்கலைக்கழகம்
- தமிழ்நாடு திறந்தநிலைப் பல்கலைக்கழகம்
- திருவள்ளுவர் பல்கலைக்கழகம்
- தமிழ்நாடு ஆசிரியர் கல்வியியல் பல்கலைக்கழகம்


## முக்கிய மாநிலங்கள் மற்றும் இந்தியாவின் மொத்த மாணாக்கர்கள் சேர்க்கை விகிதம்




## ஆதிதிராவிட மற்றும் பழங்குடியின மாணாக்கர்களுக்கான (பாலினப்படி) சேர்க்கை



# மாநில வாரியான இரட்டை முறை பல்கலைக்கழகங்கள் (2015-2016)


அருணாச்சலப்பிரதேசம்,
ஜம்மு காஷ்மீர், ஒடிசா
3%
சத்தீஸ்கர், சண்டிகர்,
குஜராத், இமாச்சல
பிரதேசம், மேகாலயா,
நாகாலாந்து, புதுச்சேரி,
சிக்கீம், திரிபுரா
2%
பஞ்சாப், உத்திரகாண்ட்
5%
அசாம், பீகார்,
அரியானா, கேரளா
6%
தமிழ்நாடு 30%
டெல்லி
8%
கர்நாடகா,
மகாராஷ்டிரா மற்றும் மேற்கு
வங்காளம்
9%
ஆந்திரப்பிரதேசம்
14%
மத்தியப்பிரதேசம்,
உத்திரப்பிரதேசம்
11%
இராஜஸ்தான், தெலுங்கானா
12%

## 2015 – 2016 ஆம் ஆண்டிற்கான முனைவர் பட்டத்திற்கான மாணாக்கர்கள் சேர்க்கை



# 2015 – 2016 ஆம் ஆண்டிற்கான
# ஆய்வியல்  நிறைஞர் பட்டத்திற்கான மாணாக்கர்கள் சேர்க்கை

